WASH BASINS



அதிக வலுவு, நீடித்துழைக்கும் குணங்களுக்கு பர்ன் வெண்ணிறமான பேஸின்கள் புகழ்பெற்று விட்டன.

சுலபமான அமைப்பு முறை, அழகிய தோற்றம். உடையாது. விரிசல் காணுது என்பதற்கு உத்திரவாதம். சுத்தம் செய்யவும், சுத்தமாகவைத்திருக்கவும் சுலபமானது.

இந்தியாவில் இந்திய ஊழியர்களைக்கொண்டு, இந்திய மூலதனத்தால் தயாரிக்கப்படுகின்றது. பர்ன் கை அலம்பும் பேஸின்கள் மிதமான விலையுள்ளவை. இறக்குமதி செய்யப்படும் சிறந்தவற்றின் ரகத்திற்கு இணையானது.

— விவரமான புத்தகம் கேட்போருக்கு இலவசம். —

BURN & CO., LTD.

ESTABLISHED 1781

12, MISSION ROW, CALCUTTA.
WORKS AT RANIGANJ AND JUBBULPORE

SAVE FOR VICTORY
BRITISH • WAR • SAVINGS MOVEMENT
ASK YOUR BANK

பர்ன் & கம்பெனி லிமிடெட்,

ஸ்தாபிதம் : 1781

12, மிஷன்ரோ, கல்கத்தா.

தொழிற்சாலை :- ராணிகஞ்சு & ஜபல்பூர்.

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:—

பம்பாய் கம்பெனி லிமிடெட், த. பெ. நெ. 109, மதராஸ்.

நாங்கள்

501

ஸ்பெஷல்

உபயோகிக்கிறோம்-ஏனெனில்

மிருகக் கொழுப் பற்றது.

501 ஸ்பெஷலைத்தவிர பிரசித்திவாய்ந்த 501 வாஷிங் ஸோப்புமுள்ளது. எல்லா வீட்டுக் காரியங்களுக்கும் தகுதியான ஸோப்பு. சதுரக்கட்டிகளாகவும், நீளக்கட்டிகளாகவும், வில்லைகளாகவும், சேவல்களாகவும் எல்லாப் பிரபலக் கடைகளிலும் கிடைக்கும். 501 ஸ்பெஷல் ஸோப்பு வில்லைக்கட்டிகள் மூன்றுவிதமாக பெட்டிகளில் பாக்கு செய்துவிற்கப் படுகிறது.

டாம்கோ விற்பனை இலாகா:
1, வாரன ரோட், பீமன்பேட்-மைலாப்பூர், மதராஸ்.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமி., டாடாபுரம் & பம்பாய்.

F S. 1949.

எம்மிடம்

கோவை புதுமலர்நிலையம்	ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
அல்லயன்ஸ் கம்பெனி	இரத்தின நாயகர் சன்ஸ்
கலைமகள்	ஜம்புநாதன்
	சங்கு
நவயுகப் பிரசுராலயம்	பதி அண்டு கம்பெனி
ஜகன்மோகினி	சக்தி

அன்பு நிலையம்

(சுவாமி சுத்தானந்த பாரதியார் நூல்கள்)

வெளியீடுகளும், இன்னும் இதர புத்தகங்களும் கிடைக்கும்.

புத்தக ஜாபிதாவுக்கு எழுதவும்.

எமது எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும். நேரில் விஜயஞ்செய்து தேவைக்கு ஆர்டர் செய்யவும். எல்லா 'மித்திரன்' ஏஜெண்டுகள் மூலமும் பெற்றுக் கொள்ளலாம்.

சுதேசமித்திரன். புத்தகசாலை,

மவுண்ட் ரோடு : : மதராஸ்.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி,
வைத்தியசாலை,
பழனி. S. I.

கர்ப்பத்தைத்தடுக்க 'ரஹாத்'

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவறாமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42,
Churchgate St., Fort, Bombay
Phone 21343.

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 44 29-11-'42 Price 2 Annas.



சென்றவார நிகழ்ச்சிகள்

ராஜாஜியுடன் பேட்டி

ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் சென்ற 20-ந் தேதி காலை டில்லியிலிருந்து திரும்பியதும் "மித்திரன்" பிரதிநிதிக்களித்த பிரத்தியேக பேட்டியில் கூறியதாவது:—

"பொய்க்காரணங்களும் புனைச்சுருட்டுகளும் ஏராளமாகப் பொங்கியிருக்கின்றன. இவை தணிவதற்குக் கொஞ்சகாலம் பிடிக்கும். பொய் நிலைக்காது. பரஸ்பர விரோதத்தினலேயே இந்தப் பித்தலாட்டங்கள் வெளிப்படையாகும். நான் இன்னும் இங்கிலாந்து செல்லப் பிரயாணச் சீட்டு கேட்கவில்லை; வதந்தி பிசகானது; மனதிலுள்ளதைக் கிளறி எடுத்து யாரோ சமாச்சாரமாகப் பிரசுரித்திருக்கிறார்கள்.

ஜனப் ஜின்னு, மாஸ்டர் தாராஸிங் இவர்களும் நானும் சேர்ந்து ஏதாவது அபாயம் செய்துவிடுவோமோ என்று முன் ஜாக்கிரதையாக எதிர்த் தாக்குதல் புகை கிளம்பியிருக்கிறது. இது வெகு சீக்கிரத்தில் அடங்கி விடும்.

ஜப்பானியருடைய பயமில்லை; இப்பொழுதிருக்கும் நிலைமையே வெகு சரி என்ற மந்திரத்தை டாக்டர் அம்பேத்கர் மூலம் இந்திய ஸர்க்கார் உபதேசித்து வருகிறார்கள். வைஸ்ராயின் தற்காலிக மந்திரிகள் இம்மாதிரியல்லாது வேறு என்ன பேச முடியும்?

பிரிட்டிஷ் உள்நாட்டு இலாகா காரியதரிசி மிஸ்டர் ஹெர்பர்ட் மாரிஸன் பாரதப் போரில் யுதிஷ்டிர அஸ்வத்தாமா கதையைப்போல் 'பொய் உண்மை' பேசுகிறார். பிரிட்டிஷ் நேசக்கட்சிக்கு ஜயம் தடைப்படாமலிருக்கவே நான் சொல்லும் யோசனை. வைஸ்ராயின் மறுதளிப்பே வெற்றிக்கு அபாயம்.

மற்றவர்கள் பேரில் குற்றம் சொல்லிப் பயனில்லை. "ஆகாது ஆகாது; என்ன பிரயோஜனம்? நான் முந்தியே சொல்லவில்லையா?' என்ற அபசகுன மந்திரத்தை நாம் விட்டுவிட வேண்டும்; அபசகுன வாக்கே தேசபக்தி என்கிற ஒரு தவறான உணர்ச்சியாக நம்முடைய நாட்டில் விஷம்போல் ஏறியிருக்கிறது."

* * * *

ஸர் ஸப்ருவின் திட்டம்

புதிய டில்லியில் சமீபத்தில் நடைபெற்ற பத்திரிகைப் பிரதிநிதிகள் கூட்டத்தில் ஸர் தேஜ் பகதூர் ஸப்ரூ தேசீய ஸர்க்காரை ஏற்படுத்துவது குறித்து தமது கருத்துக்களை வெளியிட்டார். கவர்னர் ஜெனரல் தேசீய ஸர்க்காரின் தலைவராகவிருந்து காங்கிரஸ் உட்பட எல்லாக் கட்சிகளையும் கொண்டதொரு மகாநாட்டைக் கூட்ட வேண்டுமென்று அவர் யோசனை சொன்னார்.

"கவர்னர் ஜெனரல் காங்கிரஸுட்பட எல்லாக் கட்சிகளுமுள்ள அத்தகைய மகாநாட்டைக் கூட்டும்பட்சத்தில், சட்ட மறுப்பை வாபஸ் பெறுமாறு காங்கிரஸை அவர் வற்புறுத்தலாம். அமைதி. ஸௌஜன்யம் இவற்றை முன்னிட்டு காங்கிரஸ் திட்டமாகச் சட்ட மறுப்பை நிறுத்தவேண்டும் என்பது என் அபிப்பிராயம்."

"இந்திய ஸர்க்காரை முழுதும் இந்திய மயமாக்கினல் அது தங்களுக்குத் திருப்தி தருமா?" என்ற கேள்விக்கு ஸர் ஸப்ரு பதிலளித்ததாவது:—

"இந்திய ஸர்க்காருக்குக் கிட்டும் அதிகாரங்கள் எவை? இந்தியா மந்திரியிடம் எந்த அளவுக்கு ஆதிக்கம் ஒதுக்கி வைக்கப்படும்? என்ற விஷயங்கள் தெரியாதவரையில் இந்திய ஸர்க்காரை முழுதும் இந்திய மயமாக்குவதென்பது எனக்குத் திருப்தி தராது. இந்திய ஸர்க்காரை இந்திய மயமாக்கி இந்தியா மந்திரியிடமும் அதே ஆதிக்கம் ஒதுக்கி வைக்கப்படுமாயின், அதில் நான் திருப்தி கொள்வதற்கில்லை. இந்தியப் பிரச்னையைக்கவனிக்க முற்படும் முன்பாக இந்தியா மந்திரியை வெளியேறச் சொல்ல வேண்டும். நாளை காலை இந்தியாக் காரியாலயம் எடுபட்டுவிட்டது என்று தெரிவிக்கப்படும் பட்சத்தில், நான் அதற்காக வருந்தப்போவதில்லை. இந்தியா மந்திரி போய்விடவேண்டும். பல வருஷங்களாக நான் இவ்வித அபிப்பிராயம் கொண்டிருக்கிறேன். மிஸ்டர் அமெரி இந்தியா மந்திரியான பிறகு அந்த அபிப்பிராயம் மேலும் வலுவாகிவிட்டது. இந்திய அரசியல் வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் ஸ்தாபிக்கும்படி செய்யக்கூடிய அம்சம் அது ஒன்றே. வைஸ்ராயின் நிர்வாக சபை மெம்பர்கள் கூட்டாக வேலை செய்யவேண்டும் என ஏற்பாடு செய்ய வேண்டும். இதிலிருந்து அரசியல் துறையில் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதென்றே ஏற்படும்.

யாருக்கும் பிரதிநிதித்துவமில்லாமல் நிர்வாக சபைக்குப் பரிபூர்ண அதிகாரம் அளிப்பது யதேச்சாதிகாரமாகும் என்று வாதிக்கப்படுகிறது. ஓட்டுரிமையைத் திருத்தியமைத்து சட்டசபைக்கு நிர்வாக சபை பொறுப்பாளியென்று செய்வதோ அல்லது சட்டசபையின் அமைப்பை மாற்றியமைப்பதோ சிறந்த முறையாகும். அதைவிட சிரேஷ்டமான ஏற்பாடு வேறு இருக்க முடியாது. அனுஷ்டானத்தில் நிர்வாக சபையின் தன்மையை மாற்றுவதில் கஷ்டமிருப்பின், யுத்தம் நடக்கும் வரையில் பிரிட்டிஷ் ஸர்க்காரின் பொறுப்புக்கு விடலாம். இது இரண்டாம் பட்சமாகவுள்ள சிறந்த ஏற்பாடு. பிரிட்டிஷ் ஸர்க்காரிடம் அப்பொறுப்பை

ராஜ குடும்பம்; புதிய படம்

பக்கிங்ஹாம் அரண்மனையில் இப் படம எடுக்கப்பட்டது. இதில் மன்னர் எலிஸபெத் ராணியாருடனும் இரண்டு ராஜ குமாரிகளுடனும் இருப்பதைப் பார்க்கலாம்.

எப்படி நிறைவேற்றுவது? இந்தியா மந்திரியின் ஸ்தானத்தை எடுத்து விட்டு அதற்குப் பதிலாக யுத்தம் நடக்கும் வரை பிரிட்டிஷ் மந்திரி சபையில் நிரந்தரமான ஸ்தானத்தைக் கொடுத்து வைஸ்ராயை இலாகா பொறுப்பில்லாத ஓர் மந்திரியாக நியமிக்கலாம். காமன்ஸ் சபையிலும் பிரபுக்கள் சபையிலும் அவருக்குப் பிரதிநிதிகள் இருக்கும்படிச் செய்யலாம். இந்தியா மந்திரியின் மூலமாக அப்பொறுப்பை நிறைவேற்றும் யோசனையை நான் தள்ளிவிடுவேன். வைஸ்ராய் நேரிட மந்திரி சபையுடன் விஷயத்தைக் கவனிப்பார். அவரது கருத்துக்களை இரண்டு சபைகளிலும் அவருடைய உதவிக் காரியதரிசிகள் வெளியிடுவர்.

ராஜாஜி விரும்பும் முறையில் தேசீய ஸர்க்கார் ஏற்படாவிடில் மந்திரி சபை வைஸ்ராய்க்குப் பொறுப்புள்ளதாகச் செய்ய வேண்டும். வைஸ்ராய் இந்தியா மந்திரியின் தலையீடில்லாமல் பார்லிமெண்டுக்குப் பொறுப்புள்ளவராயிருக்க வேண்டும்."

* * * *

வகுப்புக் கோரிக்கை ஜனப் ஜின்னு கண்டனம்

எல்லா வகுப்புகளுக்கும் சுய நிர்ணய உரிமை வழங்கும் திட்டத்தைப்பற்றி ஜனப் ஜின்னு சென்ற வாரம் லயால்பூரில் பஞ்சாப் மாகாண முஸ்லிம் லீக் மகாநாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்து வைக்கையில் விளக்கினார்.

லயால்பூர் உபசாரப்பத்திரங்களுக்குப் பதிலளிக்கையில் அவர் கூறியதாவது:—

சுய நிர்ணயக் கொள்கையை மிகவும் கூர்ந்து கவனிக்கவேண்டும். எல்லா வகுப்பினருக்கும் சுய நிர்ணய உரிமை வேண்டும் என்று கோரும் விஷமத்தனத்துக்குப் பொறுப்பாளிகள் எவரோ, அவர்களுக்கு தாங்கள் வேண்டுமென்றே ஜனங்களைத் தவறான வழியில் அழைத்துச் செல்வது நன்கு தெரியும். பாகிஸ்தான் விரோதிகளின் கடைசி முயற்சியாகிய மேற்படி "விஷமக் கருத்தை"ப் பற்றியே குறிப்பிட்டேன். மேற்படி கொள்கையைப் பரப்ப ஆரம்பித்தால், அரசியல் சரித்திரமும் சுய நிர்ணயத் தத்துவமும் அர்த்தமற்றதாகி விடும். ஒரு பெருங் கோஷ்டியாக இருந்தால்தான் மேற்படி உரிமையை வற்புறுத்தலாம். இந்தக் கோஷ்டி திட்டமான ஒரு பிரதேசத்தில் பெரும்பான்மையோராக இருக்க வேண்டும். தனி ராஜ்யம் ஒன்றை ஏற்படுத்தக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

* * * *

மிஸ்டர் அமெரி பதில்

சென்ற 17-ந்தேதியன்று காமன்ஸ் சபையில் மிஸ்டர் அமான் என்ற தொழிற் கட்சி மெம்பர் இந்தியா மந்திரியான மிஸ்டர் அமெரியைப் பின்கண்ட கேள்வி

கேட்டார்:—ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் இந் நாட்டிற்கு வருவதாகச் சொல்லுவதைத் தாங்கள் ஏற்று இந்தியாவின் தற்கால நிலைமைபற்றி விவாதிக்க அவரை லண்டனுக்கு வருமாறு அழைப்பீர்களா?

மிஸ்டர் அமெரி இக் கேள்விக்குப் பின்கண்ட எழுத்து மூலமான பதிலைத் தெரிவித்தார்:—இந்தியப் பிரச்னையில் உடன்பாடு ஏற்படும்படி செய்வதற்காக ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரோ, அல்லது மற்றெந்த இந்தியத் தலைவரோ செய்யும் முயற்சிகளை ஸர்க்கார் சந்தோஷமாக வரவேற்பார்கள். ஆனால் அத்தகைய உடன்பாடு இந்தியக் கட்சிகளுள் இந்தியாவில் ஏற்பட வேண்டும். இதனால் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் இந் நாட்டிற்கு வருவதில் அனுகூலமெதுவும் ஏற்படுமென்று கவர்ன்மெண்டார் கருதவில்லை. ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரை சென்ற சில தினங்களில் வைஸ்ராய் கண்டு பேசியது மிஸ்டர் அமானுக்குத் தெரியும்.

* * * *

இந்தியாபற்றி மிஸ்டர் மாரிஸன்

பிரிட்டிஷ் உள்நாட்டு மந்திரி மிஸ்டர் ஹெர்பர்ட் மாரிஸன் நேசதேசங்களுக்கு ரேடியோவில் ஒரு பிரசங்கஞ் செய்தார். இது ஜனங்கள் யுத்தம் என்பதாகக் கூறிவிட்டு மேலும் அவர் பேசியதாவது:—

இந்தியர் தங்களுக்கான அரசியலைத் தயாரித்துக்கொள்ள பிரிட்டன் இந்தியாவுக்குப் பூர்ண சுதந்திரம் அளித்திருக்கிறது. அது பூர்ண சுயேச்சையாயினும் சரியே யுத்தத்திற்குப் பின் இந்தியர் எது வேண்டுமென்றாலும் அதைப் பெறலாம். ஆனால் நேசதேசங்களின்வெற்றியைப் பாதிக்க இடையே ஒன்றும் செய்யக்கூடாது.

ஒரு அடிமை தேசத்திற்குப் பெரு நலங்களைக் கவனியாது இந்த அளவுக்கு வேறு எந்த ஆளும் தேசமாவது அளித்ததாகச் சரித்திரத்தில் கண்டதுண்டா? இதிலிருந்து நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

யுத்தத்தில் என்ன லக்ஷியங்களுடன் இறங்கினரோ அதே லக்ஷியம்தான் எதிர்காலத்திலும் பின்பற்றப்படுமென்பதற்கு இதைவிட என்ன ருஜு வேண்டும்.

* * * *

ஸர் ஸாபருல்லா கூற்று

இந்திய சமஷ்டி கோர்ட் ஜட்ஜும், அகில இந்திய முஸ்லிம் லீகின் மாஜி பிரஸிடெண்டுமான ஸர் ஸாபருல்லாகான் இந்தியப் பிரச்னைக்குப் பின்கண்ட யோசனைகளில் ஏதேனுமொன்று பரிகார மளிக்கக்கூடுமென நியூயார்க்கில் சென்ற 21-ந் தேதி தெரிவித்தார்.—(1) அகில இந்திய காங்கிரஸ் வடகிழக்கு வட மேற்குப் பிரதேசங்களில் பாகிஸ்தானை ஏற்படுத்த வேண்டுமென்று ஜனாப் ஜின்னா கோரும் கோரிக்கைக்கு இணங்க வேண்டும். (2) அல்லது முஸ்லீம்களது அச்சத்திற்கு நியாயமான ஆதார மிருக்கிறதென்று மிஸ்டர் காந்தியும் பண்டித நேருவும் அவரது சகாக்களும் ஒப்புக் கொண்டு பிரிட்டிஷாரை விலகிக் கொள்ளும்படி கேட்கு முன்பு முஸ்லிம்களுடையவும் இதர சிறுபான்மைச் சமூகங்களினுடையவும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான உடன்பாட்டைச் செய்யும்படி ஆலோசனை கூறவேண்டும்.

* * * *

கறவைப் பசுக்களை கொல்லக் கூடாது

இந்தியா சர்க்கார் இம் மாதம் 18-ந்தேதி வெளியிட்ட அறிக்கை கூறுவதாவது:—

மத்திய உணவு ஆலோசனை சபையின் முதல் கூட்டம் ஆகஸ்ட்மாதத்தில் நடந்தது. யுத்தம் காரணமாக ராணுவத்துக்கான மாமிச சப்ளைத்தேவை அதிகரித்து வருவதால் கால்நடைகளைக் கொல்லுவது அதிகப்பட்டுவருவதைப்பற்றி மேற்படி கூட்டத்தில் யோசிக்கப்பட்டது. நாட்டின் கால்நடைதனம் நிர்ந்தரமாய் அழிந்து போவதைத் தடுப்பதற்காக 10 வயதுக்குட்பட்டு திட ஆரோக்கியத்துடனிருக்கும் எருதுகளையும்கறவைப் பசுக்களையும்சினைப் பசுக்களையும் கொல்லுவது கூடாதென்று சிபார்சு செய்யப்பட்டது.

இந்த சிபார்சை இந்திய ஸர்க்கார் அங்கீகரித்திருக்கின்றனர். மேற்படி எருதுகளும் பசுக்களும் இப்போது கொல்லுவதற்காக ஏற்கப்படுவதில்லை. எதிர்கால கண்டிராக்டுகளில் அவற்றை ஏற்கக்கூடாதென்ற புதிய பிரிவு ஒன்றைச் சேர்க்கும்படி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

* * * *

பிரிட்டிஷ் மந்திரிசபையில் மாறுதல்

பிரிட்டிஷ் மந்திரிசபையில் சில முக்கியமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் யுத்த மந்திரி சபையிலிருந்து விலகி விமான உற்பத்தி மந்திரியாயிருக்கிறார்.

மிஸ்டர் ஹெர்பர்ட் மாரிஸன் யுத்த மந்திரிசபையில் ஸர் கிரிப்ஸின் ஸ்தானத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆனால், மிஸ்டர் மாரிஸன் மேலும் உள்நாட்டு மந்திரி பதவியை 'வகித்து' வருவார்.

விமான உற்பத்தி இலாகாவில் ஸர் கிரிப்ஸுக்கு வேலை அதிகமாயிருக்குமாதலால்,அவர் யுத்த மந்திரி சபையில் இருக்க விரும்பவில்லையெனச் சொல்லப்படுகிறது.

அந்நியநாட்டு மந்திரியான மிஸ்டர் ஈடன் அப்பதவியுடன் காமன்ஸில் ஸர்க்காரின் பிரதம அங்கத்தினராகவுமிருப்பார்.

இதுவரை விமான உற்பத்தி மந்திரியாக இருந்த கர்னல் லிட்டிலின் வாஷிங்டனில் ஸப்ளை விஷயங்களைக்கவனிக்கும் மந்திரியாயிருப்பார்.

லார்டு கிரான்போர்னுக்குப் பதிலாக கர்னல் ஆலிவர் ஸ்டான்லி காலனி மந்திரியாகவும், லார்டு கிரான்போர்ன் லார்டு பிரிவி ஸீலாகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். லார்டு கிரான்போர்னுக்கு யுத்த மந்திரி சபையில் ஸ்தானம் இல்லை.

சித்திரமும் சிருங்காரமும்

"ஸர் ஸையது அஹமது"

ஸ்வஸ்திக் பிக்சர்ஸார் ஸர் ஸையது அஹமதின் வாழ்க்கையைச் சிறிய படமாக பிடித்திருக்கின்றனர். சென்ற மாதம் இந்தப் படம் பம்பாயில் பத்திரிகைப் பிரதிநிதிகளுக்குக் காட்டப்பட்டது.

இந்தப்படத்தில் க்வாஜா அஹமத் அப்பாஸ், ஸர் ஸையது அஹமதாக நடித்திருக்கிறார்: மிகவும் நன்றாக நடித்திருக்கிறார் என்பதே பார்த்தவர்களுடைய ஒருமித்த அபிப்பிராயம். இம் மாதிரி நாட்டின் பொது வாழ்வில் பெரும் பங்கெடுத்துக் கொண்ட பிரபலஸ்தர்களது ஜீவியத்தைப் படம் மூலம் காட்டுவது மிகவும் பாராட்டுக்குரியதாகும். ஸர் ஸையதின் ஜீவியம் சிறப்பு மிகுந்தது; இந்தியாவில் அலிகார் சர்வகலாசாலையைப்பற்றி அறியாதவரே கிடையாது: அதற்குக் காரண புருஷர் ஸர் ஸையது அஹமது தான்! இதை ஸ்தாபிக்க அவர் செய்த பொருட் செலவும் அவருக்கேற்பட்ட தேக சிரமும் மஹத்தானவை.

இந்தப் படத்தின் நீளம் 1260 அடிகள்தான்! இதற்குள் க்வாஜா அஹமத் அப்பாஸ் பெரியார் வாழ்ந்த விதத்தையும் அவர் ஆற்றிய தொண்டையும் அதிகத் திறமையுடன் எடுத்துக் காட்டியுள்ளார். சுமார் 40-ஆண்டுகளுக்கதிகமாகவே ஸர் ஸையது சேவை புரிந்தார். சர்வகலாசாலைக்காக அவர் போல் பணம் சேகரிப்பது பிறரால் சாத்தியமில்லை. இதுமட்டுமல்ல: ஒரு சாரார் இவரது முயற்சியை வெகுவாகக் கண்டித்தனர்; புதுப் பழக்கத்தை ஆரம்பிப்பதால் விபரீதமே விளையும் என்று வாதித்துப் பார்த்தனர்: வேறு ஒருவர் மட்டும் ஸர் ஸையதின் ஸ்தானத்தில் இருந்திருந்தால் "செய்தது போதும்" என்று மன வருத்தத்துடன் விலகியிருப்பார்.

ஆனால் ஸர் ஸையது எடுத்து முயற்சியிலிருந்து வழுவவில்லை: பிடிவாதமாகத் தொடர்ந்து நடத்தினார்: எதிர் பார்த்த பலன் சித்திப்பதைக் கண்டார். இந்த அரும் சேவையைச் சித்திரத்தில் காணும்போது எவரது உள்ளம் தான் உணர்ச்சியுடன் ததும்பாது? எவருக்குத்தான் கண்ணீர் ப்ரவாகம் ஏற்படாது?

இந்தப் படத்தின் கதையை எழுதியவர் க்வாஜா அப்பாஸ் அஹமத்தான்: இது தவிர படத்தையும் அவரே டைரக்ட் செய்தார். மொத்தத்தில் இது சிலாகிக்கத் தக்க முயற்சி என்பதில் சந்தேகமில்லை.

* * * *

நவயுக சித்ர படம்

"பஹ்ரி மங்கள செயர்" என்ற நவயுக சித்ரபடத்தில் ஸ்நேஹப் ப்ரபாவும் ஷாஹு மோடக்கும் நடிக்க ஏற்பாடாகியிருக்கிறது. "எப்போதும் தங்களுடையது" என்ற படத்திலும் ஸ்நேஹப்ரபாவுக்குத்தான் முக்கிய ஸ்தானம் வழங்கப்பட்டிருக்கிறது.

* * * *

டுஷ்யர் முன்னேற்றம்

ஸ்டாலின்கிராடுக்கு வடமேற்கேயும், தென்மேற்கேயும் ரஷ்யர் எதிரிகளை நவம்பர் 22-ந் தேதி முன்னேறித் தாக்க ஆரம்பித்தனர். நகருக்கு வடமேற்கே 120 மைல் தூரத்திலுள்ள ஸிராபிமோவிச் பிரதேசத்தில் 20 மைல் அகலமுள்ள போர் முனையில் விரோதி படை வரிசைகளைக் குலைத்துக்கொண்டும், தெற்கில் 15 மைல் தூரத்திலும் ரஷ்யர் முன்னேறினர். 3 தினங்களில் 40 முதல் 50 மைல் முன்னேறி இருக்கின்றனர்.

டான் நதியின் கிழக்குக் கரையிலுள்ள காலாச் நகரையும், பிரிவுமின்ஸ்காயாஸோவ்ட்ஸ்க் ஸ்டேஷனையும், அப்கோன்ராவ் நகரையும், ஸ்டேஷனையும் ரஷ்யர் வசப்படுத்திக்கொண்டனர்.

* * * * *

பெங்காஸி நேசப்படை வசம்

இம் மாதம் 20—ந் தேதியன்று வெளியிடப்பட்ட கூட்டு யுத்த அறிக்கை கூறுவதாவது:—

நேற்று காலை நமது படைகள் பெங்காஸியை வசப்படுத்திக் கொண்டன. 8—வது பிரிட்டிஷ் படையின் முன்னணித் துருப்புகள் அகிடா பியாவுக்கருகில் எதிரிகளுடன் போராடின. கால நிலை பிரதிகூலமாக இருந்ததனால் நேற்று ஸிரினைக்கா மீது விமானங்கள் வேலைசெய்ய முடியவில்லை ஸிஸிலியிலுள்ள விமானக் கூடங்கள் மீது சென்ற 19—ந் தேதி வெற்றிகரமாகக் குண்டுகளை விசுனோம்.

* * * *

ட்யுனீஸியாவில் போர்

"இப்போது ஜெர்மனியர் ட்யுனீஸியாவில் பெருவாரியான விமானப் படைகளுடன் நன்கு அரண் செய்துகொண்டிருக்கிறார்கள். அங்கிருந்து அவர்களை விரட்டக் கடும்போர் புரிந்தாக வேண்டும்." என்று வட ஆப்பிரிக்காவிலுள்ள நேச அதிகாரிகள் அறிவிக்கின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவிப்பதாவது:—"கடற்படைத் தளமான பிஸர்டாவை நோக்கி முன்னேறும் பிரிடிஷ் படை ஒரு ஜெர்மன் டாங்கிப் படையை விரட்டியடித்தது. எதிரிகளுக்குச் சேதம் அதிகம்.

நேச விமானங்கள் ஜெர்மன் விமானப் படைக்குப் பெருஞ் சேதம் விளைத்திருக்கின்றன."

சீவக சிந்தாமணி—23.



திரிபன்றி யந்திரம்

★

—வ. வேணுகோபாலன்—

எழுதியது

★

சீவகன் முதலியவர்கள் விதைய நாட்டை நோக்கிக் குதிரைகளை விரைவாகச் செலுத்தினா. எருமைகள் சொரிந்த பாலை அன்னமும் நாரையும் பருகி வளரும் மருத நிலக் காட்சிகளைக் கண்டு நடந்தனர். சங்குகளும், வலம் புரிகளும் சலஞ்சலமென்ற முத்துக்களும் நிறைந்த நெய்தல் நிலக்காட்சிகளையும், முல்லை மணம் கமழும் முல்லை நிலக் காட்சிகளையும் கண்டு சென்றனர். அருவி ஒழுகும் மலைகள் சூழ்ந்த குறிஞ்சி நிலத்தையும் கடந்து சென்றனர். அவற்றிற்கு அப்பால் உள்ள, தீயைக் கக்குகின்ற பாலைவனத்தையும் கடந்து ஓர் நதிக் கரையில் தங்கி இளைப்பாறினர்.

அருகில் இருப்பது விதைய தேசமே, என்று வழிப்போக்கரால் அறிந்தனர். உடனே அவ்விடத்தை நோக்கி விரைந்து போனார்கள். விதைய தேசத்தின் எல்லையை அடைந்ததும் ஒரு சோலையில் தங்கினர். சீவகன் வந்திருப்பதை கோவிந்தராசனுக்கு உணர்த்தி வருமாறு ஒரு வீரனைத் தோழர் அனுப்பினர். கோவிந்தராசனிடம் அவ்வீரன் சென்று, 'சீவகன் சோலையில் தங்கியிருப்பதை' அறிவித்தான். வீரன் மொழியைக் கேட்டுக் கோவிந்தராசன் முதலியவர் சீவகனைக் காண ஆவல் கொண்டனர்.

"தேசம் முழுவதும் அலங்காரம் செய்க. இடங்கள் தோறும் வில்லைப்பிடித்த விரல்கள் போல் நெருங்கி நின்று சீவகசாமியை எதிர் கொள்க" என்று கூறி ஓலையில் எழுதிக் கையெழுத்திட்டுக் காரியப் பெயரை (காரியஸ்தர்) ஏவினான். உடனே அவர்கள் சென்று நாட்டினர்க்கு அரசன் கட்டளையை அறியச் செய்து ஆவனவற்றைப் பார்த்தனர்: நகரமக்கள் சீவகனை வரவேற்பதற்கு மாளிகை தோறும் அலங்கரித்தனர். வாழையும் கமுகும் நட்டனர். பச்சைத் தோரணங்களும் பூமாலைகளும் தொங்கவிட்டனர். அரசன் பரிவாரத்தினர், பல வகைச் சிறப்புக்களுடனும் யானை முதலிய படை வரிசையுடனும் சீவகனிருக்கும் சோலையை அடைந்து அவனை எதிர் கொண்டு அழைத்தனர்.

அரசன் அனுப்பிய பெண் யானையின் மீது சீவகன் ஏறிக் கொண்டான். இரு புறமும் மகளிர் நின்று சாமரை வீசினர்: பனி நீரும் சந்தனமும் தெளித்தனர். யானை மீது செல்லும் தேவகுமாரன்போல் சீவகன் சென்றான். அவன் பின் தோழர் முதலியவர் சென்றனர். வீதி வழியே செல்லும் சீவகனைக் கண்டு ஆரவாரித்து நகரமாந்தர் வரவேற்றனர். "திருவே வருக, திருமால் வருக" என்றனர். "காமன் வருக காளைவருக" என்றனர். "வித்தியாதர குமரன் வருக, வரை பிளந்த முருகன் வருக" என்றனர். "அருகன் வருக, வீரன் வருக" என்றனர் நகரமக்கள். இவ்வாறு வாழ்த்தி வணங்கினர். சீவகன் மேனி அழகைக் கண்டு மகளிர் மயங்கிப் பின் சென்றனர். சீவகனைச் சுமந்து செல்லும் பெண் யானையைக் கண்டு "பெண் யானையே, சீவகசாமியின் அழகை நாங்கள் கண்களால் காணும்படி மெல்ல நடந்து செல். விரைந்து செல்லாதே. 'பெண்மைக்கு அழகு மென்னடை' என்பதை அறியாமல் விரைந்து போகின்றாய்; நீ உன் கணவனை இழப்பாய்" என்று கூறிப் பிதற்றினர். சீவகன் பரிவாரம் சூழ, வீதியைக் கடந்து அரண்மனைக்குள் சென்றான். அரண்மனையிலுள்ள பட்டத்துத் தேவியர் சீவகனைக் கண்டு, "இத்தகைய மகனை யாம் பெற்றோமே" என்று கூறிப் புகழ்ந்தனர். அப்போது கோவிந்தராசன் மகள் இலக்கணை தன் தோழியுடன் சீவகன் அழகைக் காதலோடு நோக்கி நின்றாள். தன்னை நோக்கும் இலக்கணையை யானையின் மீதிருந்த சீவகனும் நோக்கினான்.

யானையினின்றும் இறங்கி அரண்மனைக்குள் புகுந்தான். தன் மாமன் கோவிந்தராசனை வணங்கி நின்றான். மன்னன் தன் மருமானை அன்போடு நோக்கி, தழுவிக்கொண்டான். அன்பு மிகுதியால் மனம் பொருமிக் கண்ணீர் பெருக அழுதான். சீவகனை அணைத்துக்கொண்டு வேந்தன் அழுவதைப் பார்த்து மற்ற மகளிரும் ஆடவரும் அழுதனர். சச்சந்தனை நினைத்து எல்லோரும் வாய் விட்டுப் புலம்பினர். அதைக் கண்ட விசயை அங்கு வந்து அவர்கள் அழுகையை மாற்றினாள். அரசன் மன அமைதி அடைந்து பேசாதிருந்தான். தாயையும், மற்ற பட்டத்துத் தேவியரையும் சீவகன் வணங்கினான். பின்னர் அரசனுடன் அளவளாவி இருந்தான்.

தனியாக இருந்து ஆலோசனை செய்வதற்கு எண்ணி, சித்திர கூடத்திற்குச் சென்று கோவிந்தராசன் அமர்ந்தான். அரசனுடன் ஆலோசனை செய்வதற்கு அவன் மந்திரியருடன் சீவகனும் சென்று அமர்ந்தான். கட்டியங்காரனோடு போர் செய்து மடிய எண்ணிய கோவிந்தராசன் தன் மகன் ஸ்ரீதத்தன் என்பவனிடம் தன் அரசாட்சியைத் தந்து முடி புனைவித்தான்.

பின்னர், சீவகனுக்கு அரசனுக்குரிய ஆடையாபரணங்களை அளித்துச் சிறப்பு செய்தான். அவன் தோழர்களுக்கும் தக்க சிறப்புகளைச் செய்தான். நந்தட்டனுக்கும் சீவகனுக்குச் செய்தது போன்ற சிறப்புகளைச் செய்தான். கட்டியங்காரன் தனக்கு விடுத்த ஓலையைச் சீவகனுக்குப் படித்துக் காட்ட எண்ணி, தன் அந்தரங்க ஊழியன் விரிசிகனிடம், "கட்டியங்காரன் நம் கருத்தை அறிய எண்ணி வஞ்சகமாக விடுத்த ஓலையை நீ வாசிப்பாயாக" என்றான். உடனே, விரிசிகன், ஓலையை உறையினின்றும் எடுத்துப் படிக்கலானான்: "கட்டியங்காரன் ஓலையை விதையத்தார் வேந்தன் காண்பானாக, சச்சந்தனை நான் கொன்றதாய் உலகில் செய்தி பரவியுள்ளது. என் மீது கிடக்கின்ற பழியைத் தாமும் உண்மையென்று கொண்டீர். இனி, என் உயிர் போகும்படி, என் நெஞ்சைப் பிளந்து காட்டினாலும், நம்புவார் இல்லை. ஆனாலும் யானாகவே சொல்கிறேன். அதாவது, என் பட்டத்துயானை, அசனிவேகம் யானைக் கூட்டம் அஞ்சும்படிப் பாய்ந்தது; தேர்களை அழித்தது; தந்தத்தால் குதிரைத் தொகுதிகளைக் குத்தியது; வீரர் மடியும்படிக் கோபித்துத் துன்பம் செய்தது; அதைக் கண்டு பொறாமல், சச்சந்தன், நூற்றுவர் பாகர்களை ஏவினான். அசனிவேகம் அந்தப் பாகர்கள் நூற்றுவரையும் கொன்றது. பின்பு, அரசன் கோபாவேசனாய்த் தானே சென்று, அசனிவேகத்தை அடக்கினான். அடக்கிய பின் அதைக் கட்டுத் தறியில் கட்டப் போகையில், அசனிவேகம் யமன் போல் முழங்கித் தள்ளி, அரசனைக் கொன்றது. வேந்தன் இறந்த தன்மை இதுவே. இனி, கோவிந்தராசன் உலகம் கூறும் பழியை நம்பாமல் யான் சொல்லியதையே நம்பி, இங்கு வந்து யாவற்றையும் அறிந்தால், எனக்குப் பழியும் நீங்கும். தமக்கு யான் என் உயிரையும் தருவேன். 'இனி, தாமே, எனக்கு இறைவன்; ஆதலால், இந் நாட்டின் உரிமையை விரும்பி விரைந்து வருக"

இவ்வாறு விரிசிகன் வாசித்தான். அதைக் கேட்ட சீவகன், இடியின் முழக்கத்தைப் போல் வாய் திறந்து நகைத்தான். கோவிந்தராசனைநோக்கி, "மாமா, கட்டியங்காரன், யமனைத் தானே, கையால் அழைக்கின்றான். கட்டியங்காரனைக் கொல்வதற்குக் காரணமான உபாயம் இது போல் வேறு ஒன்று இல்லை" என்றான்.

கோவிந்தராசனும் நகைத்து, "சீவக, கட்டியங்காரன், நம்மை, வஞ்சனையால் கொல்லக் கருதினான். ஆதலால், நாமும் அவனை, வஞ்சனையால் கொல்லக் கருதினோம்" ஆதலால், இந்நட்டை முதலில் கூறி, பின்பு படை கூடும்படி முரசறைவிக்க வேண்டும்" என்று சொன்னான். உடனே மந்திரியர் முரசறைவானிடம் கூறினர், முரசறைவான் அரசன் கூறிய செய்தியை நாட்டினர்க்குக் கூறலானான்.

"நம் வேந்தன், பகையை விட்டுக் கட்டியங்காரனோடு உறவானான். ஆதலால், நெல்லும் பொன்னும் இரண்டு நாட்டிலும் வழங்குவீராக" என்று முதலில் கூறிப் பின்பு, "வீரர்கள் யானை, குதிரை, தேர் முதலியவற்றுடன் நகரில் நாளைக்குள் கூடுக" என்று கூறி முரசறைந்தான்.

அரசன் கட்டளைப்படி, மறுநாள் காலையில், ஆங்காங்கு உள்ள சேனைகள், நகரில் ஒன்றாகக் கூடின. சங்குகளும், மத்தளமும், முரசமும் இடைவிடாமல் முழங்கிக்கொண்டிருந்தன. நால்வகைச் சேனைகளும் வரிசை வரிசையாய் அணிவகுத்து நின்றன. பதினாயிரத்து அறுநூறு யானைகள், ஒருபுறம் நின்றன. தீக்கு அஞ்சாத யானைவீரர்கள்,ஈட்டி, வேல் முதலியவறறுடன் வரிசையாக நின்றனர். மாளவம், சிந்து, பாரசூரவம், பல்லவம், மாரட்டம் முதலிய இடங்களி

விருந்து பலவகைக் குதிரைகள் வந்திருந்தன. இருபதினுயிரத்து அறுநூறு, குதிரைகள் பூண்ட தேர்கள், ஒரு புறம் நின்றன. நான்கு நூருயிரம் வீரர்கள் வில், வாள் முதலியவற்றுடன் ஒரு புறம் நின்றனர்.

சேனைகள் வந்து சேர்ந்தமையை அறிந்த அரசன் அவற்றைக் காண்பதற்கு எண்ணி, அரண்மனை மேல் மாடத்துச் சியில் ஏறிக் குடை நிழலில் நின்று பார்த்தான். சேனுகிபதி, அருகில் நின்று படைகளின் வகையையும் எண்ணிக்கையையும் அவற்றின் வன்மையையும் கூறிக் காட்டினன். கோவிந்தராசன் படைகளைக்கண்டு, ஊக்கத்துடன் கீழ் இறங்கினுன். சிவகன் முதலியவர்க்கு வேண்டியவற்றை கூறிவிட்டுத் தன் யானையாகிய ஐராவதத்தின் மேல் ஏறிக்கொண்டான். உடனே எல்லோரும், "வெல்க. வெல்க" என்று வாழ்த்தினர். சிவகன் முதலியவர்கள் அவரவர்கள் ஊர்திகளில் ஏறிக் சொண்டனர். கோவிந்தராசன் சிவகன் முதலியவர்களுடன் படைகள் சூழ. விதையநாட்டை விட்டுப் புறப்பட்டான். சங்குகள் முழங்கின. முசங்கள் ஆர்த்தன. வழியில் 'பறவைகளும் நிமித்தமும் தன்மையை அறிவித்தன. கோவிந்தராசனுடைய வலக்கண் துடித்தது. ஏமாங்கத நாட்டை நோக்கிப் படைகள் மிக விரைவுடன் சென்றன. படைகளின் தொகுதியையும் ஆரவாரத்தையும் கண்டு காட்டிலுள்ள விலங்குகளெல்லாம் அஞ்சி ஓடின. மயில்கள் ஓடுதலாலும் மான்கள் ஓடுதலாலும் படைக்கு அஞ்சி காடும் மலையும் வேறிடம் குடிபோவண, போன்றன. படைகள் காடுகளையும் மலைகளையும் கடந்து ஏமாங்கத நாட்டை அடைந்தது. உடனே கோவிந்தராசன் படைகளுடன், இராசமாபுர நகரின் மதிலின் புறத்தே தங்கினுன்.

கட்டியங்காரனுடைய அரண்மனையில் தீயசகுனங்கள் தோன்றின அவன் மனைவியர்களின் வலக்கண்கள் துடித்தன. தீய கனவுகளைக் கண்டு அவர்கள் மனங்கலங்கினர். கட்டியங்காரனுடைய மேனி ஒளி மாறுபட்டது. நடுப்பகலில் அரண்மனையில் கோட்டான்களும் ஆந்தைகளும் குழறின.

கோவிந்தராசன் தன் நாட்டிற்கு வந்திருப்பதை அறிந்த கட்டியங்காரன் உவகை கொண்டான். 'கோவிந்தராசனை வஞ்சகத்தால் கொன்று 'அவன் நாட்டையும் கைப்பற்றலாம்' என்று அகமகிழ்ந்தான். உடனே கோவிந்தராசனுக்குச் சிறப்புச் செய்பவன்போல் நடித்து யானைகள் இருநூறும், தேர்கள் நூறும், குதிரைகள் 'ஆயிரமும் வீரர் வசம் அவனுக்கு அனுப்பினுன். கட்டியங்காரன் வஞ்சனையோடு அனுப்பித்த வரிசையைக் கண்டு கோவிந்தராசனும் அவனுக்குச் சிறப்புச் செய்ய நினைத்தான். கட்டியங்காரன் அனுப்பியதற்குச் சமமாகத், தன் யானைகளில், வாரி மணாளன் என்னும் யானையையும் தேர்களில் விசயம் என்னும் தேரையும் குதிரைகளில் பவனவேகம் என்னும் குதிரையையும் அவனுக்கு அனுப்பினுன், கட்டியங்காரனுடைய பெரும் படை தன்னுடைய சிறு படைக்கு ஒப்பாகும் என்பது தோன்ற, கோவிந்தராசன் சிறப்புச் செய்தான். அதை அறியாத கட்டியங்காரன், 'யான் அனுப்பியவற்றைக்காட்டிலும் இரட்டித்த சிறப்புடையனவற்றைக் கோவிந்தன் அளித்தான்' என்று மகிழ்ந்தான்.

கோவிந்தராசன், கட்டியங்காரனோடு நட்புடையவன்போல் இருந்து அன்பு (சிவகன்) என்னும் கத்தியால் அவன் உயிரை வாங்குதற்கு, வஞ்சனையால் ஓர் உபாயம் செய்தான். ஒரு சக்கரத்தின் உள்ளே. மூன்று பன்றிகள் திரிகின்றதாகிய திரிபன்றி யந்திரம் ஒன்றைச் செய்வித்தான். பின்னர், "சக்கரத்தில் திரிகின்ற மூன்று பன்றிகளையும் எய்தவன், என் மகள் இலக்கணைக்குக் கணவன் ஆவான்" என்று கூறி முரசறைவித்தான். அயல் நாடுகளுக்கும் அச் செய்தியை வீரர்களைக் கொண்டு அறிவித்தான். சில நாட்களில், அரசரும் வீரரும் படையுடன் இராசமாபுரத்தின் மதிற்புரத்தே வந்து கூடினர். பதுமையின், ஸகோதரன், உலோகபாலனும், கனகமாலையின் ஸகோதரர்களாகிய விசயன் முதலியவர்களும் வந்து சேர்ந்தனர். விலலையும், அம்பையும், தாங்கி, அரசரும் சக்கரத்தினுள்ளே திரியும் பன்றிகளைப் பார்த்துத் திகைத்து நின்றனர். திரிபன்றி யந்திரத்தின் தன்மையைப்பற்றி பலவாறு தமக்குள் பேசிக்கொண்டனர். சிலர், அம்பால் எய்யத் தொடங்கினர். சிலர் வில்லைக் கையில் பிடித்து அழகு பார்த்தனர்.

வினிதை நாட்டு மன்னன் முதலில் அம்பை எய்தான்; அம்பு, பன்றிமீது படாமல் கீழே வீழ்ந்தது. அத்தினபுரத்தரசன் வன்மையுடன் ஓர் அம்பை எய்தான். அவ்வம்பு, பன்றிமீது தைக்காமல் வேறிடம் சென்றது. காம்பிலி நாட்டு மன்னன், மிக்க வீரத்துடன், பன்றியை வீழ்த்துவதற்குச் சக்கரத்தில் ஏறினுன்; உடனே அதன் வேகம் தாங்காமல் தலை கீழாய் பூமியில் விழுந்தான். கோசல நாட்டரசன் எய்த அம்பு ஆகாயத்தில் சென்று மறைந்தது. அவந்தி மன்னன் வில்லை எடுத்து வளைத்ததும் வில் முறிந்தது. கலிங்க மன்னன் எய்த அம்பை, ஒரு பன்றி விழுங்கியது, வாரணவாசி மன்னன் எய்த அம்பு, பன்றிமீது பட்டும் படாமலும் வீழ்ந்தது. போதன புரத்து மன்னன் சக்கரத்தில் ஏறியதும் கண் சுழன்று வீழ்ந்தான். பாண்டியன் எய்த அம்பு பன்றிமீது பட்டு முறிந்தது. விசயன், வில்லை வளைத்ததும் அது முறிந்தது; வேறு வில்லை எடுத்து வளைத்ததும் நாண் அறுந்தது.

இவ்வாறு பல மன்னரும் வீரரும் மிக முயன்றும் பன்றியை வீழ்த்த இயலாதவராயினர். ஆறு நாட்கள் இவ்வாறு கழிந்தன.

அடுத்த வாரம் :—

கட்டியங்காரன் வீழ்ச்சி

நவநாகரீகம்

★

ஒரு வளையல்

★

காசினி எழுதியது

* * * 'நேற்று சரஸா ஒரு வளையல் போட்டுக் கொண்டு வந்திருந்தாளே! நீங்கள் கவனித்திர்களோ?' என்று பங்கஜம் கேட்டாள்.

"இல்லையே? அதில் என்ன விசேஷம்?" என்ருள் மாலினி.

"புது தினுசாக இருந்தது. பச்சை வளையல் என்று முன் நாளிலே கண்ணுடி வளையல்களுக்குத் தங்கம் கட்டிப் போட்டுக்கொள்ளுவார்களே? அந்த தினுசாக இருந்தது. சிங்க முகத் தோடா மாதிரியில் தங்கம் கட்டி இருந்தது. கண்ணுடி வளையலும் இல்லை; ஒருவித லேசான பச்சை நிறமாக இருந்தது. பார்வைக்கு உருண்டையாகப் பட்டு வளையல் மாதிரி இருந்தது. ஆனுல் கண்ணுடிப் பட்டு வளையலைவிட எவ்வளவோ நன்ருயிருந்தது. இதை எனக்குச் சரியாகச் சொல்லத் தெரியலை!" என்று தன் நீளமான வர்ணனையைப் பங்கஜம் முடித்தாள்.

"அது என்ன அதிசய வளையல்? நீங்கள் பார்த்திர்களோ?" என்று நளினுதேவி என்பக்கம் திரும்பினுள்.

"அது விலை பெற்ற 'ஜேட்' வளையல்; சரஸா தகப்பனுர் எங்கேயோ மேல் நாட்டில் வாங்கி வந்தாராம். ரொம்பவும் நேர்த்தியாகத்தான் இருக்கும், கிடைப்பது சிரமம்" என்றேன்.

"அப்படியா? நான் எப்பாடு பட்டாவது இவ்வித வளையல் ஒரு ஜதை செய்து கொள்ளப் போரேன்" என்று மாலினி தீர்மானமாகச் சொன்னுள்.

'வளையலைப் பார்க்காமலே முடிவு செய்து விட்டாயே? ஒரு வேளை அது உனக்குப் பிடிக்காவிட்டால்! அப்புறம்—!" என்று நளினுதேவி கூறிக் கொண்டிருக்கும் போதே:—"அபூர்வமான பொருள் என்ருல் ஏன் பிடிக்காமல் போகும்? நன்ருத்தான் இருக்கும்!" என்று மாலினி குறுக்கிட்டாள்.

ஆனுல் லேசில் அகப்படாத பொருள் என்று மட்டும் இந்த வளையல் விஷயத்தில் திருப்திப்பட வேண்டும் என்றில்லை. வாஸ்தவத்திலேயே அது ஒரு நாசூக்கான தோற்றத்துடன் அழகாகத்தான் இருக்கிறது.

ஒரு கரை

'கமலி கட்டியிருந்த புடவை ரொம்பவும் நன்ருயிருந்ததில்லையா?" என்ருள் மாலினி.

'சட்டை, புடவை எல்லாமே ஜோராக இருந்தது! கண் முன்னுல் நிற்கிறது!" என்ருள் நளினுதேவி.

ஆவலுடன் பங்கஜம் என் பக்கம் திரும்பினுள். கமலி ஆழ்ந்த கறுப்பு நிற 'ஜார்ஜெட்' புடவை கட்டி இருந்தாள். இதன் ஓரத்துக்குச் சாண் அகலத்துக்கு சரிகைக் கரை வைத்துத் தைத்திருந்தது. நல்ல கனமான கரை; இதனுல் புடவை அப்படியே நிறுத்தினுல் பொன் அழகாக நின்றது. வெல்வடீன் சட்டை; இதுவும் கறுப்பு நிறம்தான். அங்காங்கே சரிகை நக்ஷத்திரங்கள் போட்டிருந்தன. ஆடம்பரமே இல்லாமல் வெட்டித் தைத்திருந்தது. புடவை மிகவும் மெல்லிய 'ஜார்ஜெட்' தான். ஆனுல், நல்ல கனமான கறுப்புப் பட்டில் அவள் உள் பாவாடை கட்டி இருந்தாள். மொத்தத்தில் புடவையும், சட்டையும் அவளுக்கு ஒரு வித கம்பீரத்தோற்றத்தைக் கொடுத்தது! கனத்த கரை வைத்துத் தைத்தால் இப்படிச் சீராகக் கொசவம் நிற்கும் குணம் 'ஜார்ஜெட்'டுகளுக்கு உண்டு.

மிளகுக் கூட்டு

பிஞ்சு வெள்ளரிக்காய், அல்லது புடலங்காயைச் சிறிய் துண்டுகளாக நறுக்கி உப்பு மட்டும் போட்டு நன்ருக வேக வைத்துக்கொள்ள வேண்டும். இறக்கும் சமயத்தில் காரம் வேண்டிய அளவுக்கு மிளகு இரண்டு, ஜீரகம் இரண்டையும் ஒன்றிரண்டாகப் பொடிசெய்து கொஞ்சம் நெய்யில் லேசாக வருத்துக் கூட்டில் போடவேண்டும். கடுகு, கறுவேப்பிலை நெய்யில் தாளித்துப் போட்டு, எல்லாம் சேர்ந்து கொதித்ததும இறக்க வேண்டும். இது பத்தியமாகவும் வாய்க்கு ஆரோக்கியமாகவும் இருக்கும்.



பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

ப்ரதுளை

★

"நியாயவாதி" எழுதியது

★

ஏழைக் குடும்பத்தில் பிறந்து மணிமகுடம் தரித்த மன்னவனின் மனைவியாகத் திகழ்ந்த ஒரு நங்கையின் அத்புத சரிதை இது. அத்ருஷ்டம் இருந்தால் எந்த நிலைமைக்கும் உயரலாம் என்பதற்கு அத்தாக்ஷி இந்தச் சரித்திரக் கதை.

சேற்றில் மலரும் செங்கமலத்தைப்போல் சோபித்தாள் பிரதுளை. அவள் பிறந்தது ஒரு எளிய உழவனின் குடிசையில்: அவள் வளர்ந்தது தரித்திரமோங்கிய ஒரு சிறு கிராமத்தில் ஆனுல் அவள் சௌந்தர்யம் அவளை ஒரு மகுடம் தாங்கும் மன்னனின் மகிஷியின் அந்தஸ்துக்கு யோக்கியதையுள்ளவளாக்கியது.

பொன்னணிகளும் பட்டாடைகளும் அவளது ஏழ்மைக்குக் கிட்டக்கூடியவையன்று. குடிப்பதற்குக் கஞ்சியும் உடுப்பதற்கு கந்தலும கிடைப்பதே பெரும் பாக்கியம் என்று நினைக்கும் ஏழைகளது மகளல்லவோ அவள்? ஆடைகளுக்கும் அணிகலன்களுக்கும் அவள் எங்கு போவாள்?

எனினும் அவளுக்கு சிறு பிராயத்திலிருந்தே தனது அற்புதமான எழிலின் சிறப்பைப் பற்றி சிந்தனை இருந்தது. தான் ஒரு அற்ப குடியானவனது மகளாயிருப்பினும் தன்னுடைய அழகின் மேன்மையால் தனக்கு ஒரு அரசியின் மகுடம் கிட்டும் என்ற நம்பிக்கை அவளுக்கும் பூரணமாக இருந்தது.

கிராமத்திலுள்ள இளைஞர்கள் அவளுக்கு மாலையிடப் போட்டியிட்டனர். ஆனுல் அரசி பதவி மீது கண்ணேட்டம்கொண்ட அவள் அவர்களை லக்ஷியம் செய்வாளா? ஏதோ விதியின் கொடுமையாலும் கெட்ட காலத்தின் விளைவாலும் தான் அவ்வேழ்மை ஸ்திதியில் இருந்ததாக எண்ணிய அவள் தனக்கு வரப்போகும் பாக்யத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

அக்கிராமத்திலுள்ள அந்தணன் ஒருவன் அவளது அழகையும் அறிவையும் கண்டு வியந்தான். அவளது பேச்சையும் புத்திசாதுர்யத்தையும் கவனித்த அவன் 'இவள் ராஜவம்சத்தில் பிறக்கவேண்டியவள். தவறிப் போய் குடியானவ வம்சத்தில் பிறந்தாள்' என்று எண்ணினுன். அவளது ஜாதகத்தை ஆராய்ந்த அவனுக்கு அவள் ஒரு மணிமுடி மன்னனின் மனைவியாக விளங்கப் போவது புலப்பட்டு விட்டது. அவளால் தனக்கு அனுகூலம் ஏற்படலாம் என்ற நம்பிக்கையும் அவனுக்கு உண்டாயிற்று.

உடனே அவன் அவளுக்கு அவசியமான கல்வியைக் கற்பிக்கத் தொடங்கினுன். அவளது அழகையும் அறிவையும் சிலாகித்துக் கூறிய அவன் "அம்மா! நிச்சயம் நீ ஒரு அரசியாய் பெரு வாழ்வு வாழப்போகிருய். உனது பிற்கால வாழ்வுக்கு ஏற்றபடி இப்பொழுதிருந்தே நீ நடந்து கொள்ள வேண்டும்" என்று உபதேசித்தான்.

பிரதுளையின் ஊக்கமும் நம்பிக்கையும் பெரிதாய் வளர்ச்சியுற்றன. அந்தணனது சிஷ்யையாய் அவள் சங்கீதம் நடனம் முதலியவற்றை அப்யஸிக்கலானுள். தனக்கு வரப் போகும் பாக்கியத்தை அனுபவிக்க, தான் தகுதியுள்ளவளாக இருக்க வேண்டும் என்பது அவளது கருத்து.

பிரதுளையின் அழகு பரிபூரண பக்குவத்துடன் விளங்கியது. கல்வியிலும் அவள் ஓரளவு தேர்ச்சி பெற்ருள். இனி சும்மா இருக்கக்கூடாது என்று நினைத்தான் அந்தணன். அக்காலத்தில் அப்பிரதேசத்தையாண்ட விஜய நகர மன்னனது மனைவியாக அவளை உயர்த்த வேண்டும் என்ற எண்ணம் அவன் மனதில் உதித்துவிட்டது.

அந்தணன் விஜயநகரத்துக்குச் சென்ருன். மன்னனைக் கண்டான். "அரசே! உமது அந்தஸ்துக்கு ஏற்ற ஆபரணம் ஒன்று உளது. அதை நீர் அணிய வேண்டும்" என்ருன். "அது யாது?" என்று ஆவலுடன் வினவினுன் அரசன்.

"மன்னவரீரே! எங்கள் கிராமத்தில் வசிக்கும் பிரதுளை என்ற கன்னிகையைத்தான் நான் கூற வந்தேன். அவள் அழகின் அவதாரம்! ரதிதேவியின் பிரதிபிம்பம்! அவ்வடிவழகியை மணக்கத் தகுதியுள்ளவர் தங்களை விட வேறு யாருமில்லை" என்ற பீடிகையுடன் ஆரம்பித்த அந்தணன் தனது சிஷ்யையின் சௌந்தர்யத்தை வர்ணிக்கலானுன்.

அந்தணனின் சொற்சித்திரம் பிரதுளையின் பேரழிலை அரசனுக்கு உணர்த்தியது. அம்மடமயிலாளை தனது அரண்மனைக்கு வருவித்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் அவனுக்கு உண்டாகி விட்டது. உடனே அவன் ஒரு படையை அனுப்பி பிரதுளையையும் அவளது குடும்பத்தாரையும் கொண்டு வரும்படி உத்தரவிட்டான்.

படை வீரர்களின் வருகையை உணர்ந்து அச்சம் கொண்டான் பிரதுளையின் பிதா. அவன் தனது மகளுக்கு நேரப் போகும் பெரும் பாக்கியத்தைப்பற்றி கனவிலும் அறியான். கிராமத்திலுள்ளவர்களை ஹிம்ஸிக்கும் கெட்ட எண்ணத்துடன் அரசன் படையை அனுப்பியிருப்பதாய் அவன் எண்ணினுன்:

உடனே அவன் தன் மனைவி மக்களுடன் அக்கம்பக்கத்திலுள்ள காட்டுக்கு ஓடிஒளிந்து கொண்டான். சில தினங்களுக்குப் பின் அவன் அந்த ராஜ்ய எல்லையைக் கடந்து பக்கத்து ராஜ்யமான பாமினி ராஜ்யத்தில் தனது குடும்பத்துடன் பிழைப்புக்கு வழி தேடலானுன்.

பக்ஷி பறந்து விட்ட செய்தி விஜய நகர மன்னனுக்கு எட்டியதும் பிரதுளையும் அவளது பெற்ருேர்களும் தனது ராஜ்ய எல்லைக்கு அப்பால் வசித்தைக் கேள்வியுற்ற அவன் "எப்படியேனும் அப்பெண்ணை என்னிடம் சோப்பிக்கக்கடவீர்" என்று தனது படை வீரர்களுக்கு உத்தரவிட்டான். அவர்கள் அப்பணியை சிரமேற்கொண்டு பிரதுளையைத் தேடலாயினர். அச்சமயம் பாமினி ராஜ்யத்தை ஆண்ட மகம்மதிய மன்னன் பிரோஸ் ஷா என்பவன். அவன் பராக்கிரமசாலி. அரசு புரிவதில் சாமர்த்தியம் பெற்றவன். மேலும் அவன் சிருங்கார லீலைகளில் பேரவா கொண்டவன். மங்கையர் லோலன், அவனது சரித்திரத்தை ஆராய்ந்த ஒரு மேனுட்டு ஆசிரியர். ஒரேநாளில் அவன் முன்னூறு பெண்களை மணந்ததாயும் அவனுடைய அந்தப்புரத்துக்கு ஒப்பாக வேறெதையும் கூற முடியாது என்றும் எழுதுகிருர். உலகிலுள்ள அழகிகள் அனைவரையும் தனது அந்தப் புரத்தில் கொணர்ந்து அவர்களது சல்லாப இன்பத்தை நுகர வேண்டும் என்பது அவனது லக்ஷியம். தனக்கு நாயகிகளாகக் கிடைத்த நூற்றுக் கணக்கான பெண்களது வாஸத்துக்காக அவன் பைசாபாட் என்ற இடத்தில் நதிக்கரையில் ஒரு சிருங்கார நகரத்தையையே நிர்மாணித்தான். அம் மன்மதபுரியில் சோபித்த ஸ்திரீ ரத்தினங்கள் பல தேசங்களிலிருந்து வந்தவர்கள். சர்க்கேஷியா, பாரசீகம், அரேபியா, துருக்கி, சீனு, ரஷ்யா ஐரோப்பா முதலிய இடங்களிலிருந்து சேர்க்கப்பட்ட அழகிகளின் கூட்டம் இந்திய நாட்டில் பிறந்த (அவனது) மற்ற மனைவியரது கூட்டத்துடன் சோபித்தது.

அத்தகைய அரசன் பிரதுளையின் செய்தியைக் கேட்ட பின் சும்மா இருப்பானு? அவ்வழகியின் பொருட்டு விஜய நகர படைகள் தனது எல்லைக்குள் நுழைந்து அக்கிரமங்கள் செய்தன என்ற சமாசாரம் அவனுக்குத் தெரிந்தவுடன் அவன் கொண்ட கோபத்துக்கு ஒரு அளவே இல்லை. விஜய நகர அரசன் மீது போர் தொடுத்தான். தனது படையை நடத்தி விஜய நகர ராஜ்யத்துள் புகுந்தான்.

ஒரு எளிய உழவனின் மகள் பொருட்டு உண்டான அப்போரில் பாமினி சுல்தான் வெற்றிப் பெற்ருன். விஜய நகர அரசன் அவன் கூறிய நிபந்தனைகளுக்கு உடன் படவேண்டியதாயிற்று, தனது வெற்றிக்கு பரிசாக பிரோ ஸ்ஷா தனது எதிரியின் மகளைப் பெற்றதுடன் அவளுக்கு ஸ்ரீதனமாய் பத்து லக்ஷம் மொகராக்களையும் ஏராளமான முத்துக்களையும் 100 யானைகளையும் 3000 பரிஜனங்களையும் பெற்ருன்.

சமாதானம் ஏற்பட்ட பின் பாமினி சுல்தான் தனது தலைநகரமான குல்பர்காவுக்குத் திரும்பினுன். ஆனுல் அவன் தான் நடத்திய போருக்குக் காரணமாயிருந்த பேரெழில் மங்கையை மறப்பானு? அவளை தனது தர்பாரில் கொண்டு வரும்படி உத்தரவிட்டான்.

பிரதுளை பாதுஷா முன் நின்ருள்: அவளை அவன் ஏறிட்டு நோக்கினுன். இமையாநாட்டத்துடன் அவளது சுந்தர வடிவத்தில் ஈடுபட்டன அவனது கண்கள். அவளது ரூபலாவண்ணியத்தில் ஈடுபட்டுப் பிரமிப்புடன் நின்ற அவன் சற்று நேரம் பேசும் சக்தியை இழந்துவிட்டவன் போல் தோன்றினுன்.

"ஆகா! இவளது அழகே அழகு! இவளை நான் மணக்க ஏற்றவன் அன்று. எனக்கு வயதாகிவிட்டது. இவளை நான் மணப்பது பாவமான காரியம். ஆனுல் இவள் என் மருமகளாக விளங்குவதற்கு உரியவள். எனக்குப் பின் என் மகனுடன் சிங்காதனம் ஏறவேண்டியவள்" என்று பிரோஸ் தனக்குள்ளே கூறிக்கொண்டான்.

உடனே அவன் தனது குமாரனை ஹுஸேன் இளவரசனை வரவழைத்தான்; அவ்விளைஞனுக்கு அவன் பிரதுளையைக் காட்டி, "இவளை மணக்க உனக்கு சம்மதமா?" என்று வினவினுன்.

கரும்பு தின்னக் கூலியும் வேண்டுமா? பிரதுளை ஹுஸேனுக்கு மனைவியானுள். அவளது மனோரதம் பூர்த்தியுற்றது. பிரோஸ் இறந்த பின் அவள் தனது கணவனுடன் சிம்மாஸனம் ஏறினுள்.

எனினும் அவள் அரசியாக வாழ்ந்தது சொற்ப காலமே. அவளது கணவன் திறமையற்றவன்: ஆதலால் அரசுரிமையை அவனிடமிருந்து கவர அவனது சிற்றப்பன் சதி செய்தான். அதன் பயனுய் ஹுஸேன் முடி துறக்கும்படி நேரிட்டது.

அரச பதவியை அவன் இழந்த போதிலும் அவன் வருந்தவில்லை. அழகிற் சிறந்த பிரதுளை அவனுக்கு வாழ்க்கைத் துணைவியாய் இருந்த பொழுது அவனுக்கு தேவையானது வேறு எதுவுமில்லை.

வாடா மலர்

முன் கதைச் சுருக்கம்

பாண்டிய நாட்டைச் சேர்ந்தவன் சாத்தன்: வெளி நாடுகளுடன் வர்த்தகம் நடத்தி வந்தான் அவன். ''திரைகடலோடியும் திரவியம் தேடு'' என்ற முதுரையை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தவன். யவன தேசத்திற்கு அடிக்கடி சென்று வந்தான். அவன் பார்ப்பதற்கு வசீகரத்தோற்றம் உள்ளவன்: அலக்ஜாந்திரியாவில் அவன் ஒருத்தியைக் கண்டான்: அது முதற்கொண்டு அவனது உள்ளம் அவளிடத்தே ஈடுபட்டு விட்டது. அங்கு அண்டியோகஸ் வீட்டில் தான் கொணர்ந்த பொருளை விற்க விலை பேசுகையில் அழகு மிகுந்த அந்தோனியாவை அவன் கண்டான். இருவரும் ஒரு க்ஷணம் ஒருவரையொருவர் நன்கு நோக்கினர். வெகு சீக்கிரத்தில் இருவரிடையே அந்நியோந்நியம் பிறந்து விட்டது. அவள் ஞாபகமாகவே சாத்தன் தாயகம் திரும்பினான். அவனுக்கு அவளை எப்போது மறுபடி காண்பது என்பதே ஏக்கம்: அவளுக்கு அவன் எப்போது திரும்பி வருவான் என்பதே விசாரம். மறுமுறை காதலன் வந்து அவளைத் தமிழ் நாட்டிற்கு அழைத்து வந்துவிட்டான். இதனால் அண்டியோகசுக்கு மிகவும் கோபம்; தமிழ்ப் பூண்டை ஒழித்துவிடவும் அவனுக்கு அதிக ஆசை: படையெடுக்கவும் விரும்பினான் அவன்: பணஞ் செலவழிக்க அவன் தயங்கவில்லை: இந்த சமயத்தில் அந்தோணியா சேர்க்கநாதர் கல்லானை உத்சவத்தில் கலந்து கொள்ளப்போய் தனிமையில் வேதனைப்பட்டாள். அவளுக்கு இதற்கப்புறம் நோய் கண்டது. பல வைத்தியர்கள் வந்து பார்த்தனர்: உடம்பு சொஸ்தமாகவில்லை. கடைசியில் அவ்வூர் வந்த யவன வைத்தியர் வரவழைக்கப்பட, அவர் வேறு ஊருக்குக் கொண்டுபோகப்பட வழி யுண்டு என்றார்: இந்த நிலையில் யவனர் அண்டியோகஸ் தலைமையில் தமிழ்நாட்டின்மீது படையெடுக்க ஏற்பாடு செய்திருப்பதாகச் செய்தி எட்டியது. இதைக் கேட்டதும் அரசன் சாத்தனை ராஜசபைக்கு வரவழைத்து அவனுக்குப் படைத் தலைமையை வழங்கினான்.

இதன் பின் மேலே படியுங்கள்!

5

'தம்பி, அதோ பார், கரையருகே அந்தப் படகுகள் கவிழ்ந்து விட்டன' என்றான் ஒருவன்.

''ஐயோ பாவம், யாரோ வெளி நாட்டவர் போலத் தோற்றுகிறது. ஆழந்தெரியாமல் காலையிட்டதுபோல இடத்தையறியாமல் இங்கேவந்து அகப்பட்டுக் கொண்டார்கள்'' என்றான் மற்றவன்.

''கட்டு மரத்தைச் சீக்கிரம் தள்ளு. அவர்களுக்கு ஏதாவது உதவிசெய்யலாம். என்றான் முதலில் அவர்களைப் பார்த்த பரவன்.

விடியற்காலம்; சூரியன் அப்போது உதயமாகவில்லை. ஆனால் இருள் நன்றாகப் பிரிந்துவிட்டது. இரவில் மீன்பிடிக்க நடுக்கடலுக்குச் சென்றிருந்த பரவர்கள் மெதுவாகக் கரைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

அந்தச் சமயம் கடல் கொந்தளித்துக்கொண்டிருந்தது. வானத்தே மேகம் அதிகமாகக் காணப்படாவிட்டாலும், எங்கிருந்தோ காற்று சூறாவளிபோலக் கிளம்பி வேகமாக வீசிவந்தது. 'ஹோ' என்ற இரைச்சலுடன் அலைகள் ஆள் உயரம் கிளம்பிப் படகுகளின் பக்கங்களை மோதி அசைத்தன; வெண்ணுரையுடன் திரைகளைப் பாய்போலச் சுருட்டிச் சென்றன.

பிறந்தது முதல் கடலிலேயே உழன்று வளர்ந்து உயிர் வாழ்ந்த பரவர்கள் அந்தக் கொந்தளிப்பைச் சிறிதும் லக்ஷியம் செய்யவில்லை. அவர்கள் ஏறிச் சென்ற கட்டு மரங்கள் எவ்விதத்திலும் நீருள் மூழ்கா. சிறு துடுப்புகளைக்கொண்டு அவர்கள் அவற்றைச் சுலபமாக எப்படிப்பட்ட அலையையும் தாண்டிவிடுவர். அந்தப் பக்கத்தே ஒவ்வோர் இடமும் பருவநிலையும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஆனால் அங்கே வந்து அகப்பட்டுக்கொண்ட படகுகளோ நிலைகொள்ளாமல் தத்தளித்தன. கரை சமீபத்தில்தான் இருந்தது. அதனாலேயே அலைகளின் வேகம் அதிகமாக இருந்தது. மாலுமிகள் பாய்களை அவிழ்த்துவிட்டுப் படகுகளைக் கவிழவிடாமல் தடுக்கத் தங்களாலான கூடியவரை இயன்றனர். அவர்கள் முயற்சி பலிக்கவில்லை.

புதிய தொடர் கதை

நீரில் மூழ்கிய அவர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொண்டுகரையை அடைய மூச்சைப்பிடித்துக்கொண்டு நீந்தினர். பலபேர் அலைகளுக்கு அடியில் புகுந்து உடலைவளைத்து கொடுத்து அவற்றின் அடியினின்றும் தப்பப் பார்த்தனர். அவர்களுக்கு அந்த இடத்தின் இயற்கை தெரியாதது ஓர் இடையூறாகவே நின்றது. அவர்களால் சமாளிக்க முடியவில்லை. கை ஓய்ந்துவிட்டது.

தக்க சமயத்தில் பரவர்கள் அங்கே வந்து அவர்களுக்கு வேண்டிய உதவியளித்தனர். நீரில் மிதப்பவர்களைத் தேடிப் பிடித்துக் கரைக்கு இழுத்து வந்தனர். கடல் நீரைக் குடித்து உணர்விழந்தவர்களைத் தங்கள் மீது தூக்கியும் சக்கரம் சுற்றியும் அதனை வெளிப்படுத்தி உயிர்ப்பித்தனர்.

தாங்கள் யாருக்கு இவ்விதம் உதவி செய்கிறோம் என்பதைப் பரவர்கள் அப்போது அறியவில்லை. எனினும் அதனை அவர்கள் அறிந்திருந்தாலும் உதவியளிக்க மறுத்திருக்கமாட்டார்கள். கஷ்டப்படுகிறவர்களுக்குக் கைகொடுத்து அவர்களைத் தூக்கிவிடவேண்டியது மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுடைய கடமை என்பதைப் பரவர் நிச்சயமாக நம்பி வந்தவர்கள்.

இவ்விதம் தமிழ் நாட்டுத் தென் புறத்தே வாழும் பரவர் வாழும் கடற்கரையில் ஒரு சிற்றூருக்கருகே கரையேறியவர்கள் யவனப்போர்வீரர்கள். அண்டியோகஸ் நடத்தி வந்த யவனப் படையைச் சேர்ந்தவர்கள். தங்கள் தேசத்தைவிட்டுப் பலகாத தூரம் கடலில் வந்த அவர்கள் எல்லோரும் தமிழ் நாட்டில் ஒரே இடத்தில் இறங்கவில்லை. தங்களைப் பல பகுதியினராகப் பிரித்துக் கொண்டு கடற்கரையோரமாகப் பலவேறு இடங்களில் இறங்கச் சென்றனர்.

அவர்களுள் முதன் முதலாகக் கரையை அடைந்த கோஷ்டி இது. இவர்கள் கரையருகே வந்தவுடன் தோணி கவிழ்ந்து இவர்கள் கடலில் மூழ்கியதையும் பரவர்கள் உதவி செய்ததையும் மற்றவர் தூரத்தில் செல்லும் போது கவனித்துக் கொண்டுதான் இருந்தார்கள். சூறாவளியால் கொந்தளிக்கும் அந்த ஜலத்திலே தங்கள் கலங்களையும் செலுத்தித் தாங்களும் அதைப் போல அவதிப்பட அவர்கள் இஷ்டப்படவில்லை. எனினும் சிறிது தூரத்தில் வேறோர் இடத்தில் இறங்கித் தரைமார்க்கமாக இவர்களுடைய உதவிக்கு வரலாம் என்றே எண்ணினார்கள் போலும்!

எனினும் இந்நிகழ்ச்சி அவர்கள் மனத்தே ஒரு கலக்கத்தை உண்டு பண்ணிவிட்டது. இதனை அவர்கள் தங்களுக்கு நேரிட்ட அபசகுனமாகவே கருதினர். வெண்ணெய் திரளும் சமயத்தில் தாழி உடைந்துவிடுமோ என்று பயந்தனர். எவ்வாறாயினும் முன் வைத்த காலை பின் வாங்கலாமா?

தி. நா. சுப்ரமணியம் எழுதியது

தங்கள் ஊர்ப்புறத்தே கலம் உடைந்து நீரில் மூழ்கியவர் யவனர்களே ஆவார்கள் என்பதைப் பரவர் நன்கு அறிவார். வழக்கம்போல வாணிபம் செய்யவந்தவர்களே என்று எண்ணினர். யவனர்களும் தாங்கள் போருக்கு எழுந்தவர் என்பதை முதலில் காட்டிக்கொள்ளவில்லை. கடலில் மூழ்கிய தோணிகளுடன் அவர்களுடைய போர்க் கலங்களும் போயின.

ஊருக்குப் போன பிறகுதான் அவர்களுடைய உண்மை உருவம் வெளிப்பட்டது. அன்றைத்தினம் பொழுது சாய்வதற்குள் பக்கத்தூரிலிருந்து தரைமார்க்கமாக மற்றொரு கோஷ்டியார் அவர்களுடைய உதவிக்கு வந்துவிட்டனர் நீர்ப் பரப்பில் இழந்தவற்றுக்குப் பதிலாகப் புதிய கத்திகளும் விலலம்புகளும் அவர்களுக்குக் கிடைத்து விட்டன.

அவர்கள் அதற்குப்பிறகு செய்த அட்டகாசத்தையும் இழைத்த இன்னல்களையும் விவரித்துக் கூறமுடியாது.

சேரியின் முக்கியமான இடங்களையும் நல்ல குடிசைகளையும் தங்களுக்கெனக் கைப்பற்றிக் கொண்டனர். உணவுப்பொருள்களை வெட்டியபடி அள்ளிக் கொண்டு சென்றனர். அவற்றுக்கு உரிய விலையைக் கொடுக்க மறுத்தனர். அப்படி யாராவது தைரியமாக முன்வந்து விலையைக் கொடுத்துவிட்டேன், அவற்றை எடுக்க வேண்டுமென்று கூறினானாகில் அவனைப் பிடித்துப் படாதபாடு படுத்தித் துன்புறுத்தினர்

அவர்கள் நடத்திய அட்டூழியங்களுக்கும் பெண் சோரங்களுக்கும் அளவே இல்லை.

பரவர்களும் இதனைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கவில்லை. மயிர் நீப்பின் உயிர் வாழாக்கவரிமான்போலக் கௌரவத்தையும் மானத்தையும் இழந்து உயிர் வாழ்வது எதற்காக? தங்களுக்கு நேரிட்ட இடுக்கண்களையும், தங்கள் பெண் மக்களுக்கு நேர்ந்த இன்னல்களையும் அகற்றுவதற்குச் சிறிதும் தயங்கவில்லை.

தாங்கள் யாரை முதலில் காப்பாற்றி உயிர் பிச்சையளித்தார்களோ அவர்களோடு பின்னால் போரிட்டு அவர்களை வதைப்பதைப் பரவர்கள் நியாயமாகக் கருதவில்லை. தன்னைக் கொல்ல வந்த பசுவையும் கொல்லலாம் என்கிறது தர்ம சாஸ்திரம். அதனோடு செய் நன்றி மறந்த பேதைகளை வதைப்பதில் சிறிதும் பாபம் இல்லை என்னும் இயற்கையோடு ஒன்றி, எளிய வாழ்க்கை நடத்திவந்த பரவர்களுடைய மனோபாவம் இரக்கத்தை அதிகமாகக் கொண்டிருந்தது. அவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொண்டார்களேயன்றி எதிர்த்து யவனர்களைத் தாக்கி முறியடிக்கவில்லை.

இந்தச் செய்தியைக் கேட்டவுடன் பாண்டிய மக்கள் மிகுந்த பரபரப்பை அடைந்தனர். அவர்கள் அதனை முதலில் நம்பவில்லை. 'அது எவ்விதம் சாத்தியமாகும்' என்றே சந்தேகித்தனர். எனினும் உண்மையை அறிந்தவுடன் அவர்கள் பரபரப்பு நீங்கி அதற்குப் பதிலாக ஆத்திரமும் கோபமும் கொண்டனர்.

உலகத்திலேயே சிறந்த வீரமும் புகழும் பெற்று செல்வாக்குடனும் பெருமையுடனும் வாழும் தங்கள்மீது படையெடுத்துவர யவனர்களுக்கு ஏற்பட்ட தைரியத்தைக் கண்டு அவர்கள் வியந்தனர் ஒருபுறம். எவ்விதமாயினும் அவர்களைத் தமிழ் நாட்டில் தலையெடுக்க

வொட்டாமல் அடக்கித் துரத்த வேண்டுமென்றே முடிவு செய்தனர்.

கடற்கரையோரமாகப் பல இடங்களிலும் யவனர்கள் இறங்கி. நாட்டின் பகுதிகளைக் கைப்பற்றிக் குடிமக்களைத் துன்புறுத்தி வருகிறார்கள் என்பதைக் கேட்கச் சுதந்திரம் வாய்ந்த எந்தத் தமிழன் உள்ளந்தான் குமுறாது? முடியுடைய மன்னர்களின தமிழ் வேதத்தைத் தவிர வேறு யாரையும் என்றைக்கும் வணங்கியறியாத அவர்கள் யவனர்களுக்குக் கீழ்ப்படிந்து ஒடுங்கி விடுவாரோ? இந்த ஆக்கிரமிப்பைத் தடுக்காமல் விட்டுவிட்டால், தங்கள் ஒவ்வொருவருடைய சர்வசுதந்திரங்களும் போய்விடும் என்பதையும், அப்பால் தாங்களும், தலைமுறை தலைமுறையாகத் தங்கள் வழிவந்தவர்களும் சொந்த நாட்டிலேயே பிறருக்கு அடிமையாக வாழவேண்டும் என்பதையும் அவர்கள் அறிவர்.

யவனர்கள் தங்களுக்கென ஒரு நீதியையும், தாங்கள் கைக்கொண்ட பிரதேசங்களின் குடிமக்களுக்கென மற்றொரு வகை நீதியையும் வழங்குவது தமிழ் மக்களுக்குத் தெரியாததன்று. யவனனாகப் பிறந்த ஒருவன் தன் ஸாம்ராஜ்யத்தையன்றி வேறு எதற்கும் யாருக்கும் அடங்கியவனல்லன். அவனைப் பிறர் ஒன்றும் செய்ய முடியாது அவனைச் சிறைவைக்கவோ அவன் இழைத்த குற்றத்திற்கு ஏற்ற தண்டனை அளிக்கவோ யாருக்கும் உரிமை கிடையாது. ஆனால் அவனுக்கோ தன் நாட்டின் அதிகாரத்தை எந்த இடத்திலும் நிலைநாட்ட எத்தகைய முறையை வேண்டுமானாலும் கையாள உரிமை உண்டு. ஒரு குலத்துக்கு ஒரு நீதியான இதனை யார் தாம் பொறுப்பர்.

ஆண் மகனாய்ப் பிறந்த ஒவ்வொரு தமிழனும் தன் தாய்நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்ற முன் வந்தான். யவனர்களை முறியடித்துத் துரத்திவிட்டே வேறு காரியம் பார்ப்பது என்று கங்கணம் கட்டிக்கொண்டான். ஆம். தன் வேலையும் வாலையும் எடுத்துச் சாணை பிடித்துத் திட்டித் தயார் செய்துகொண்டான். வில்லைப் பதம்பார்த்து, நாண பிடித்துக் கயிற்றைப்புதுப்பித்து அம்புகளைத் தூணியில் தொடுத்து வைத்தான். போர் முனைக்குப் புறப்படுவதற்கு வேண்டிய ஆயத்தங்கள் யாவற்றையும் செய்து வந்தான்.

அரசனது ஆணையும் அதற்குள் பறந்து வந்தது. அதனைச் சேரி தோறும் ஊர் தோறும் பறையறிந்து அறிவித்தான். ''தாய்க்கு ஒரு மகன், பிள்ளைபபேறு கிடையாதவன், பாலப்பருவம் நீங்காதவன், மூப்பு அடைந்தவன் ஆகியோரைத் தவிர மற்ற எல்லா ஆண்மக்களும் போருக்குப் புறப்படவேண்டும்'' என்பதே அதன் சாராம்ஸம்.

அதுமட்டுமன்று; மற்றொன்றும் தொடர்ந்து வந்தது. கரையேறிய யவனர்களைத் துரத்தியடிப்பதற்குத் தீவிரமான போர் நடக்ககூடிய இடமான கடற்கரைப் பிரதேசத்தை காததூரத்துக்குக் காலி செய்துவிடவேண்டும் என்பது அது.

கூன், குருடு, செவிடு முதலிய அங்கஹீனர்கள், குழந்தைகள், கிழவர்கள், இளம் பெண்கள் போர் முனைக்கு வராத பிறகு ஆடவர் ஆகியோர் அந்தப் பிரதேசத்தை விடுத்துத் தக்க பாதுகாப்புள்ள மறைவிடத்துக்குச் சென்று ஒதுங்கவேண்டும். அவர்கள் அவ்விடம் தங்குவதால் போரிடுவோருக்கு இடையூறுகள் உண்டாகுமேயன்றி உதவியேதும் கிடைக்காது. வீரன் போரைக்கவனிப்பானா, அகதிகளான அவர்களைக் காப்பானா?

தாங்கள் தலைமுறை வழியே வாழ்ந்து வந்த அந்தப் பிரதேசத்தை விட்டு வேற்றிடம் சென்று சிறிது நாள் தங்குவதற்குக் கொஞ்சமும் வருத்தப்படவில்லை. அதனால் 'நாட்டுக்கு ஏற்படும் மகத்தான நன்மையைக் கருதித் தாங்கள் அனுபவிக்க நேரிட்டுள்ள சிறு கஷ்டங்களைப் பொருட்படுத்தவில்லை.

ஊரை விட்டுச் சென்ற ஒவ்வொருவரும் தாங்கள் சுமக்கக் கூடிய அளவு பண்டம் பாடிகளையும், உணவுப் பொருள்களையும் தூக்கிச் சென்றனர். மிகுந்த வற்றைப் பிறர் அறிய முடியாத படிப் பத்திரப்படுத்தி வைத்தனர். பூமியிலே பள்ளம் தோண்டிப் புதைத்தனர். கலாபம் நீங்கிச் சொந்த ஊருக்குத் திரும்பிய பிறகு அவற்றை எடுத்துக் கொள்ளலாம் அன்றோ?

நாடு இவ்விதம் போருக்குத் தயார் செய்துகொண்டிருக்கையில் மதுரையில் பாண்டிய மன்னனான செழியனும் சும்மா இருக்கவில்லை. நிமித்தகர்களை அழைத்து வந்து நல்ல நாளை குறித்துச் சொல்ல வினவினான். அவர்களும் கிரஹங்களை ஆராய்ந்து பார்த்தனர். போரில் வெற்றிக்கிட்டப் புறப்படுவதற்கு அப்போது நல்ல வேளையாக இருந்தது.

'அரசே, இந்த முகூர்த்தமே நல்ல வேளையாக இருக்கின்றது. இது தவறினால் இன்னும் பதினைந்து நாட்களுக்கு இதைப் போன்ற நன்னிமித்தம் கொண்ட வேளை கிடைக்காது' என்று எல்லோரும் ஒரு முகமாகத் தெரிவித்தனர்.

'அப்படியானால் இந்த நல்லோரையில் நம் சின்னமாக இந்த வாளை அனுப்பி வைப்போம்' என்று கூறிய மன்னன் தன் உடைவாளை உருவி அப்போதே பக்கத்தில் இருந்த காவலனிடம் அளித்தான். காவலனும் அதனைச் சிரமேற்றாங்கி வெளிக்கிளம்பினான். மங்கலப் பெண்டுகள் எதிரே வர, நற்சகுனம் கண்டு உள்ளத்தே உவகை பூத்த அவன் அரண்மனை வாசலில் யானை மீது ஏறி அமர்ந்தான். அவ்விடத்தினின்றும் நகரை வலமாகக் கொண்டு கிழக்குத் திக்கை நோக்கிப் புறப்பட்டான்.

வாளைப் பரஸ்தானம் 'அனுப்பிய மன்னன் மறுநாளே தான் நேரில் போருக்குக் கிளம்பப்போவதாக நகரில் வீர முரசு கொட்டிச் செய்தியை அறிவித்தான். அவரவர் தங்கள் படையுடன் ஒருவாரக் காலத்துக்குள் தன்னை வந்து அடைய வேண்டுமென்று குறுநில மன்னர்களுக்கும் வேளிர்களுக்கும் ஓலை போககினான். அப்போது தலைநகரமே ஒரு படைவீட்டைப் போல மாறிக் காட்சி அளித்தது.

சாத்தனோ செய்யும் வகையறியாமல் தவித்தான். பாண்டிய சேனையின் தலைமைப் பதவியை மன்னன் அவனுக்கு வழங்கிவிட்டான். அவன் போருக்குக் கிளம்புவதனின்றும் இனித் தாமதிக்க முடியாது. ஆனால் அவன் அருமை மனைவி அந்தோனியாவோ வீட்டில் படுத்த படுக்கையாகக் கிடக்கிறாள். யவன வைத்தியனை மார்கஸ் கூறியபடி அவளை நகரத்தினின்றும் வேற்றிடத்திற்கு அழைத்துச் சென்று அவள் உடல் நலனைக் கவனிக்க அவனுக்குப் பொழுது கிடைக்கவில்லை.

ஆனால் அந்தோனியாவோ அதைப்பற்றிச் சிறிதும் சிந்தை கொள்ளவில்லை. சாத்தனுடன் போர் முனைக்குக் கிளம்புவதற்கும் அவளும் தயாராக இருந்தாள்.

''என்ன? இந்த நிலையில் உன்னைப் போர்களத்திற்கு அழைத்துச் செல்லவா? ஒரு காலும் முடியாது'' என்று கண்டிப்பாக மறுத்தான் சாத்தன்.

யுத்தத்துக்கு செல்லுங்கால் பெண்மக்களையும் அழைத்துச் செல்வது தமிழர்களுக்குப் புதிதன்று. வீரத்தாய்மார்களும் வீரபத்தினிகளும் என்றைக்கும் போரைக்கண்டு பயப்பட்டதில்லை. அவர்கள் போர்க்களங்களில் புகுந்து வீரர்களுக்கு உற்சாகமூட்டி தைரியம் அளித்து உதவி வந்தனர்: அம்மட்டிலோ. போரில் விழுந்தவர்களை 'ரணகளத்தினின்றும் வெளியே தூக்கி வந்து காயங்களுக்கு மருந்திட்டுக் கட்டிப் புண்ணாற்றி, வீரர்கள் மனத்தே சோர்வு தோன்றாதவாறு அவர்களை எப்போதும் பராமரிப்பர்.

சாத்தன் இதனை நன்கு அறிவான். ஆனால் இவை யாவும் அந்தோனியாவுக்குப் புதிதே அன்று. சென்ற ஆறுமாதங்களாக அவளுக்கு உண்டாகியிருக்கும் மனப்புண் போர்க்களக் காட்சியால் அதிகமாகவும் இடம் ஏற்படும். அவளுடைய நாட்டவர்களான யவனர்கள் யுத்தத்தில் அடிபட்டு மாண்டுபோவதைக்காண அவள் உள்ளம் துடிக்கும். அதற்காகவே சாத்தன் அவளைத் தடுத்தான்.

'ஏன் வைத்தியர்தான் சொல்லிச் சென்றாரே, இடமாற்றத்தால் ஒருவேளை வியாதி குணம் காணலாம் என்று. தங்களுடன் அங்கேவந்து இயற்கையின் மத்தியில் வாழ்ந்தால் வெகு சீக்கிரம் உடல நிலை சீராகிவிடும் என்றே, எண்ணுகிறேன்' என்று திடமாகச் சொன்னாள் அவள்.

கரையில் எறிந்த மீனைப் போல உணர்வற்றுக்கிடந்த அந்தோனியா மீண்டும் தன் நாட்டவர்களைக் காணும் பாக்கியம் தனக்குக் கிட்டுமாவென்றே ஏங்கிக் கிடந்தாள். அதற்கு ஏற்ற சந்தர்ப்பம் வாய்த்துள்ளபோது அதை நழுவ விடுவாளோ?

அவளுக்குத் தமிழ் நாட்டு வாழ்க்கை சலித்துவிட்டது. வந்த புது மோகத்தில் அவள் அந்த வாழ்க்கையை நன்றாக ரஸித்து அனுபவித்தாள். ஆனால் நாளாக ஆக அது தன்னுடைய இயற்கைக்கு ஒவ்வாது என்பதைச் சிறிது உணர்ந்தாள். எனினும் அதில் தனக்கு ஒருவிதமான சலிப்பும் வெறுப்பும் ஏற்பட்டுவிட்டது என்பதை அவள் அறிந்து கொள்ளவில்லை. சாத்தனுக்கும் அது தெரியவில்லை.

எனினும் அவள் உள்ளத்தே ஏற்பட்டிருந்த ஓர் ஏக்கம் அவளை வெளிக்கிளம்பத் தூண்டியது.

சாத்தன் அவளைத் தடுக்க எவ்வளவோ நல்ல வார்த்தைகள் சொல்லிப் பார்த்தான்: அவை ஒன்றும் பலன் அளிக்கவில்லை. அவள் ஒரே பிடிவாதமாக இருந்தாள், எனினும் இதுவே கடைசி முறை. இனி அவள் மதுரைக்குத் திரும்பாள் என்பதை ஒருவரும் உணரவில்லை.

(தொடரும்)



மதனமஞ்சரி
மாத்திரைகள்

மலச்சிக்கல், ஸ்வப்பனஸ்கலிதம், பலஹீனம், தாது கேடுகள் முதலியவற்றை நீக்கி, இரத்த புஷ்டியும், தாதுவிருத்தியு முண்டாகும். விலை ரூ. 1/-.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனாபஜார் ரோடு, மதராஸ்.
புரசவாக்கம் : எஸ். டி. பல்டானே.
ஊரிகம் : டி. ஜான்ஸன் & பிரதர்ஸ்

டோங்ரே
பாலாமிருதம்
பலஹீனமான குழந்தைகளுக்கு
விசேஷ பலத்தைக் கொடுத்து உதவக்கூடிய
சிறந்த மருந்துகள் இருக்கின்றன.

மைனர் ராஜாமணி

துப்பறியும் கோவிந்தன் ரொம்ப ஆழ்ந்த யோசனையிலிருந்தார், அவர் முன் எதிரிலிருந்த 'சுதேசமித்திரன்' பேபர் தான் அவரை அவ்வளவு ஆழ்ந்த யோசனையில் அமர்த்தியது. அப்பொழுது துப்பறியும் சிங்கம் துளசிங்க முதலியார் வந்தார்.

"ஹலோ துளசிங்கம்! நீ எப்பொழுது கல்கத்தாவிலே யிருந்து வந்தாய்?" என்று கேட்டார் கோவிந்தன்.

"இன்றைக் காலையில் தான் வந்தேன். நான் போன கேஸ் ஜயமாய்விட்டது" என்றார் துளசிங்கம்.

"நல்ல சமயத்தில் நீ வந்தே, நான் இத்தனை நாள் பல கேஸ்களில் ஈடுபட்டிருந்தேன். ஒரு நிமிஷங்கூட ஓய்வு இல்லை, அப்படி வேலை கஷ்டி வாங்கினபடியால், தாசி கோகிலத்தின் கொலையைப்பற்றி கவனிக்க அவகாசமில்லை. ஒன்றும் அறியாத ஒருவனை தூக்கிலிடப்போகிறார்கள்" என்றார் கோவிந்தன்.

"அப்படியா?" என்றார் துளசிங்கம்.

"நேற்றைக்கு தான் ஜட்ஜ் மரண தண்டனை விதித்திருக்கிறார். இதுதான் கேஸ். இந்த ஊரில் கோகிலம் என்று ஒரு தாசி இருந்தாள். அவள் மைனர் ராஜாமணி என்பவனை தாலி கட்டிய புருஷனைப்போல் பாவித்து வந்தாள். மைனர் ராஜாமணி அவள் வலையில் விழுந்த பிறகு, அவள் வேறு ஒருவரையும் கண்ணெடுத்து பார்க்கவில்லை. ஒரு நாள் சாயங்காலம் ஐந்தரை மணிக்கு கோகிலமும் ராஜாமணியும் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது துப்பாக்கி வெடிக்கும் சப்தம் கேட்டது. வீட்டிலிருந்த எல்லோரும் ஓடி வந்தார்கள். கோகிலம் கீழே பிணமாய்க் கிடந்தாள். ராஜாமணியைக் காணோம். அவள் அண்ணன் தங்கசூர்ணம் பிள்ளை அப்பொழுது பங்களாக்கருகில் வந்துகொண்டிருந்தார். இந்த சமாசாரத்தைக் கேட்டவுடன் ஓடி வந்தார். அப்புறம் தோட்டத்தைச் சுற்றிப்பார்க்கும் பொழுது ஒரு மூலையில் ராஜாமணியின் துப்பாக்கி கிடைத்தது. கோகிலம் தன்னைக் கண்டபடி பேசினாள் என்று ஒப்புக்கொள்ளுகிறான் ராஜாமணி, தனக்கு கோபம் வந்துவிட்டது உடனே கோகிலத்தின் வீட்டைவிட்டு போய்விட்டதாகச் சொல்லுகிறான். தான் போகும்பொழுது மணி ஐந்து இருபது என்கிறான். அவனுக்கு தன் துப்பாக்கி எப்படி அங்கே வந்தது என்று புரியவில்லை, அவன் தான் கொலை செய்தான் என்று கோர்ட்டில் தீர்ப்பாகிவிட்டது" என்றார் கோவிந்தன்.

'கொலை நடந்த பொழுது வீட்டில் யாரார் இருந்தார்கள்" என்றார் துளசிங்கம்.

"கோகிலத்தின் அண்ணு தான் வீட்டிலில்லை. வீட்டில் கோகிலத்தின் தோழி பங்கஜமும் தோட்டக்காரனும் இருந்தார்கள். அவர்கள் அவளைக் கொலைசெய்ய காரணமே இல்லை."

"ராஜாமணிக்கு சொத்து இருக்கா, போய்விட்டதா?"

"சொத்து எல்லாம் போய் விட்டது. அவனுக்கு இரண்டு லக்ஷம் ரூபாய்க்கு சொத்து இருந்தது. எல்லாவற்றையும் கோகிலத்துக்கே கொடுத்து விட்டான்" என்றார் கோவிந்தன்.

"கோவிந்தா! நீ வீணுக மண்டையை போட்டு உடைத்துக் கொள்கிறாய்! ராஜாமணி தான் கொலை செய்திருப்பான் என்று வேண்டுமானால் நான் பந்தயம் கட்டுகிறேன். தாசிக்கு பணம் தான் லக்ஷ்யம். அவன் ஓட்டாண்டியாய் போய்விட்டான் என்றவுடன் 'இனிமேல் வர வேண்டாம்' என்று கோகிலம் கண்டிப்பாய் சொல்லியிருப்பாள். அவனுக்கு கோபம் வந்திருக்கும். அவளை சுட்டு விட்டு துப்பாக்கியை தோட்டத்தில் எறிந்துவிட்டு போய்விட்டான்." என்றார் துளசிங்கம்.

"அதுமாதிரி செய்திருப்பான் என்று எனக்கு தோன்றவில்லை. அவனுக்கு சொத்துபோய் ஒரு

சிறு கதை

★

"மூர்த்தி" எழுதியது

வருஷமாகிறது, மாசம் ஐம்பது ரூபாய் அவன் சாப்பாட்டிற்கென்று அவள் கொடுத்துக் கொண்டுவந்தாள். அப்பேர்பட்டவளை அவன் கொல்வானா? அப்படி செய்தால் தன் தலையில் மண்ணை அள்ளி போட்டுக் கொள்ளுகிறமாதிரி அல்லவா ஆகிறது."

"சரி. நான் இன்னும் பதினைந்து நாளில் எல்லாவற்றையும் ஆராய்ந்து விட்டு சொல்லுகிறேன்" என்று சொல்லிவிட்டு போய் விட்டார் துளசிங்கம்.

மேற்படி சம்பவம் நடந்து பதினைந்து நாள் கழித்து துளசிங்கம் வந்தார்.

"காயா, பழமா?" என்றார் கோவிந்தன்.

"ராஜாமணி தான் கொலை செய்தான் என்று நிச்சயமாக நான் சொல்லுவேன்" என்றார் துளசிங்கம்.

"எப்படி?" என்று கேட்டார் கோவிந்தன்.

"நான் போய் கோகிலத்தின் அண்ணு தங்கசூர்ணத்தைப் பார்த்தேன். 'எல்லாம் தான் நோண்டி நோண்டிப்பார்த்தாய் விட்டதே. கோகிலத்தைபோன்ற தங்கமான அக்காவை அடைய நான் எவ்வளவோ பாக்யம் செய்திருக்க வேண்டும். தப்பி தவறி தாசிகுலத்தில் பிறந்தாள். ராஜாமணியே தன் கணவன் என்று நினைத்துக் கொண்டிருந்தாள் அவள் ஆனால் அவனுக்கு மட்டும் அவள் அருமை தெரியவில்லை.' என்றான் தங்க சூர்ணம். 'அதற்கு என்ன பண்ணுகிறது. அவாளவாள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்' என்றேன். 'அவளுக்கு அவ்வளவுதான் ஆயுள் கடவுள் கொடுத்திருக்கிறார்போலிருக்கு. ஏதோ போய்விட்டு போகிறான். அவனை தூக்கு மரத்தில் மாட்டுவதினால் அவள் உயிர் பெற்று விடப்போகிறாளா என்ன என்று ராஜாமணியைக் காப்பாற்ற முயன்றேன். ஆனால் நடக்கிறது நடந்து தானே தீரும்' என்றான் தங்க சூர்ணம். 'கோகிலத்தின் தோழி பங்கஜம் எங்கே?' என்று கேட்டேன். அவளுக்கு கோகிலமில்லாத வீட்டில் ஒரு நிமிஷம் கூட இருக்க இஷ்டமில்லை. கோகிலம் இறந்து ஐந்தாறு நாட்களில் அவள் கல்கத்தாவிற்கு தன் தங்கை வீட்டிற்கு போய் விட்டாள்' என்றான் தங்க சூர்ணம்" என்றார் துளசிங்கம்.

"அப்படியென்றால் நீ கல்கத்தாவிற்கு போயிருந்தாயா?" என்று கேட்டார் கோவிந்தன்.

"ஆமாம்! அவளை பார்க்கவே கல்கத்தாவிற்கு போனேன், அவள் நடந்ததெல்லாவற்றையும் சொன்னாள். சாயங்காலம் ஐந்து மணிக்கு அவள் கோகிலத்திற்கு தலை பின்னி விட்டுக் கொண்டிருந்தாளாம். அப்பொழுது ராஜாமணி வந்தானாம். உடனே இவள் எழுந்து மாடிக்கு வந்து விட்டாளாம். அப்புறம் கீழே ஒரே இரைச்சலாக இருந்ததாம். ஆனால் அவர்கள் என்ன பேசிக்கொண்டிருந்தார்கள் என்று மட்டும் அவளுக்கு காது கேட்கவில்லையாம். வீட்டிற்கு அருகிலிருக்கிற ரயில்வே ஸ்டேஷனில் ரயில் வந்து நின்றதை கவனித்தாளாம். ரயில் கிளம்பியதும் கீழே துப்பாக்கி சப்தம் கேட்டதாம். அவ்வளவுதான் அவளுக்குத் தெரியுமாம். இவ்வளவுதான் சமாசாரம். வீணான அலைச்சல்" என்றார் துளசிங்கம்.

"நான் ஒன்று கேட்கிறேன். ராஜாமணி ஓடிப்போவதை யாராவது பார்த்தார்களா?" என்று கேட்டார் கோவிந்தன்.

"இல்லை" என்றார் துளசிங்கம்.

"ஸ்டேஷனில் ரயில் வந்ததை தான் பார்த்ததாக போலீஸார் தன்னை விசாரிக்கும் பொழுது சொன்னாளா?"

"இல்லை."

"ரயில் ஸ்டேஷனுக்கு எத்தனை மணிக்கு வருகிறது தெரியுமா? மத்தியானம் இரண்டு மணிக்கு அப்புறம் சாயங்காலம் ஆறு மணிக்கு தான் வருகிறது. பங்கஜமோ ரயில் ஸ்டேஷனை விட்டு கிளம்பியதும் குண்டு சப்தம் கேட்டது என்கிறாள். எல்லோரும் ஐந்தரை மணிக்கு துப்பாக்கி சப்தம் கேட்டது என்கிறார்கள். ரயில் ஒருநாளும் ஆறு மணிக்கு வரவேண்டியது ஐந்தரை மணிக்கு வராது. நான் வேண்டுமானால் ஸ்டேஷன் மாஸ்டரை அன்றைய தினம் எத்தனை மணிக்கு ரயில் வந்தது என்று கேட்டுசொல்லுகிறேன்" என்று போனில் பேசிவிட்டு நான் சொன்னது என்ன. அன்றையதினம் ஆறு மணி இரண்டு நிமிஷத்திற்கு வந்ததாம்" என்றார் கோவிந்தன்.

"ரயிலுக்கும் கொலைக்கும் என்ன சம்பந்தம்?"

"அதைத்தான் சொல்ல வந்தேன். கொலை ஐந்தரை மணிக்கு நடக்கவில்லை. ஆறு மணி இரண்டு நிமிஷத்திற்கு நடந்திருக்கிறது. ராஜாமணியை அவன் வீட்டில் ஆறடித்து ஐந்து நிமிஷத்திற்கு பார்த்ததற்கு சாக்ஷி இருக்கிறது. அவன் வீட்டிற்கும் கோகிலத்தின் வீட்டிற்கும் ஒரு மைல் இருக்கிறது, மூன்றே நிமிஷத்தில் ஒரு மைல் எவனாலேயாவது நடக்க முடியுமா?"

"முடியாது."

தயவு செய்து கவனியுங்கள்

உங்களுக்கு சப்ளை செய்யும் டாம்கோ பரிமள கூந்தல் தைலம், டாம்கோ தேங்காயெண்ணெய் ஷாம்பூ, இவைகள் உண்மையான சரக்குகள்தான் என்பதை உறுதிப்படுத்த எல்லா புட்டி வாய்களின் மேலும் மூடிகளுக்குக் கீழாக முத்திரை யொன்று அச்சிட்டிருக்கிறோம். வாங்கும்போது இந்த முத்திரை உடைக்கப்படாமலிருக்கின்றதா வென்று கவனித்து வாங்கவும்.

பிரசித்தி வாய்ந்த டயமண்ட் மார்க்கும், ஆரஞ்சு — பொன்னிற முத்திரையும் "A Tata Product" எனும் வார்த்தைகளும் இருக்கின்றனவாவென்று கவனியுங்கள்.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.,
டாடாபுரம் & பம்பாய்.

(T H. 3167.)

"ஆகையால் ராஜாமணி கொலை செய்யவில்லை. நானே இதை பதினைந்து நாட்களாக ரொம்ப ஆராய்ச்சி பண்ணினேன். இது மாதிரி நடந்திருக்குமோ நடந்திருக்காதா என்று யோசித்துப்பார். ராஜாமணி கோகிலமே கதி என்றிருந்தான். அவளும் அவ்விதமே அவனையும் எண்ணியிருந்தாள். ஆனால் ராஜாமணிக்கு சொத்து எல்லாம் போன பிறகு தங்க சூர்ணம் அவனை விரட்டிவிட வேண்டும் என்று பார்த்தான். அதற்கு அவள் சம்மதிக்கவில்லை. தன்னிடமுள்ள சொத்தை யெல்லாம் தனக்கு தானே கொடுத்தான் என்று மாசம் ஐம்பது ரூபாய் அவள் ராஜாமணிக்கு கொடுத்து வந்தாள். இது தங்க சூர்ணத்திற்கு பிடிக்கவில்லை. அவள் பேரில் ஒரு லக்ஷம் ரூபாய் பாங்கியில் இருந்தது. அவன் அதை ராஜாமணி பேரில் மாற்றிவிட வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தான். தான் இருக்கும் வீட்டை விற்று ஒரு வீடு வாங்கி தான் மேலேயும், கீழே ராஜாமணியும் இருக்கட்டும் என்று பிரஸ்தாபித்துக் கொண்டிருந்தாள். இது தாஸிகள் செய்கிற காரியமா? இவள் எங்கேயாவது பித்துக் குளி தனமாக ராஜாமணி பேரில் எழுதி வைத்துவிடப் போகிறாளே" என்று தங்கசூர்ணத்திற்கு பயம். மேலும் சோப்பளாங்கிபுரம் ஜமீன்தார் தனக்கு கோகிலத்தின் நட்பு கிடைக்குமாறு செய்வதற்காக அவனுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்திருந்தார். அவரை தன் வலையில் போட்டுக் கொண்டால் ஐந்து லக்ஷம் ரூபாய் போல் கோகிலத்திற்கு கிடைக்குமே என்று தங்க சூர்ணம் ரொம்ப பிரயாசைப்பட்டான். ஒரு நாள் அவர் கோகிலத்தைப் பார்க்க வந்திருந்த பொழுது அவர் தலை மேல் உள்ளேயிருந்தபடியே வாழை பழ தோலை வீசியெறிந்தாள். அவர் அவமானப்பட்டு போய் விட்டார். சொன்ன காரியம் சித்திக்கவில்லையே என்று தான் கொடுத்த ஆயிரம் ரூபாயை திருப்பி கொடுக்கும்படிக்கு தங்க சூர்ணத்தைக் கேட்டார்" என்றார் கோவிந்தன்.

"நீ சொல்லுவது எனக்கு புரிந்துவிட்டது. தங்க சூர்ணம் தான் கொலை செய்தான் என்கிறீர்கள். அப்படி அவன் கொலை செய்வதாக இருந்தால் ராஜாமணியை அல்லவோ கொலை செய்திருக்க வேண்டும்" என்றார் துளசிங்கம்.

ராஜாமணியை அவன் கொலை செய்யாததற்கு காரணமுண்டு. அவனை கொலை செய்திருந்தால் தான், தான் கொலை செய்திருக்கக்கூடும் என்று கோகிலம் காட்டி கொடுத்துவிடுவாள் என்று தங்க சூர்ணத்திற்குத் தெரியும், அவள் தொலைந்துவிட்டால் நிம்மதியாக ஒன்றரை லக்ஷ ரூபாய் சொத்தை அனுபவிக்கலாம் என்பது அவன் எண்ணம். மேலும் ராஜாமணியின் மனைவியை அடிக்கடி பார்த்திருக்கிறான். அவளிடம் கெட்ட எண்ணம் கொண்டு அடிக்கடி அவன் இல்லாத சமயம் போனான். ஆனால் அவன் பாச்சா பலிக்கவில்லை."

"நீ எதில் கொண்டு போய் முடிக்கிறாய்" என்று தெரியவில்லையே.

"அவசரப்படாதே. கொலை நடந்ததற்கு முதல் நாள் ராஜாமணி இல்லாத சமயம், தங்க சூர்ணம் அவள் வீட்டிற்கு போயிருக்கிறான். அங்கே ஒருவரும் பார்க்காத சமயம் ராஜாமணியின் துப்பாக்கியை அவன் மேஜையிலிருந்து எடுத்து தன் ஜேப்பியில் போட்டுக் கொண்டிருக்கிறான். அடுத்த நாள் இத்தனை மணிக்கு கோகிலத்தைப் பார்க்க ராஜாமணி வருவான் என்று அவனுக்குத் தெரியும். 'ராஜாமணி தான் புதுச்சேரிக்கு போகப் போகிறதாகச் சொல்லியிருக்கிறான். கோகிலம் 'கூடாது, என் சொத்தை யெல்லாம் உன் பேருக்கு மாற்றி விடுகிறேன்' என்று சொல்லியிருக்கிறாள். அவன் சம்மதிக்கவில்லை. அவள் மகா முன்கோபக்காரி, கோபத்தில் கண்டபடி அவனை பேசியிருக்கிறாள், ராஜாமணிக்கு கோபம் வந்து விட்டது. எழுந்து போய் விட்டான். அப்பொழுது ஆறு மணி என்று வைத்துக் கொள். தங்க சூர்ணம் ஒருவரும் பார்க்காதபடி உள்ளே வந்திருக்கிறான். கோகிலம் கீழே அழுது கொண்டு படுத்திருக்கிறாள். கடிகாரத்தை ஆறு மணியிலிருந்து ஐந்தரை மணிக்கு திருப்பி வைத்திருக்கிறான். டெலிபோன் கம்பிகளை அறுத்து விட்டான்."

"ஏன்?"

"டெலிபோன் கம்பிகள் இருந்தால் உடனே யாராவது போலீஸிற்கு போன் பண்ணினால் அவர்கள் எத்தனை மணிக்கு போன் பண்ணினார்கள் என்று குறிப்பு வைத்துக்கொள்ளுவார்கள். அந்த சமயத்தில் தான் எங்கே இருந்தோம் என்ற கேள்வி கிளம்பும். ஆகையால் சாயங்காலம் ஐந்து மணியிலிருந்து ஐந்தே முக்கால் மணிவரையில் ஒரு சிநேகிதன் வீட்டிலிருந்தான், வந்தவுடன் கடிகாரத்தை திருப்பி வைத்து விட்டபடியால் கொலை நடந்த சமயத்தில் தான் சிநேகிதன் வீட்டில் இருந்ததாக ரூபித்து விடலாம். தான் சிநேகிதன் வீட்டிலிருந்து வந்து கொண்டிருக்கும்பொழுது பங்கஜம் ஓடி வந்து சொன்னதாகவும் சொல்லியிருக்கிறான்"

"அப்படி யென்றால் என்ன நடந்தது என்கிறேன்?"

"கடியாரத்தை திருப்பி வைத்து விட்டு கோகிலம் இருந்த உள்ளுக்கு வந்திருக்கிறான். அவள் அழுது கொண்டு ஈஸிசேரில் படுத்துக்கொண்டிருக்கிறாள். அவளை சுட்டு விட்டு துப்பாக்கியை தோட்டத்தில் எறிந்து விட்டு, சுவற்று மேல் ஏறி ரோட் பக்கம் குதித்திருக்கிறான். நல்ல வேளையாக ஒருவரும் பார்க்கவில்லை. தான் அப்பொழுது தான் சிநேகிதன் வீட்டிலிருந்து வந்தது போல் பாவனை பண்ணியிருக்கிறான். நான் சொன்னபடி நடந்திருக்கக் கூடுமோ, கூடாதா என்று இன்னும் சிறிது நேரத்தில் தெரிந்து விடுகிறது" என்றார் கோவிந்தன்.

* * * *

மேற்படி சம்பவம் நடந்து கால் மணி கழித்து, இரண்டு பேரும் ஒரு மாறு உடையுடன் சப் இன்ஸ்பெக்டருடன் கூட கோகிலத்தின் பங்களாவுக்குப் போனார்கள். சப் இன்ஸ்பெக்டர் மறைவாக நின்றார்.

"நீங்களா, வாருங்கள்" என்று தங்கசூர்ணம் வரவேற்றார்.

"எங்களுக்கு கோகிலத்தை நன்றாக தெரியும். ரொம்ப நல்லவள். அவள் தான் போய் விட்டாள் என்றாள். அவளுடைய வம்சம் அற்று போகக் கூடாது என்று உங்களைக் காப்பாற்ற வந்தோம்" என்றார் கோவிந்தன்.

"நீங்கள் சொல்லுவது ஒன்றும் புரியவில்லையே" என்றார் தங்கசூர்ணம் திகிலுடன்.

"சேலைகட்டிய மாதரை நம்பாதே" என்று பொய்யாகவா கவிகள் சொல்லுகிறார்கள். பங்கஜம் ஏழையாச்சே என்று அவள் மேல் இரங்கி ஐநூறு ரூபாய் பணம் கொடுத்து கல்கத்தாவிற்குப் போக சொன்னீர்கள். அவளிடம் நேற்றைய ராத்திரி கோகிலத்தின் பிசாசு வந்து 'உண்மையைச்சொல்லுடி என் கணவரை தூக்கு மரத்தில் தொங்கவிடாதேடீ" என்று பயமுறுத்தியதாம். அவள் எல்லாவற்றையும் கல்கத்தா போலீஸ் கமிஷனரிடம் சொல்லி விட்டாளாம் என்றார் கோவிந்தன்.

தங்கசூர்ணத்தின் முகம் சுண்டியது.

"என்ன சொன்னாளாம்! சொல்வதற்கு என்ன இருக்கு?" என்று ஒருவாறு சமாளித்துக் கொண்டார் தங்கசூர்ணம்.

"அவள் கொலை நடந்த அன்றைய காலை உங்கள் டிராயரில் ராஜாமணியின் துப்பாக்கியைப் பார்த்தாளாம். மேலும் கடிகாரத்தை நீங்கள் அரைமணி நேரம திருப்பி வைத்ததைப் பார்த்தாளாம், கல்கத்தா போலீஸ் கமிஷனர் நம்மூர் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு உங்களை அரஸ்டு செய்யும்படிக்கு போன் பண்ணினர். அப்பொழுது நான் அங்கே இருந்தேன். அச்சமயம் அவர் மனைவி பிரசவ வேதனையால் துடிக்கிறாள் என்று கான்ஸ்டேபிள் வந்து சொன்னபடியால் உடனே வீட்டிற்குப் போய் விட்டார். இன்னும் ஐந்து நிமிஷத்திற்குள் கான்ஸ்டேபிள்கள் வந்தாலும் வருவார்கள். ஆகையால் ஓடி விடுங்கள்" என்றார் கோவிந்தன்.

"அதைப்பற்றி கவலையில்லை. நான் கொலை செய்யவில்லை என்பதற்கு வேண்டுமென்கிற ருஜு அடுத்த உள்ளே பீரோவிலே இருக்கிறது. இதோ கொண்டு வருகிறேன்" என்று தங்க சூர்ணம் போனார். அடுத்த நிமிஷம் டபாரென்று குண்டு வெடிக்கும் சப்தம் கேட்டது. தங்க சூர்ணம் பிணமாய்க் கிடந்தார்.

உமது குழந்தை ஈரல் குலைகட்டி பெருத் திருந்தால்

எல்லித வைத்திய முறையினாலும் குணப்படுத்த முடியாதிருந்த இக்குலைநோய், ஓர் அற்புத ஆராய்ச்சி முறையினால் வைத்தியத்திற்கு கட்டுப்பட்டு, சென்ற 36 வருஷங்களாக பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை காப்பாற்றியுள்ளது. இந்தியா பூராவிலுள்ள வைத்திய நிபுணர்களால் போற்றப்பட்டது.

ஜம்மியின் லிவர் க்யூர் உபயோகியுங்கள்.

ஈரல் குலைகட்டி முதலியவைகளுக்கு இது ஒரு அற்புத நிவாரணி.

எல்லா மருந்துஷாப்பிலும் கிடைக்கும்.

ஜம்மி வேங்கடரமணய்யா அண்டு சன்ஸ், மைலாபூர் — மதறாஸ்.

சப் ஆபீஸ்: கும்பகோணம். பிராஞ்சுகள்: கல்கத்தா, லக்னோ, பம்பாய், பெங்களூர், திருச்சினாப்பள்ளி, விஜயநகரம்.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்.

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி. குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, தைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

பிரகாசமும் சாயையும்

சரத் சந்திரர் எழுதியது

★

ஆரம்பத்திலேயே மட்டம் தட்டியிருந்தால், இம்மாதிரி நடந்திராது. அப்பொழுது முடியவில்லை. முடியும் என்றாலும்—உலகத்தில் எவ்வளவோ நடக்கின்றன—எல்லாமா எனக்குத் தெரிகிறது? இந்தக் கதையைப் படியுங்கள். இதனால் எவ்வித ஹானியும் ஏற்படாது என்பது என் நம்பிக்கை. கதை எழுத உட்காரும் போது எல்லாம் உண்மையாக எழுத வேண்டுமென்று பிரதிக்ஞை செய்து கொள்ள முடிவதில்லை. இரண்டொரு தவறுகளும் இருக்கலாம்—அபிப்பிராய பேதங்களும் இருக்கலாம்—இதனால் எல்லாம் என்ன குடி முழுகிப் போய் விடப் போகிறது? ஆமாம், கதாநாயகன் பெயர் யக்ஞதத்த முகர்ஜி. ஆனால் ஸுரமா அவனை 'பிரகாசன்' என்றுதான் அழைப்பது வழக்கம். கதாநாயகியின் பெயர்தான் தெரிந்து விட்டதே. ஆனால் யக்ஞதத்தன் அவளை 'சாயா' என்றுதான் அழைப்பது வழக்கம். சில தினங்கள் வரை, யார் பிரகாசம், யார் சாயை என்ற விவாதம் இருந்தது. ஆனால் ஒருவிதமான முடிவும் ஏற்படவில்லை. கடைசியில் ஒருநாள் ஸுரமா," உன் கூர்மையான புத்திக்கு இது கூட விளங்கவில்லையா? நீ இல்லா விட்டால் நான் ஏது? ஆனால் நான் இல்லாமல் நீ நெடு நாள் இருக்கலாம்; ஆகையால் நீ பிரகாசம், நான் சாயை" என்றாள்.

யக்ஞதத்தன் சிரித்தான். "ஒரு பக்ஷமாக 'டிக்ரி' பெற விரும்பினால். வாங்கிக் கொள். ஆனால் விஷயம் தீர்ந்துவிடவில்லை" என்றான்.

"இல்லை, தீர்ந்து விட்டது, அழகாகத் தீர்ந்து விட்டது. பிரகாஷ்! இனிச் சண்டையிட வேண்டிய அவசியம் இல்லை. நீ பிரகாசம், நான் சாயை!" என்று சொல்லிக் கொண்டே சாயா பலவிதமாக பிரகாசனை ஓய வைத்து விட்டாள்.

* * * * *

கதை இதுவரையில் தான் வந்திருக்கிறது. ஆனால், இனி உங்களுக்குள் சண்டை வந்து விடப் போகிறதே என்ற பயம் தான். இவர்கள் 'ஸ்திரீ-புருஷர்' என்று நீங்கள் சொல்லுவீர்கள். நான் சொல்வேன், ஸ்திரீ-புருஷர்கள்தான். ஆனால் கணவன் மனைவி இல்லை என்று உங்கள் புருவங்கள் விரியும். அப்படியானால் முறையற்ற காதலா? என்பீர்கள். இல்லை, புனிதமான காதல் என்பேன் நான். உங்களுக்கு நம்பிக்கையே ஏற்படாது. முகத்தைத் தூக்கிக்கொண்டு. 'வயதென்ன?' என்று கேட்பீர்கள். பிரகாசனுக்கு வயது இருபத்தொன்று; சாயாவுக்குப் பதினெட்டு என்பேன் நான். இதற்கு மேலும் அறிய விரும்பினால் இதோ ஆரம்பிக்கிறேன்.

யக்ஞதத்தனுக்கு சிறிய அழகிய தாடி, கண்ணுக்குக் கண்ணாடி, தலையில் 'லவண்டர்' வாஸனை, தேர்ந்தெடுத்த அழகான கரையுள்ள வேஷ்டி. சட்டைக்கு 'ஸெண்ட்' போட்டுக் கொண்டிருப்பான். காலில் சாயா தன் கையினால் பூ வேலை செய்த மக்மல் ஸ்லிப்பர் லைப்ரரி நிறையப் புஸ்தகங்கள். வீட்டில் அநேக வேலைக்காரர்கள். மேஜையருகே அமர்ந்து யக்ஞதத்தன் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறான். எதிரே பெரிய நிலைக்கண்ணாடி: படுதாவை விலக்கிக்கொண்டு ஜாக்கிரதையாக சாயா உள்ளே பிரவேசிக்கிறாள். பேசாமல் பின்னால் வந்து பிரகாசனின் கண்ணைப் பொத்த வேண்டுமென்பது அவள் விருப்பம். ஆனால் அருகே வந்து கையை எடுத்ததுமே அவள் உருவம் கண்ணாடியில் தெரிந்துவிட்டது. பார்த்தான் யக்ஞதத்தன்; அவள் முகத்தைப் பார்த்துப் புன்னகை புரிந்து கொண்டிருந்தான். ஸுரமாவும் சிரித்துவிட்டாள். "ஏன் பார்த்தாய்?" என்றாள்.

"இது என் குற்றமா?"

"பின்னே யார் குற்றம்?"

"பாதி உன்னுடையது, பாதி இந்தக் கண்ணாடியினுடையது!"

"இப்பொழுதே அதை உடைத்துவிடுகிறேன்!"

"உடைத்துவிடாதே, இதை உடைத்துவிடுவாயானால் மற்றொரு பாதிக்கு என்ன செய்வாய்?"

ஸுரமா இரண்டொரு தரம் அசைந்து கொடுத்துக்கொண்டு "பிரகாஷ்!" என்றாள்.

"சொல்லு சாயா!"

"நீ ஏன் இளைத்துப் போகிறாய்?"

"எனக்கு அப்படித் தோன்றவில்லையே!"

"நீ ஏன் சாப்பிடுவதில்லை?"

யக்ஞதத்தன் சிரித்துக் கொண்டே, "ஸுரோ, சண்டைபோட வந்திருக்கிறாயா?" என்றான்.

"ஆமாம்!"

"நான் அதற்குத் தயாராக இல்லை."

"நீ ஏன் கல்யாணம் செய்து கொள்ளவில்லை?"

"இதற்குத்தான் தினம் ஒரு முறை பதில் சொல்லுகிறேனே!"

"இல்லை, செய்து கொண்டே ஆக வேண்டும்."

"ஸுரோ, நீ ஏன் விவாகம் செய்துகொள்ளவில்லை?"

ஸுரமா யக்ஞதத்தனின் கையிலிருந்த கடிதத்தை பிடுங்கிக்கொண்டு, "சீச்சீ விதவைகள் எங்கேயாவது கல்யாணம் செய்துகொள்வதுண்டா?" என்றாள்.

யக்ஞதத்தன் சிறிது நேரம் சும்மா இருந்தான். பிறகு, "எப்படிச் சொல்வது? சிலர் செய்து கொள்வதுண்டு என்கிறார்கள். சிலர் இல்லை என்கிறார்கள்" என்றான்.

"அப்படியானால் இந்த விஷயத்தில் என்னைக் குற்றவாளியாக்க ஏன் முயற்சிக்கிறாய்?"

யக்ஞதத்தன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டு, "அப்படியானால் எனக்குஸேவை செய்தே உன் வாழ்நாளைக் கழித்து விடுவாயா?" என்றான்.

"உம்!" என்று சொல்லி அவள் கண்ணீர் விட்டு அழலானாள்.

யக்ஞதத்தன் அவள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, "ஸுரோ, உன் மனோபீஷ்டம் என்ன? எனக்கு விவரமாய்ச் சொல்லமாட்டாயா?" என்றான்,

"என்னை பிருந்தாவனத்திற்கு அனுப்பிவிடு."

"என்னை விட்டு விட்டுத் தனியாக இருப்பாயா?"

ஸுரமாவின் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை. இரண்டு தரம் தலையை அசைத்தாள். கண்களில் கண்ணீர் பெருகி வழிந்தது.

2

"யக்ஞ அண்ணா, அந்தக் கதையை மறுபடியும் ஒரு தரம் சொல்லமாட்டாயா?"

"எந்தக் கதையை ஸுரமா?"

"அதைத்தான், என்னை பிருந்தாவனத்தில் விலைக்கு வாங்கினாயே; எத்தனை ரூபாய்க்கு வாங்கினாய்?"

"ஐம்பது ரூபாய்க்கு. அப்பொழுது எனக்கு வயது பதினெட்டு. பி. ஏ. பரீக்ஷை எழுதிவிட்டு அந்தப் பக்கம் சுற்றுவதற்கு வந்திருந்தேன். தாய் உயிருடன் இருந்தாள். அவளும் கூட வந்திருந்தாள், ஒரு நாள் மத்தியானம் மாலதி குஞ்சத்திற்கருகில் வைஷ்ணவிகளின் கூட்டமொன்று பாடிக் கொண்டே சென்றது. முதல் முதல் உன்னை அங்கேதான் கண்டேன். யௌவனத்தின் முதல்படி ஏறும் போது உலகம் அழகாகவும் இனிமையாகவும் தோன்றுகிறது. அதன் இனிமை முழுவதையும் என் கண்களாலேயே பருக முடியவில்லை. துணையிருந்தால், இன்னும் இரண்டு கண்கள் இதைப போலவே ஒன்றாக இந்த சோபையின் இனிமையை அனுபவிக்க முடியுமானால்—அவளுக்கு நான் சொல்ல முடியும்—இதென்ன ஸுரமா அழுகிறாயா என்ன?" என்றான்.

"இல்லை, நீ சொல்."

"நீ அப்பொழுது பனிரண்டு வயதுள்ள புதிய வைஷ்ணவி. கையில் தம்பூரா இருந்தது; பாட்டுப் பாடிக் கொண்டிருந்தாய்."

'போயேன், நானென்னபாட்டு பாடியிருக்கப் போகிறேன்?"

"அப்பொழுது உன்னால் பாட முடிந்தது. அதன் பிறகு மிகுந்த சிரமத்தின் பேரில் உன்னை அடைந்தேன். நீ பிராம்மணப் பெண், பால்ய விதவை. உன் தாய் தீர்த்த யாத்திரைக்கு வந்து பிறகு வீடு திரும்பவில்லை, ஸ்வர்க்கத்திற்குச் சென்று விட்டாள். நான் உன்னை அழைத்துக் கொண்டு வந்து அம்மாவிடம் ஒப்புவித்தேன். அவள் உன்னை மார்புடன் அணைத்துக் கொண்டாள். இதன் பிறகு அவள் இறக்கும்போது எனக்கே திருப்பிக் கொடுத்து விட்டாள்" என்றான் யக்ஞதத்தன்.

"யக்ஞ அண்ணா, உங்கள் வீடு எங்கே?"

"சீங்கோ கிருஷ்ண நகருக்கு அருகே என்று கேள்வி."

"எனக்கு வேறு ஒருவரும் இல்லையா?"

"நான் இல்லையா? ஸுரமா, நான் தான் எல்லாம்!"

ஸுரமாவின் இமைகள் மீண்டும் நனைந்தன, "நீ என்னை மறுபடியும் விற்றுவிட முடியுமா?" என்றாள்.

"இல்லை, அது முடியாது. என்னை விற்றுக்கொள்ளாமல் இந்தக் காரியம் நடவாது."

ஸுரமா ஒன்றும் பேசவில்லை முன்போல் கண்ணீர் வழியும் கண்களுடன் அவள் பக்கம் பார்த்தாள், வெகு நேரத்திற்கு பிறகு மெதுவாக, "நீ அண்ணா, நான் தங்கை, நம் இருவருக்கும் மத்தியில் ஒரு மதனியை அழைத்துக்கொண்டு வாயேன்!" என்றாள்.

"ஏன், எதற்காக?"

"நாள்பூராவும் அவளுக்குச் சிங்காரம் செய்து அவளை அழைத்து வந்து உன் அருகே உட்கார வைப்பேன்.

"நீ அதை உன் முழு மனதுடன் செய்வாயா?"

ஸுரமா தலை நிமிர்ந்து கண் கொட்டாமல் அவன் முகத்தைப் பார்த்தாள்; பிறகு, "அவளைக் கண்டு பொறாமைப்பட நான் என்ன அப்படி இழிவானவளா?" என்றாள்.

"பொறாமைப்படமாட்டாய், ஆனால் உன் ஸ்தானத்தை இழந்துவிடுவாய் அல்லவா?"

"ஏன் இழக்கப் போகிறேன்? நான் ராஜாவுக்கு ராஜாவாகவே இருப்பேன், சும்மா ஒரு மந்திரியை நியமிக்கிறேன். இருவருமாகச் சேர்ந்து உன் ராஜ்யத்தை நடத்துவோம், மிக்க ஆனந்தமாக இருக்கும்."

"இங்கே பார் சாயா. விவாகம் செய்து கொள்ள எனக்கு இஷ்டமில்லை; ஆனால் உனக்கு ஒரு தோழி வேண்டுமென்றால் செய்து கொள்கிறேன்."

"ஆமாம், அவசியம் செய்து கொள். மிக்க ஆனந்தமாக இருக்கும். இருவரும் ஸந்தோஷமாக நாட்களை கழிப்போம்" என்று சொல்லிவிட்டு மனதிற்குள் "மூன்று குலத்திலும் எனக்கு ஒருவரும் இல்லை. மான அவமானமும் இல்லை. ஆனால் என் பொருட்டு நீ ஏன் களங்கத்தை சுமக்க வேண்டும்? நீ எனது கடவுள்; நீ விவாகம் செய்து

"ஜயம்"

மொழிபெயர்த்தது

கொள், உன் முகத்தைப் பார்த்து நான் எல்லாவற்றையும் சகித்துக்கொள்கிறேன்" என்று சொல்லிக்கொண்டாள்.

3

கல்கத்தாவில் பலர் தங்கள் பக்கத்து வீட்டில் யார் இருக்கிறார்கள் என்பதைக் கூடத் தெரிந்து கொள்வதில்லை. சிலர் நன்றாகத் தெரிந்து கொண்டிருப்பார்கள். தெரிந்தவர்கள் "யக்ஞதத்தன் பி. ஏ. பாஸ் செய்திருந்தால் என்ன சுத்த உதவாக்கரைப் பையன். ஸுரமா ஆட்டிவைத்தபடி ஆடுகிறான்," என்று சொல்வதுண்டு. சில சமயம் இந்த வார்த்தைகள் ஸுரமா யக்ஞதத்தன், செவிகளிலும் விழுவதுண்டு. கேட்டு இருவரும் சிரிப்பார்கள்.

ஆனால் நீ நல்லவனாக இருந்தாலும் சரி, கெட்டவனாக இருந்தாலும் சரி, பெரிய மனிதனாக இருந்தால் உன் வீட்டுக்கு எல்லோரும் வருவார்கள்— குறிப்பாக ஸ்திரீகள் சிலர் ஸுரமாவிடம், "ஸுரமா, உன் அண்ணாவுக்குக் கல்யாணம் செய்து வைக்கக் கூடாதா?" என்று கேட்பார்கள்.

"செய்து வைக்க வேண்டும், நல்ல பெண்ணைப் பார்த்து!" என்று பதிலளிப்பாள் ஸுரமா.

ஸுரமாவின் தோழி சிரித்துக் கொண்டே "சரிதான் நல்ல பெண் கிடைப்பது கஷ்டம். உன்னுடைய அழகைக் கண்டு அவன் கண்கள் பூத்துப் போயிருக்கும் போது, அவன்—" என்பாள்.

"ஓ, நாசமாய்ப் போறவளே" என்று சொல்லும்போதே ஸுரமாவின் கன்னங்கள் அன்பினாலும் கர்வத்தினாலும் சிவந்துவிடும்.

அன்று மத்தியானம் மழை பெய்து கொண்டிருந்தது. ஸுரமா அறைக்குள் நுழைந்ததும், "ஒரு பெண் பார்த்து விட்டு வந்திருக்கிறேன்!" என்றாள்.

"போ, ஒரு கவலை ஒழிந்தது, எங்கே? சொல்லு கேட்போம்!" என்றான் யக்ஞதத்தன்.

"அந்தத்தெரு மித்தர் வீட்டில்"

"பிராமணனாக இருந்து கொண்டு காயஸ்தன் வீட்டிலா?"

"ஏன் காயஸ்தர்கள் வீட்டில் பிராம்மணர்கள் இருக்க மாட்டார்களா? அவள் தாய் அங்கே சமையல் வேலை செய்கிறாள். பெண் ரொம்ப நன்றாக இருப்பாள் என்று கேள்வி, பார்த்து விட்டு வா. மனதிற்குப் பிடித்திருந்தால் வீட்டுக்கு அழைத்து வந்து விடலாம்!"

"நான் என்ன அப்படிப் பட்ட அபாக்யவானா?

'ஊரிலுள்ள பிச்சைக்காரிகள் இல்லாமல் என் வாழ்நாள் கழியாதா?'

"பிச்சைக்காரிகளைப் பிடித்துக்கொண்டு வருவது உனக்குப் புதிதல்லவே!"

"உம், அப்புறம்?"

"இல்லை, நீ போ, போய் பார்த்துவிட்டுவா. மனதிற்குப் பிடித்திருந்தால், முடியாது என்று மாத்திரம் சொல்லி விடாதே."

"எவ்விதத்திலும் மனதிற்குப் பிடிக்கப் போவதென்னவோ இல்லை."

"பிடிக்கும், ஐயா, கட்டாயம் பிடிக்கும். ஒருமுறை பார்த்து விட்டு வா!"

பிறகு சாயாதேவி பிரகாசதேவனுக்கு அடியிற் கண்ட தண்டனையை அளித்தாள். அவனுக்கு வாசனைத் திரவியங்கள் பூசி, தலைசீவி, அவனைச் சிங்காரித்துக் கண்ணாடியின் முன் கொண்டு வந்து நிறுத்தியபோது யக்ஞதத்தனுக்கே வெட்கமாகப் போய்விட்டது. அவன் "சீ சீ, இதெல்லாம் ரொம்ப அதிகப்படி" என்றான்.

"இருக்கட்டும், நீ போய் பார்த்து விட்டு வா."

வண்டியில் ஏறி பெண் பார்க்கச் சென்றான் யக்ஞதத்தன். வழியில்கண்ட ஒரு நண்பனையும் தன்னுடன் அழைத்துக் கொண்டான். "வா, மித்தர் வீட்டுக்குச்சென்று 'டிபன்' சாப்பிட்டு விட்டுவரலாம்" என்றான்.

"இதன் கருத்து?"

"அவர் வீட்டில் ஒரு பிச்சைக்காரப்பெண் இருக்கிறாள். அவளைக் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும்!"

"என்ன அப்பா சொல்கிறாய் நீ? யார் சொன்னார்கள் உனக்கு இதை?"

"நீங்கள் பொறாமைப்பட்டு சாகிறீர்களே, அதே சாயாதேவி தான்!"

யக்ஞதத்தன் தன் நண்பனுடன் பெண்பார்க்க மித்தர் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். பெண் ஜமக்காளத்தின் மேல் உட்கார்ந்திருந்தாள். பல தடவை வெளுத்து வலையைப்போல இருந்த ஒரு சுதேசிப் புடவையை உடுத்தியிருந்தாள். கையில் கருவளையல்-தாம்பர வர்ணத்தில் ஒரு பொற் கடகம் அணிந்திருந்தாள். பல இடங்களில் அதன் உள்ளே இருக்கும் செப்புக்கட்டை தெரிந்தது. தலையில் தடவிக்கொண்டிருந்த எண்ணெய் நெற்றி பூராவும் வழிந்தது. நடுத் தலையில் பின்னலை எடுத்துக் கட்டிக் கொண்டிருந்தாள். நண்பர்கள் இருவரும் பார்த்துவிட்டு நகைத்தனர். சிரிப்பை அடக்கிக் கொண்டு, பெண்ணைப் பார்த்து, "உன் பெயர் என்ன?" என்று கேட்டான் யக்ஞதத்தன்.

பெண் தன்னுடைய பெரிய பெரிய கரு விழிகளை அவன் முகத்தின் மேல் செலுத்தி, "பிரதுல்!" என்றது.

யக்ஞதத்தன் தன் நண்பனைக் கிள்ளிப் புன்னகையுடன். "ஏன் அப்பா கதாதரன் அல்லவே!" என்றான்.

நண்பன் மெள்ள அவனை நெட்டி விட்டு, "அதிகமாக அளக்காதே, சீக்கிரம் தீர்மானம் செய்!" என்றான்.

'சரி, என்னபடித்திருக்கிறாய்?"

"ஒன்றுமில்லை."

"ரொம்ப நல்லதாயிற்று."

"வீட்டுக் காரியம் செய்யத் தெரியுமா?"

பிரதுல் தலையை அசைத்தாள். அருகே ஒரு வேலைக்காரி நின்றிருந்தாள். இவள் வியாக்யானம் செய்தாள். "ரொம்பக் கெட்டிக்காரப் பெண் பாபுஜி! சமையல் செய்வது, பரிமாறுவது, வீட்டு வேலை, இவைகளில் தன் தாய்க்கு சமானமாய்ச் செய்வாள், வாய்விட்டுப் பேச மாட்டாள். மிக்க சாந்தம்." என்றாள்.

"அதுதான் பார்த்துக்கொண்டிருக்கிறேனே. உனக்கு அப்பா இருக்கிறாரா?"

"இல்லை."

"எங்கள் வீட்டுக்கு வருகிறாயா?"

"ஆஹா" என்று தலையசைத்தாள் அந்தப் பெண். இதற்குள் அந்த ஜன்னல் பக்கம் கவனம் சென்றது. அங்கே இரண்டு கருவிழிகள் அனலைக் கக்கிக் கொண்டிருந்தன. அவள் பயந்து கொண்டு, "இல்லை" என்றாள்.

வெளியே வந்து மித்தர் பாபுவைச் சந்தித்தார்கள்.

"பெண் எப்படி?"

"நல்ல பெண்!"

"அப்படியானால் முகூர்த்தம் குறிப்பிடலாமா?"

"ஆஹா!"

4

பத்துப் பனிரண்டு வயதுள்ள சிறுவன் ஒருவன் சுவாரஸ்யமான நாவலைப் படித்துக் கொண்டிருக்கும் போது, ரஸமற்ற ஒருவன் அதைப் பிடுங்கிக் கொண்டு விட்டானானால் அவன் நிலைமை எப்படி இருக்கும்? அவன் உள்ளம் நொந்து சங்கையடைந்து வாடிய முகத்துடன், இந்த அறைக்கும் அந்த அறைக்குமாய் ஓடுவான். பயந்த பார்வையுடன் தனக்குப் பிரியமான அப் பொருளைத் தேடிப் பிடிப்பதில் முனைந்து நிற்பான். அப்பொழுது அவனுக்கு, யாரிடம் கோபித்துக் கொள்ளலாம் என்று தோன்றும். இதே மாதிரித்தான் ஸுரமாவும் யக்ஞதத்தனுக்காகத் துடிக்கலானாள். அவளுக்கென்ன தெரியும், அவள் எதைத் தேடிப் பிடிக்கப் போகிறாள். நாற்காலி, மேஜை, ஸோபா, கட்டில், அறை, தாழ்வாரம், எல்லாவற்றின் மீதும் அவள் கோபம் கொண்டாள். தெருப்பக்கம் இருந்த ஜன்னல் ஒன்று கூட அவளுக்குப் பிடிக்கவில்லை. இங்கு சற்றும் அங்கு சற்றுமாக உட்காரலானாள். யக்ஞதத்தன் அறைக்குள் நுழைந்தான்.

"பிரகாச மஹா சயரே, என்ன ஆயிற்று?"

பிரகாசனின் முகம் கம்பீரமடைந்தது.

"பெண் பிடித்ததா?"

"பிடித்தது."

"கல்யாணம் எப்பொழுது?"

"அநேகமாய், இந்த மாதத்திலேயே—"

உற்சாகத்துடன் ஸுரமா அருகே வந்தாள். ஆனால் எவ்வித தொந்தரவும் செய்யவில்லை. "என் தலைமேல் ஆணை. உண்மையாகச்சொல்!" என்றாள்

"இதென்ன ஆபத்து, உண்மையாகத்தான் சொல்லுகிறேன்."

"என் முகத்தைப்பார், சொல், பிடித்திருக்கிறதா?"

"ஆமாம்."

திடீரென்று தேடிப்பார்த்தும் ஸுரமாவுக்கு வார்த்தை அகப்படவில்லை. அடிபட்ட குழந்தை அழுவதற்கு முன் எப்படி இங்குமங்கும் தலையை ஆட்டி அர்த்தமில்லாமல் பேசுகிறதோ—அதே போல் ஸுரமாவும் தலையை ஆட்டிக்கொண்டே அழுத்தமான குரலில், "நான் முன்பே கூறவில்லையா?" என்றாள்.

யக்ஞதத்தன் ஏதோ தன் நினைவில் ஆழ்ந்திருந்தான் ஆகையால் அவன் மறுக்கிறானா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஏனென்றால் பெண் பிடிக்கும் என்று ஸுரமா ஒருபோதும் சொன்னதில்லை. அவளும் பெண்ணை நேரில் பார்த்ததில்லை. தவிர இவ்வளவு சீக்கிரம் பெண் பிடித்து விவாகம் நிச்சயமாகும் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை. ஆகையால் நாள் பூராவும் தன் அறையில் அமர்ந்து இதைப்பற்றியே சிந்திக்கலானாள்.

இரண்டு தினங்களுக்குப் பிறகு யக்ஞதத்தனுக்கு ஒருவாறு பிரமை நீங்கிற்று, அவன் "ஸுரோ, எனக்கு இந்த கல்யாணத்தைச் செய்து வைக்காதே!" என்றான்.

"பேஷ், இது எங்கேயாவது நடக்குமா? நிச்சயம் செய்தாகி விட்டதே!"

"நிச்சயம் ஒன்றும் செய்யவில்லை"

"இல்லை அது முடியாது. துக்கப்படும் பெண்ணை சுகப்படுத்த வேண்டும். இதைச் சற்று யோசி. தவிர வாக்கு கொடுத்துவிட்டு அதிலிருந்து மாறலாமா?"

யக்ஞதத்தனுக்கு பிரதுல குமாரியின் முகம் ஞாபகத்திற்கு வந்தது. அன்று தினம் அவளுடைய கருவிழிகளில் அவன் பொறுமையையும்சாந்தத்தையும் கண்டான். ஆகையால் அவன் மௌனமாக இருந்தான். எனினும் பல விஷயங்களைச் சிந்திக்கலானான். ஸுரமாவைப் பற்றித்தான் அதிகமாக எண்ணினான். மழைகாலத்து ஈசல் வீட்டை நிறைத்துக் கொள்வதைப் போல், அவன் மனம் அதுபினால் நிறைந்தது. ஆனால் அது இருக்குமிடத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. ஸுரமாவின் வாய் வார்த்தைகள் ஹிருதயத்திலிருந்து எந்த விருப்பத்தைத் திரட்டிக் கொண்டு வருகிறது என்பதும் தெரியவில்லை. அவன் கண்முன் மங்கலாக வலை விரிந்ததைப் போல் இருந்தது. அதில் ஸுரமாவின் முகம் தென்படவில்லை.

(தொடரும்)

அட்டைப் படம்

பம்பாய் டாக்கீஸாரின் 'ஜூலா'வில் ஒரு காட்சி. லீலா சிட்னிஸ், பிதாவாலா, அசோக் குமார்.

தேவை

காபி, தேயிலை, முந்திரி, மிளகு, ஏலக்காய், சீயக்காய், பூச்சாங்காய் மற்றும் இதர காட்டு சாமான்களுக்கு ஆர்டர்கள் வாங்க சுறுசுறுப்பு உள்ள ஏஜண்டுகள் தேவை. கடிதங்கள் ஆங்கிலத்திலேயே எழுதப்பட வேண்டும். விவரங்களுக்கு எழுதவும்.

சுஜீர் அனந்த நாயக், காபி வியாபாரி, கோயமுத்தூர்.

கிருஷ்ணகுமாரி

நாடகம்

★

"நியாயவாதி"
எழுதியது

ராஜஸ்தானத்தின் ஜோதியும் வீரமும் மங்கியிருந்த காலம் அது. அதன் அரசர்கள் தங்கள் சமஸ்தானங்களைக் கொள்ளையடிக்க வந்த மகாராஷ்டிரரையும் பட்டாணியரையும் எதிர்த்து நிற்க வல்லமையின்றி தவித்த சமயம் அது. எனினும் அதன் பெண் குலத்தின் பெருமைக்கு ஒரு சிறு குறைவும் இல்லையென்பதற்கு கிருஷ்ணகுமாரியின் தியாகமே சான்றாகும். தனது வம்சத்தின் கௌரவத்துக்காகவும் தனது சமஸ்தானத்து பிரஜைகளது சபதத்துக்காகவும் தனது உயிரைக்கொடுத்த இவ்விராஜகுமாரியை சரித்திரம் என்றும் போற்றும் என்பதில் ஐயமில்லை.

நாடக பாத்திரங்கள்:

பீம் ஸிங்	—	மேவார் சமஸ்தானத்து மகாராணா
ஜீவன் ஸிங்	—	அவனது சகோதரன்
மான்ஸிங்	—	ஜோத்பூர் சமஸ்தானத்து ராஜா
தௌலத்ராவ் ஸிந்தியா	—	மகாராஷ்டிர சமஸ்தானாதிபதி
அம்பாஜி	—	ஸிந்தியாவின் மந்திரி
மேர்ஸியர்	—	கவர்னர் ஜெனரலின் தூதர்
கிருஷ்ணகுமாரி	—	பீம்ஸிங்கின் மகள். மேவார் ராஜகுமாரி (கதாநாயகி)
ராணி	—	மேவார் அரசி. கிருஷ்ணகுமாரியின் மாதா
அம்பிகை	—	கிருஷ்ணகுமாரியின் தோழி

மேவார் மந்திரி, தூதர்கள் இன்னும் பிறர்.

கதை நிகழுமிடம்: மேவாரின் தலைநகரான உதயபுரியிலும் அதன்அருகேயும்.

காலம்: கி. பி. 1807-ம் வருஷம்.

முதல் காட்சி

[மேவார் சமஸ்தானத்துக்கு வெளியே சற்று தூரத்தில் அமைக்கப்பட்ட ஸிந்தியாவின் பாசறையில், தௌலத்ராவ் ஸிந்தியாவும் அவர் பக்கத்தில் மந்திரி அம்பாஜியும் ஜோத்பூர் அரசன் மான்ஸிங்கும் ஆஸனங்களில் இருக்கின்றனர். சற்று தூரத்தில் பரிவாரங்கள் மரியாதையாய் நிற்கின்றனர்.]

தௌலத்ராவ்:—(மான் ஸிங்கை நோக்கி) அதைப்பற்றி நீர் கவலைப்பட வேண்டாம். கிருஷ்ணகுமாரியை உமக்கே உரியவளாக ஆக்குவோம்.

அம்பாஜி:—இன்னும் சற்று நேரத்தில் மகாராணா பீம்சிங்கை இங்கே பார்க்கலாம். அவரை சரிப்படுத்துவது சிரமமான காரியமே. அந்த சிரமத்துக்காக...

மான்ஸிங்:—அதற்காகத்தான் நான் ஒரு லக்ஷம் ரூபாய் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறேனே!

அம்பாஜி:—நன்றாய் இருக்கிறது? ராஜஸ்தானத்தின் ஜோதி என்று புகழப்படும் மங்கையர் திலகமாகிய மேவார் ராஜபுத்திரி கிருஷ்ணகுமாரி ஜெய்ப்பூர் ராஜாவுக்கு மணமகளாய் நிச்சயிக்கப்பட்டிருக்கிறாள் என்பதை நீர் அறியீரோ? அவனது பிதாவை வரவழைத்து பயமுறுத்தி அந்த ஏற்பாட்டை மாற்றும்படி செய்வது லகுவான காரியமா? நமது விருப்பத்திற்கு அவர் இணங்காவிட்டால் நமது படைகளை அவரது சமஸ்தானத்தின் மீது நடத்த வேண்டியதாகவும் நேரிடும். இவற்றையெல்லாம் கருதுங்கால் குறைந்தது 12 லக்ஷம் ரூபாயாவது காணிக்கையாய் வந்தால் தான் இந்த காரியத்தில் பிரவேசிக்கலாம்.

மான்ஸிங்:—பனிரெண்டு லக்ஷமா? அவ்வளவு பெரிய தொகைக்கு நான் எங்கே போவது?

அம்பாஜி:—பணத்துக்கு உமக்கு ஏன் கவலை? மேவாரின் மருமகனாகப்போகிறீர்! கிருஷ்ணகுமாரிக்கு சீர் வரிசைகள் வரமாட்டாவா? உமது சமஸ்தானப் பிரஜைகள் மீது வரிகள் விதிக்கக்கூடாதா?

ஸிந்தியா:—ஆமாம்! பணம் இல்லாவிடில் இதில் உமக்காக எதற்கு, சிரமப்படவேண்டும்? நானே அந்த இளவரசியை...

அம்பாஜி:—(ஸிந்தியாவிடம் ரகசியமாய்) இதைப் பற்றி இவனிடம் ஒன்றும் சொல்ல வேண்டாம். அது ரகசியமாகவே இருக்கட்டும் (மான் ஸிங்கை நோக்கி) பணத்தைப்பற்றி நீர் சிரமப்படவேண்டாம். நானே என் ஆட்களை விட்டு வசூலிக்கிறேன். மகாராணா பீம்ஸிங் வரும் நேரம் ஆயிற்று. நீர் இங்கே இருக்கவேண்டாம் (மான்ஸிங் வெளியே போகிறான்) மகாராஜா அவர்கள் முன்யோசனையின்றி எதையும் கூறக்கூடாது இன்றேல் காரியம் கைகூடாது.

ஸிந்தியா;— கிருஷ்ணகுமாரி-

அம்பாஜி:—அழகில் ஒப்பற்ற அந்த ராஜபுத்திரியை தாங்களே அடையப் போகிறீர்கள். ஆனால் அதை முன்கூட்டியே வெளியிட்டால் எத்தனையோ இடைஞ்சல்கள் ஏற்படக்கூடும்.

ஸிந்தியா:—(மீசையை முறுக்கிக்கொண்டு) இடைஞ்சல்களா? எனது சேனாபலத்தைக்கொண்டு எந்த தடையையும் நீக்குவேன்? அதன் முன் பீம்ஸிங் எம்மாத்திரம்? அவனது சமஸ்தானத்தைக் கைப்பற்றி அவனது மகளை சிறைப்படுத்த எனக்கு சக்தி இல்லையா?

அம்பாஜி:—(பணிவாய்) மகாராஜா நான் எண்பது வயது கிழவன். எவ்வளவோ அனுபோகத்தைக் கண்டவன். என்வார்த்தையை தாங்கள் தட்டமாட்டீர்கள் என்பதே எனது பிரார்த்தனை. சக்தியை உபயோகிப்பதைவிட யுக்தியால் வெல்வது தான் அறிவாளிகளின் வழி. இந்த ராஜபுத்திர ஜாதியார் மானத்தையும் கௌரவத்தையும் பிராணனை விட உயர்ந்தனவாக மதிப்பவர்கள். அவர்களை அவமானப்படுத்தினால் அதனால் நமக்கு காரியம் கைகூடாது. நீங்கள் இதை மனத்தில் வைத்துக் கொண்டு மௌனமாய் இருந்தால் நல்லது; மகாராணாவை நான் சரிப்படுத்துகிறேன். அவன் ஜய்ப்பூர் ராஜாவை மணமகனாக நிச்சயித்திருக்கிறான். அதை முதலில் மாற்றி விடச் செய்கிறேன். பிறகு நமது யோசனையை வெளியிடுவோம்.

ஸிந்தியா:—நீர் அவனை என்ன கேட்கப் போகிறீர்?

அம்பாஜி:—மான்ஸிங்குக்கு முந்தி ஜோத்பூர் சமஸ்தானாதிபதியாயிருந்த அரசனுக்கு கிருஷ்ணகுமாரி மணமகளாக நிச்சயிக்கப்பட்டிருந்தாள் அல்லவா? அவன் இறந்ததினால் அது தடைபட்டது. ஜய்ப்பூர் அரசனுக்கு நிச்சயம் செய்யும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இது பிசகு என்று, கிருஷ்ணகுமாரி ஜோதிபுரி மன்னனுக்கு உரியவள் என்றும் நான் வாதித்து பீம்ஸிங்கை சரிப்படுத்துகிறேன்.

(வெளியே சப்தம், மகாராணா பீம் சிங்குக்கு ஜே) இதோ அவனே வருகிறான். நீங்கள் சும்மா இருங்கள்.

[மேவார் மகாராணா பீம் ஸிங் தன் பரிவாரங்களுடன் பிரவேசிக்கிறான். ஸிந்தியாவும் அம்பாஜியும் அவனை வரவேற்கின்றனர். பீம் ஸிங் அவர்களின் நடுவேயுள்ள ஆஸனத்தில் அமர்கிறான்.]

அம்பாஜி:—மகாராணாவின் வரவு நல்வரவாகுக.

பீம்சிங்:—இந்த சந்திப்பால் நமது இரு சமஸ்தானங்களுக்கும் இடையே நல்லுணர்ச்சியும் சிநேக உறவும் உண்டாக வேண்டும் என்று விரும்புகிறேன்.

தௌலத் ராவ்:—என் விருப்பமும் அப்படியே.

அம்பாஜி:—மகாராணாவின் நன்மையையும் அவரது சமஸ்தானத்தின் க்ஷேமத்தையும் உத்தேசித்துத் தான் நாம் இங்கே ஆலோசனை செய்ய கூடியுள்ளோம். ராஜஸ்தானத்திலுள்ள எல்லா சமஸ்தானங்களுக்கும் இடையே நட்பும் நல்லுறவும் இருக்க வேண்டுமென்பதே எங்களுடைய கவலை.

பீம் ஸிங்:—ராஜஸ்தானத்தில் அமைதி நிலவுகிறது. எங்களுக்குள்ளே எவ்விதமான சண்டை சச்சரவு இல்லை.

தௌலத் ராவ்:—ஜோதிபுரி ராஜா மான் ஸிங் தங்கள் மீது குறை கூறுகிறார்.

பீம் ஸிங்:—என்ன அது?

அம்பாஜி:—விஷயத்தை நான் தெளிவாய்க் கூறுவதற்கு அனுமதிக்க வேண்டாம். மகாராணா தங்கள் புத்திரி. கிருஷ்ணகுமாரியை தாங்கள் ஜோதிபுரியின் மான் ஸிங்கின் முன் அரசாண்ட ராஜாவுக்கு விவாகம் செய்து கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிறீர்களாம். அந்த ராஜா இறந்து விட்டான். அவளை மணக்கும் உரிமை தன்னைச் சேர்ந்து விட்டது என்று மான்ஸிங் கூறுகிறார்.

பீம்ஸிங்:—அவர் கூறுவது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்லவே? என் பெண்ணின் மீது ஜோதிபுரி அரசருக்கு எப்படி வார்ஸ் பாத்தியம் கொண்டாடக்கூடும்? அவள் என்ன சொத்தா? சாமானா? நிலமா?

தௌலத் ராவ்:—அது எனக்குத் தெரியாது. மான்சிங்குக்கும் எனக்கும் சிநேக உடன்படிக்கை உள்ளது. அவர் தங்கள் மீது போர் தொடுத்தால் நான் அவருக்கு உதவிபுரிய கடமைப்பட்டுள்ளேன்.

அம்பாஜி:—சண்டையை நாம் ஒருவரும் விரும்பவில்லை. சண்டையும் ஏற்பட முகாந்திரம் இல்லை. மகாராணா எனது வார்த்தையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். மான்ஸிங் பாத்தியதை ஒருபுறமிருக்கட்டும். அதைப் பற்றிப் பேச வேண்டாம். அவர் மேவார் ராஜபுத்திரியை மணக்க விரும்புகிறார், அவர் தங்களுக்கு ஏற்ற மருமகன் தான். அவரது கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேணும்.

பீமஸிங்:—நான் என்ன செய்வேன்? கிருஷ்ணகுமாரியை ஜெய்பூர் ராணாவுக்கு விவாகம் செய்து கொடுப்பதாய் ஒப்புக் கொண்டுவிட்டேனே! அவர் தற்சமயம் எனது விருந்தினராய் உதயபுரியில் வந்திருக்கிறாரே? என் வாக்குத் தத்தத்தை இனி மாற்றுவது எப்படி சாத்தியமாகும்?

அம்பாஜி:—தங்கள் வாக்குத் தத்தம் பிசகானதே என்று சொல்வேன்?. தங்கள் புத்திரி ஜோதிபுரி மன்னருக்கு மணமக

ளாக நிச்சயிக்கப்பட்டாள். முன்பு இருந்த மன்னர் இறப்பினும், தற்போதுள்ள மன்னராகிய மான்ஸிங் அவளை மனைவியாகக் கோருவதற்கு உரிமையுண்டென்பதில் யாதொரு தவறுமில்லை. ஆதலால் மகாராணா அவரை மருமகனாய் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

[திரைக்குள் வாத்திய முழக்கம் ஆங்கில தூதன் மேர்ஸியர் தன் பரிவாரங்களுடன் வருகிறான். அவனை ஸிந்தியா, அம்பாஜி, மகாராணா மூவரும் வரவேற்கின்றனர். அவனும் ஒரு ஆஸனத்தில் அமர்கிறான் ஆங்கில தூதனுக்கும் மற்றவர்களுக்குமிடை சம்பாஷணை துவிபாஷகரின் உதவியால் நடைபெறுகிறது.]

அம்பாஜி:—கவர்னர்— ஜெனரல் சாகிப் சௌக்கியந்தானே!

மேர்ஸியர்:—அவர் சௌக்கியமாய் இருக்கிறார், உங்களெல்லாருக்கும் அவருடைய வாழ்த்துகளையும் வந்தனங்களையும் நான் தெரிவிக்கிறேன்.

அம்பாஜி :— சமாதானத்தின் மீது அவருக்குள்ள ஆர்வம் எங்களுக்குத் தெரியும். சமாதானத்தை ராஜஸ்தானத்தில் ஸ்திரப்படுத்த வேண்டும் என்று கவலைகொண்டே நாங்கள் இங்கே கூடியிருக்கிறோம்.

மேர்ஸியர்;—அப்படியா? பார்லோ சாகிப் (கவர்னர் ஜனரல்) இதைக்கேட்டால் மிகவும் சந்தோஷப்படுவார்.

அம்பாஜி:—ஆமாம், தற்சமயம் மகாராணாவுக்கும் ஜோத்பூர் அரசருக்கும் ஒரு சிறு மனஸ்தாபம் உள்ளது. அதை நாங்கள் சமரஸமாய்த் தீர்க்க முயன்று வருகிறோம்.

மேர்ஸியர்:—ஹிந்துஸ்தானத்திலுள்ள எல்லா சமஸ்தானமுமே நிலவவேண்டுமென்பதே எங்களது விருப்பம். அவர்களிடையே போர்மூண்டால், அது எங்களது பொறுப்புக்கு புறம்புள்ளதாகவே ஆகும். கம்பெனி சர்க்கார் நடுநிலைமை வகிப்பார்கள். இதைக் கூறவே நான் இங்கு வந்தேன். நான் விடை பெற்றுக் கொள்ளுகிறேன். (தனது பரிவாரங்களுடன்வெளியே போகிறான்.)

அம்பாஜி:—கம்பெனி தூதனின் சொற்களை மகாராணா கவனித்திருப்பார் என்றே நினைக்கிறேன். அதன் அர்த்தம் அவர்களுக்கு நன்கு விளங்கியிருக்கும்.

தௌலத் ராவ்:—ஜோதிபூர் அரசர் தங்கள்மீது படையெடுத்தால் அவருடன் நானும் எனது படையை நடத்தவேண்டியதாகும். அச்சமயம் தாங்கள் கம்பெனியாரின் சகாயத்தை எதிர்பார்க்கமுடியாது. பார்போதுரை கையை விருத்துவிட்டான்.

பீம்ஸிங்:—இப்படி என்னை பயமுறுத்துவது நியாயமா?

அம்பாஜி:—மகாராணா இதை பயமுறுத்தலாக கருதக்கூடாது. விஷயத்தைத் தெளிவுபடுத்தினோம். அவ்வளவு தான். தங்களது முடிவான அபிப்பிராயத்தை சீக்கிரம் தெரிவித்தால் நன்றாயிருக்கும்.

பீம் ஸிங்:—எனக்கு. மூன்று நாள் அவகாசம் தேவையாயிருக்கிறது. அதற்குப் பின் என் முடிவைக் கூறுவேன். நான் போய் வருகிறேன் (தனது பரிவாரங்களுடன் போகிறான்.)

தௌலத்ராவ்:-பீம் ஸிங் வழிக்கு வந்துவிடுவான் என்றே நினைக்கிறேன்.

அம்பாஜி:—நல்ல வேளையாய் கம்பெனியின் தூதன் சரியான சமயத்தில் வந்தான். வெள்ளைக்காரனது உதவிமீது பீம்ஸிங் வைத்திருந்த ஆசைமீது மண்ணைப்போட்டான். ஜெய்ப்பூர் அரசனை அவன் நிராகரித்து விடுவான் என்பதில் சந்தேகமில்லை,

தௌலத் ராவ்:—அதை தான் நான் விரும்புவது. அதற்கு பின் நானே கிருஷ்ணகுமாரியின் மணமகனாக முன்வந்து நிற்பேன், என் கோரிக்கையை பீம் நிராகரித்ததால் அவனும் அவனது ஊரும் நாசமேயடையும். அழகில் நிகரற்ற அந்த ராஜபுத்திரிக்கு ஏற்ற புருஷன் மான்ஸிங்கன்று தௌலத்ராவ் ஸிந்தியாதான், (மீசையை முறுக்குகிறான்.)

இரண்டாம் காட்சி

[உதயபுரி அரண்மனை. ராணாவின் சபா மண்டபம். ராணா பீம் ஸிங். மந்திரியுடன் தனியே இருக்கிறான்.]

பீம் ஸிங்:—ஜயபுரி அரசன் ஊருக்குப் போய் விட்டாரா?

மந்திரி:—நேற்று புறப்பட்டுப் போனார்.

பீம் ஸிங்:-ரொம்பவும் மனஸ்தாபப்பட்டானே? நான் என்ன செய்வேன்? நமது ஸ்திதி அப்படியாகி விட்டது. நமது சொத்து, சுதந்திரம், மானம், மனைவி மக்கள் இவற்றைக் காக்கும் சக்திகூட நமக்கு இல்லை. (மௌனம்)

[வேலைக்காரன் வருகிறான்.]

வேலைக்காரன்:—ஸிந்தியாவின் தூதர் வந்திருக்கிறார்.

பீம் ஸிங்:—அவரை வரச் சொல் (வேலைக்காரன் போகிறான்) மகாராஷ்டிர கொள்ளைக்காரனின் மிரட்டலைக் கேட்கும் தலை விதி எனக்கு. என்ன பண்ணுவேன்!

[ஸிந்தியாவின் தூதன் பிரவேசம்]

பீம் ஸிங்:—வாரும் தூதரே! உமது யஜமானர் என்ன செய்தி அனுப்பியிருக்கிறார்?

தூதன்:—மகாராணா! ஸிந்தியா ராஜா தங்களைக் குசலம் வினவுகிறார். தாங்கள் ஜெயபுரி அரசரை நிராகரித்து அனுப்பியதற்காக அவரது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறார். தங்களது புத்திரிக்கு ஏற்ற மணமகன் தானே என்று அவர் கூறுகிறார். அவளை மணந்து டெல்லியைக் கைப்பற்றி ஹிந்துஸ்தானத்தின் சம்ராட்டாக அவர் விளங்கப் போகிறார் என்பதில் ஐயமுண்டோ! டெல்லியைக் கைப்பற்றி பொம்மை சுல்தானாய் இருக்கும் பாதுஷாவை அவர் சிறைபிடிப்பது ஒரு காரியமா? தங்கள் புத்திரி கிருஷ்ணகுமாரி, ஹிந்துஸ்தானத்தின் சக்ரவர்த்தினியாக சோபிப்பாள் என்று உறுதி கூறுகிறேன்.

பீம் ஸிங்:—தூதனே! நிறுத்தும்! மேவார் ராஜ குலத்துக்கு எவ்வளவு துரதிஷ்டம் வாய்ப்பினும், அது தனது குல இழிவு உண்டாகும் காரியத்தில் இறங்கினதில்லை. மொகல் பாதுஷாவின் அந்தப்புரத்துக்கு எங்கள் ஸ்திரீகளை அனுப்பினதில்லை. அப்படியிருக்க பேஷ்வாவின் பாதரக்ஷையை துலக்கினவன் வம்சத்தில் வந்த தௌலத் ராவுக்காக என் பெண்ணை கன்னிகாதானம் செய்வேன்! அது ஒரு நாளும் இல்லை.

தூதன்:—இது முடிவான வார்த்தை தானா?

பீம் ஸிங்;—ஆம்! நீர் போகலாம்! (தூதன் போகிறான்) மந்திரி என்ன செய்வேன்? கொள்ளைக்காரன் ஸிந்தியா வந்து விடுவானே!

[மேவார் பிரபுக்களில் ஒருவனான பராக்ரம ஸிங்கும் வேறு சிலரும் வருகிறார்கள்.]

பராக்கிரம சிங்:—மகாராணா? தாங்கள் ராஜபுத்திரியை சிந்தியாவுக்கு மணம் செய்து கொடுக்க நிச்சயித்திருக்கிறீர்களாமே! அது வாஸ்தவமா?

பீம் ஸிங்:—இல்லை.

பராக்ரம ஸிங்:—சந்தோஷம்! தங்களது குலத்தின் கௌரவத்தைக் காப்பதற்காக எனது வாளும் எனது சுற்றத்தாரது வாட்களும் எப்பொழுதும் கூர்மையாகவேயிருக்கின்றன என்பதை சமூகம் தெரிவிக்கவே வந்தேன் (அவனும் மற்ற அவனுடன் வந்தவர்களும் போகிறார்கள்.)

மந்திரி:—ஸிந்தியாவை விரட்ட பராக்ரம ஸிங்கும் அவர் ஆட்களும் மட்டும் இருந்தால் போதுமா? நம்மிடம் சேனாபலம் இல்லையே!

[வேலைக்காரன் வருகிறான்.]

வேலைக்காரன்:—ஜோதிபுரி ராஜாவின் தூதர் வெளியே காத்திருக்கிறார்.

பீம் ஸிங்:—அவரை வரச் சொல். (வேலைக்காரன் போகிறான். மறு நிமிஷம் மான்சிங்கின் தூதன் வருகிறான்:)

பீம்சிங்:—தூதரே! வாரும்! உமது மன்னர் யாது செய்தி அனுப்பியுள்ளார்?

தூதர்:—மகாராணாவின் சங்கடமான நிலைமைக்காக தன்னுடைய அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அதைத் தீர்ப்பதற்கு உற்ற வழியையும் தெரிவிக்கவே அவர் என்னை அனுப்பியிருக்கிறார்.

பீம் ஸிங்:-விஷயத்தை விளக்கிக் கூறும்.

தூதன்:—ஸிந்தியா தங்கள் புத்திரியை மணப்பதற்காக ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறான். அவனை மணமகனாக ஏற்பதால் தங்கள் குலத்துக்கு உண்டாகும் இழிவு தாங்களுக்கே தெரியும். அவனது விருப்பத்துக்கு இணங்காவிட்டால் அவன் தங்கள் நாட்டின் மீது படையெடுத்து ராஜபுத்திரியை கவர்ந்தே செல்வான். அப்பொழுதும் தங்களுக்கு அவமானமே நேரிடும். அதைத்தடுக்க ஒரே வழிதான் உண்டு.

பீம் ஸிங்:—என்ன அது?

தூதன்:—ஜோதிபுரி மன்னர் கூறும் உபாயம் இதுதான். தங்கள் புத்திரியை தங்களது வாளுக்கிரையாக்கி விடுங்கள்.

(பீம்ஸிங் மூர்ச்சையாய் விழுகிறான். மந்திரி ராணாவுக்கு சைத்தியோபசாரம் செய்கிறான். தூதன் வெளியே போகிறான்.)

மூன்றாவது காட்சி

[உதயபுரியில் அரண்மனையில் ராஜபுத்திரி கிருஷ்ணகுமாரியின் அறை. சுவரின் மீதுள்ள துர்க்கையின் படம் புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. கிருஷ்ணகுமாரியும் அவள் தோழி அம்பிகையும் அதன் முன் நிற்கிறார்கள்.]

கிருஷ்ணகுமாரி:-தாயே, இந்த ஜன்மத்தில் உன்னை நான் ஸேவிப்பது இதுதான் கடைசி தடவை. என் பிரார்த்தனையை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும். யாருக்காக நான் எனது அற்ப உயிரை கொடுக்க விரும்புகிறேனோ, அவர்களது நலனை நீ என்றும் மறக்கக்கூடாது. எனது குடும்பத்தின் கௌரவத்தையும் எங்களது பிரஜைகளின் க்ஷேமத்தையும் நீ என்றும் பாதுகாக்க வேண்டும்.

அம்பிகை:— ராஜபுத்திரி! (மேலே பேச எழாமல் கண்ணீர் விடுகிறாள்.)

கிருஷ்ணகுமாரி:— அம்பிகை! இது என்ன பேதமை! எனக்கு நேரப்போகும் நற்கதிக்கு நீ சந்தோஷிக்கவல்லவா வேண்டும்? மானிட ஜன்மத்துக்கு எப்பொழுது பிறப்பு ஏற்பட்டதோ, அப்பொழுதே இறப்பு என்பதும் உண்டு என்பது நிச்சயமல்லவா? ஒரு பெரிய விபத்தை தடுப்பதற்காக ஒருத்திக்கு வாய்க்கும் மரணத்தைவிட சிறந்தது வேறொன்றுமில்லை. எனக்கு வாய்க்கப்போகும் நற்கதிக்காக நீ வருந்தலாமோ? சந்தோஷமன்றோ கொள்ள வேண்டும்.

[கிருஷ்ணகுமாரியின் அன்னையான ராணி பிரவேசிக்கிறாள். மகளை இறுகத் தழுவிகொண்டு கண்களில் நீர் சோர புலம்புகிறாள்.]

ராணி:—கண்ணே! கிருஷ்ணா! என் ஆருயிர்ச் செல்வமே! இதற்காக உன்னை வளர்த்தேன்! ஐயோ! என் பெற்ற வயிற்றில் பெரு நெருப்பெரிகிறதே! பதினாலு வயது உனக்கு இன்னும் நிரம்பவில்லை. உன்னை கலியாணம் செய்து கொடுத்து என் கண்ணாரக் களிக்க விரும்பினேனே! உன் வயிற்றில் பிறக்கப்போகும் குழந்தைகளை சீராட்டலாம் என்று இன்பக் கனவுகள் கண்டேனே! ஐயோ! உன் அழகும், உன் குணமும் உன் ஸமர்த்தும் நான் வேறு ஒருவரிடத்திலும் கண்டதில்லையே! என் கண்மணி! என் நெஞ்சம் துடிக்கிறதே ஐயோ! இப்படியும் ஒரு அநியாயம் உண்டோ! தெய்வத்துக்கு கண் இல்லையா?

கிருஷ்ணகுமாரி:— அம்மா! இப்படி அழலாமா? நீ ராஜபுத்திர ஸ்திரீ என்பதை மறந்துவிட்டாயா? ராஜபுத்ரரது கௌரவத்தை நிலை நிறுத்தும் பாக்கியம் உனது மகளுக்கு கிடைத்திருப்பதற்கே நீ பெருமையல்லவா அடைய வேண்டும்!

(18-ம் பக்கம் பார்க்க)

கங்கா ஸ்நாநம்

★

“கமலம்”

எழுதியது

★

1

அந்தி நேரம்; பேஷ்வா பாஜீராவ் அரண்மனையின் மணிமண்டபத்தில் கொலு வீற்றிருக்கிறார். குத்து விளக்குகளும் அகல் விளக்குகளுமே அங்கே ஒளிக் கதிர்களை வீசுகின்றன.

அந்த மண்டபத்தின் பொலிவுக்கு முன்பு டில்லி பாதுஷாவின் தர்பார்-மஹல் ஏதுக்கு! ஆனால், அங்கே எவ்வளவு போகவிலாஸங்கள் குடிகொண்டிருக்கின்றனவோ அவ்வளவே தூய்மை மணம் இங்கே வீசுகிறது. வேத கோஷம் செய்யும் வேதியர்களும், பக்தப் பெரியார்களின் சரித்திரங்களையும் மணிவாசகங்களையும் பாடி நினைந்து நெஞ்சம் நைந்து உருகும் அடியார்களும் இங்கே குழுமியிருக்கின்றனர். ரகசியச் செய்திகளை அவ்வப்போது கொண்டு வரும் துரித வேகமுள்ள குதிரை வீரர்கள் ஒரு பால் வீற்றிருக்கின்றனர். தேசதேசாந்தரங்களிலிருந்து வந்துள்ள யாத்ரீகர்கள் மற்றொருபால் அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் அங்கங்கே நடக்கும் விஷயங்களைப் பேஷ்வாவுக்கு அறிவிக்கும் அரசாங்கத் தூதர்களாகவும் கருதப்படுகிறார்கள்.

பேஷ்வா அந்த யாத்ரீகர் கூட்டத்தைக் கண்டு, “நண்பர்களே, உங்களுக்குத் தகுந்த உபசாரங்கள் யாவும் சரிவர நடந்தனவா? எனக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயம் யாதாயினும் உண்டா?” என்று கேட்கிறார்.

அவர்கள், “இந்த அரண்மனையில் எங்களை வரவேற்று. எங்களுக்கு நடத்திய மரியாதைகள் வேறு எங்குமே நடந்ததில்லை. தங்களிடம் வந்த எந்த யாத்ரீகனும் தன் எண்ணம் நிறைவேறாமல் திரும்பியதில்லை” என்கிறார்கள்.

பேஷ்வாவுக்கு எதிரே பிரமதநாதர் உயர்ந்த ஆஸனத்தில் வீற்றிருக்கிறார். அவர் தாம் காசியிலிருந்து வந்திருக்கும் மகா பண்டிதர்; தர்க்க சாஸ்திரத்தில் கரை கண்டவர்.

அவர் திடீரென்று எழுந்து நின்று, “மந்திரி சிரேஷ்டரே! நான் தங்களிடம் ஒரு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்” என்கிறார்.

“ஆஹா! கட்டாயம் சொல்லுங்கள், என்னால் முடிந்ததைச் செய்கிறேன்.”

“அமாத்திய குல திலக, ஹிந்து மதத்துக்கே கேந்திர ஸ்தானமாகவும் நடுநாயகமாகவும் விளங்கும் காசி க்ஷேத்திரத்தில், விசுவநாதரின் பழைய ஆலயத்தை மொகலாயர்கள் அழித்து அங்கே மசூதி கட்டி வைத்திருப்பதைத் தாங்களே அறிவீர்கள்: இப்போது அங்கே ஆட்சி செலுத்தும் நவாப் அடியோடு பலவீனனாயிருக்கிறான். தாங்கள் அங்கே நேரில் சென்று அந்த மசூதியை இடித்துத் தள்ளி, மீண்டும் விசுவநாதரின் ஆலயத்தை நிர்மாணம் செய்தால், அது நம் மதத்துக்கே ஓர் அருந்தொண்டாக இருக்கும்.”

“நீங்கள் சொல்வது வாஸ்தவம்தான். ஆலம்கீர் (உலகத்தை வென்றவன்) என்ற பட்டப் பெயரோடும், தன் சகோதரர்களைக் கொன்ற ரத்தக் கறை படிந்த கைகளோடும் டில்லி சிம்மாசனத்தில் உட்கார்ந்து. மொகலாய. சாம்ராஜ்யத்தின் நடுப் பகலையும் அஸ்தமனத்தையும் தன் ஆயுளிலேயே கண்டவனை ஔரங்கஜேப்தான் அந்த மசூதியைக் கட்டியவன். இன்னும சிறிது நாட்களுக்கெல்லாம் நீங்கள் அங்கே விசுவநாதரின் கோயிலைக் காண்பீர்கள்” என்று கூறி, பாஜீராவ் அவருக்குரிய சம்மானம் செய்து விடை கொடுத்து அனுப்புகிறார். சபை கலைகிறது.

2

பேஷ்வாவின் சிறு சைன்யம் காசிக்குப் பத்து மைல் தூரத்தில் கூடார மடித்துத் தங்கியிருந்தது. வெளிப் பார்வைக்கு அது சைனியமாக இல்லை. யாத்ரீகர்களின் ஒரு பெருங் கூட்டம்; காசி யாத்திரைக்குச் செல்லுகிறது என்று தான் பார்த்தவர்களும் கேட்டவர்களும் நினைத்தார்கள். மறுநாள் காசியில் நிகழப்போகும் அவாந்தரத்தைப் பற்றி ஒன்றுமே அறியாதவர்களாய், காசி வாசிகள் ஆழ்ந்த நித்திரைக்கு வசப்பட்டிருந்தார்கள்.

இரவு மணி பதினொன்று இருக்கும். கூடாரத்தின் வாயிலில் காவல் காத்துக்கொண்டிருந்த இரு சைனிகர்கள் இருபது இருபத்தைந்து பேர்கள் அடங்கிய ஒரு கூட்டம் தூரத்தில் வருவதைக் கண்டார்கள். ஒரு வேளை எதிரிகளுக்குச் செய்தி எட்டிவிட்டதோ என்று சந்தேகமுற்று, அவர்கள் ஜாக்கிரதையாகவே நடந்துகொண்டார்கள். ஒருவன் பேஷ்வாவைப் போய் எழுப்பினான். அவர் யாதொரு சந்தடியுமின்றித் தாம் மட்டும் எழுந்து வாசலில் வந்து நின்றார்.

நிலவு பட்டப் பகல் போல் பொழிந்துகொண்டிருந்தது. எதிரே வந்துகொண்டிருந்தவர்களின் வெளுப்பான உடைகள் நன்றாகத் தெரிந்தன. சந்திரனே வெள்ளிய அலைகளை வீசிக்கொண்டு பூமியில் நடந்து வருவது போல இருந்தது அந்தத் தோற்றம். அவர்கள் கைகளில் ஆயுதங்கள் இல்லை. யாத்ரீகர்களாகத்தான் இருக்க வேண்டுமென்று பேஷ்வா அநுமானித்தார்.

அருகில் வந்ததும் அவர்கள் அவரை வணங்கினார்கள். பாஜீராவை இத்தனை எளிதில் பார்க்க முடிந்ததே என்ற ஆச்சரியம் அவர்கள் எல்லாருடைய முகங்களிலும் பிரதிபலித்தது.

“நீங்கள் யார்? இந்த நடுராத்திரியில் இங்கே வரக் காரணம் என்ன?...” என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே போன பாஜீராவ், அந்தக் கூட்டத்தில் பிரமத நாதரைக் கண்டதும் அப்படியே ஸ்தம்பித்து நின்றார்.

பேஷ்வாவின் எதிரே நின்ற அந்தக் கூட்டம் எதிரிகளின் கூட்டம் அன்று; யாத்ரீகர்களின் கூட்டமும் அன்று; காசி நகர்ப் புலவர்களின் கூட்டந்தான் அது. அந்தக் கூட்டத்திலிருந்த பண்டிதர்கள் யாவரும் அகண்ட பாரதவர்ஷத்துப் புலவர்களின் பிரதிநிதிகள். நியாய சாஸ்திரத்தில் வல்லவரான உடுப்பி லக்ஷ்மணாசாரியரும், மீமாம்ஸா சாஸ்திர நிபுணரான காஞ்சி நரஸிம்மாசாரியரும், ஸர்வ வேதாந்த விசக்ஷணரான மருதூர் சுப்பா சாஸ்திரிகளும் லக்ஷண சாஸ்திர பாரங்கதரான காஷ்மீரத்து குப்தாசாரியரும், ஸாஹித்ய சக்கரவர்த்தியான பாலசந்திர பட்டரும், மாளவதேசத்துக் கிராம கீதங்களைப் பாடுவதில் நிகரற்ற பண்டிதை சந்திரசகோரியும். இன்னும் பல சாஸ்திரங்களைக் கடந்த மகாவித்துவான்களும் அங்கே வந்திருந்தார்கள். பிரமத நாதரே எல்லாருக்கும தலைவராக விளங்கினார்.

பாஜிராவ் ஒன்றும் புரியாமல் சில நிமிஷங்கள் திகைத்து நின்றார். பிரமதநாதரே முதலில் பேச்சைத் துவக்கினார். “ஸ்வாமி, இந்த நள்ளிரவில எங்களை இங்கே கண்டு ஆச்சரியப்பட வேண்டாம். தங்களிடம் ஒரு விஷயம் ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. உள்ளே போய் விஸ்தாரமாகப் பேசுவோம்” என்றார்.

பேஷ்வா அவர்களை உள்ளே அழைத்துச் சென்று ஆசனங்களில் அமருவித்தார்.

3

பிரமதநாதர் பேச ஆரம்பித்தார். “பேஷ்வாக்களின் குலத்துக்குச் சுடர்மணியாக விளங்கும் பிராமணோத்தமரே! ராஜ்ய பரிபாலனத்தில் ஈடுபட்டிருந்த போதிலும் தாங்கள் க்ஷத்திரியரன்று; அந்தணரே. பசுக்களையும் வேதியர்களையும் காக்கும் பெரு நோக்கத்தோடு நம் ஸ்வராஜ்யத்தைச் சமைத்த சிவாஜி மகாராஜா அந்தணர்களையே தமக்கு அமைச்சராகக் கொண்டார்; சாணக்கியனை அமைச்சனாகக் கொண்ட சந்திரகுப்தனைப்போல. தாங்கள் இப்போது காசிக்கு வந்திருக்கும் நோக்கம் வேறு யாருக்கும் தெரியாதிருப்பினும், எங்களுக்குத் தெரியும். போர்த் தொழில் அந்தணர்களுக்கு உரியதல்ல. தாங்களோ வடக்கில் டில்லியிலிருந்து தெற்கே புதுச்சேரி வரையிலும், கிழக்கே வங்காளத்திலிருந்து மேற்கே கோவா வரையிலும், போர்களும் கொள்ளைகளும் எண்ணிலாக் கொலைகளும் செய்து மகாராஷ்டிர ஸாம்ராஜ்யத்தைப் பரப்பியிருக்கிறீர்கள். இப்போது கங்கையில் ஸ்நானம் செய்து அந்தப் பாவங்களுக்குப் பிராயச் சித்தம் செய்து விடுங்கள்.

“தாங்கள் நாளைக்குக் காசி நவாபை எதிர்த்துப் போர் புரிவீர்களானால், அவன் தோற்பது நிச்சயம்; ஆனால் தாங்கள் நகரத்துள் புகுவதற்கு முன்னமே அங்குள்ள இரக்கமிலா மகம்மதியர்கள் பதையினால் காசி வாசிகளான பிராம்மணர்களையெல்லாம் கொன்று விடுவார்கள். அப்போது நாங்கள் யாவரும் உயிர் பிழைப்பதே அரிதாகிவிடும். எங்களோடு நம்மவர்களின் விசாலமான சாஸ்திர ஞானங்களும் அழிந்து போகும். இத்தனை அந்தணர்களைக் கொன்ற பாதகமும் தங்களைச் சூழும். ஆதலால் அந்த மசூதியை அழிக்க முயல வேண்டாம். மேலும், சகிப்புத் தன்மையே நம் மதத்துக்கு ஆதாரஸ்தம்பம் அந்த மசூதி அங்கே இருப்பதை நாங்கள் சந்தோஷத்தோடு பொறுத்துக் கொள்வோம்.

“கோயில் கட்டுபவீரை வேண்டாமென்று சொல்வது மகா பாவம். அதிலும் தாங்கள் விசுவநாதரின் ஆலயத்தைப் புனர் நிர்மாணம் செய்ய வேண்டுமென்ற உயர்ந்த உத்தேசத்தோடு வந்திருக்கிறீர்கள். தாங்கள் கட்டாயம் கோயிலைக் கட்டி முடியுங்கள்; ஆனால் அந்த இடத்தில் வேண்டாம், வேறு இடத்தில் கட்டுங்கள்” என்றார்.

பாஜீராவுக்கும் பண்டித சிகாமணிகளுக்கும் வெகு நேரம் வரையில் வாதம் நடந்தது. ஆனால் வாதப்போரில் அந்த மகாபண்டிதர்களின் வாதங்களுக்கு முன்பு பேஷ்வாவின் எதிர்வாதம் நிலைத்து நிற்க முடியவில்லை. தீரசித்தரான அவருடைய திடமனதைக்கூட அவை கலக்கிவிட்டன. பண்டிதர்கள் வீடுதிரும்பினர்.

மறுநாள் அதிகாலையில் பாஜீராவும் அவருடைய கூட்டாளிகளும் வைதிக வேஷத்தோடு கங்கா ஸ்நானம் செய்துவிட்டு, இரண்டாம் பேருக்குத் தெரியாமல், புனவுக்குத் திரும்பினார்கள். அதற்குப் பின்பு சில மாதங்களுக்கெல்லாம் விசுவநாதரின் ஆலயம் வேறு இடத்தில் கட்டப்பட்டு, கும்பாபிஷேகமும் வெகு விமரிசையாக நடந்தது.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

நௌகா சரித்திரம் 19-வது கீர்த்தனை

I

பல்லவி

கந்தமு புய்யருகா பன்னீரு (கந்தமு)
அந்த மைன யது னந்தனுபை
குந்த ரதன விர வொந்தக பரிமள

சரணம்

1. திலகமு தித்தருகா கஸ்தூரி
திலகமு தித்தருகா
கல கல மனுமுக களகனி ஸொக்குசு
ப்லுகுல னம்ருதமு லொலிகெடு ஸ்வாமிகி
2. சேலமு கட்டருகா பங்காரு
சேலமு கட்டருகா
மாலிமிதோ கோபால பாலு லதோ-
ஞலமே பின விசால நயனுனிகி
3. ஹாரது லெத்தருகா முத்யால
ஹாரது லெத்தருகா
நாரீமணுலகு வாரமு யௌவன
வாரக யொஸகெடு வாரி ஜாக்ஷுனிகி
4. பூஜலு ஸேயருகா மனஸார
பூஜலு ஸேயருகா
ஜாஜுலு மரி விரிவாஜுலு தவனமு
ராஜித த்யாகராஜ னுதுனிகி.

II

குந்தரதனுலு—குந்த புஷ்பத்தைப் போன்ற பல் வரிசைகளை (சந்தோஷத்தால் மலர்ந்த முகத்தை) உடைய கோபிகைகள்
இர வொந்தக—அமைதியாக
அந்தமைன யது னந்தனுபை—அழகான கண்ணன் மேல்
பரிமள பன்னீரு கந்தமு—வாசனை மிகுந்த, பன்னீர் கலந்த
புய்யருகா—பூசினார்கள் [சந்தனத்தை
கஸ்தூரி திலகமு தித்தருகா—கண்ணன் நெற்றியில் கஸ்தூரி கலந்த திலகமிட்டனர்.
கல கல மனு—மிகுந்த சோபையுடன் விளங்கும்
முககளகனி—கண்ணனின் முகவிலாசத்தைக் கண்டு
ஸொக்குசு—அவன் ஸ்வரூபத்திலீடுபட்டு
அம்ருதமுலு ஒலிகெடு—தேவாம்ருதத்தை வர்ஷிக்கும் தன்மை
பலுகுலன்—மதுரமான பேச்சை உடைய [கொண்ட
ஸ்வாமிகி—பகவானான அந்த கண்ணனுக்கு
கந்தமு புய்யருகா—சந்தனத்தை பூசினார்கள்
மாலிமிதோ—அன்போடு
கோபால பாலு லதோன்—கோபாலர்களுடன் (இடையர்
ஆலமேபின—பசுக்களை மேய்த்த [களுடன் ஒன்று கூடி,)
விசால நயனுநிகி—அழகிய, பரந்த கண்களையுடைய கண்ண [னுக்கு
பங்காரு சேலமு கட்டருகா—தங்கத்தாலான பீதாம்பரத்தை [உடுத்தினார்கள்.
முத்யால ஹாரதுல எத்தருகா—கண்ணனுக்கு முத்து ஹாரத்தி எடுத்தார்கள்
நாரீ மணுலகு—ஸ்திரீ ரத்னங்களான கோபியர்களுக்கு
வாரமு—எப்போதும்
யௌவன வாரக யொஸகெடு—அழகு மிகுந்த யௌவனத்தின் [தன்மையை அளித்தருளின
வாரிஜாக்ஷுனிகி—தாமரைக்கண்ணனான ஸ்ரீக்ருஷ்ணனுக்கு
கந்தமு புய்யருகா—சந்தனத்தைப் பூசினார்கள்.
ஜாஜுலு—மலராத ஜாதிப் புஷ்பங்கள்
மரி—மேலும்
விரிஜாஜுலு—மலர்ந்த ஜாதிப் புஷ்பங்கள்
தவனமு—பூஜைக்குரிய தவனம் இவைகளைக் கொண்டு
ராஜித த்யாகராஜனுதுனிகி—மகிமை கொண்டு விளங்கும் [ஸ்ரீகண்ணனுக்கு
மனஸார பூஜலு ஸேயருகா—மனமார பூஜை முதலானவை [செய்தார்கள்.

III

முன் கதைச் சுருக்கம்:—

ஒரு சமயம் கோபிகைகள் கண்ணனுடன் யமுனையில் ஓடத்திலேறி மிகுந்த குதூகலத்துடன் பொழுது போக்க, அதன் விளைவால் கோபியர்களுக்கு ஏற்பட்ட கர்வத்தை அடக்கி, தன்னிடம் உண்மையான பக்தி உண்டாகுமாறு செய்ய கண்ணன் ஓர் திருவிளையாடல் புரிந்தார்.

அவருடைய ப்ரேரணையால் கடுமையான புயல் காற்றும் மழையும் உண்டாகி ஓடமும் யமுனையில் மூழ்க ஆரம்பிக்கவே, கோபியர்கள் மதிமயங்கி கண்ணன் கூறிய வண்ணம் தங்கள் ஆடைகளை ஓடத்தின் துவாரத்தில் அடைத்தும் யாதொரு பயனும் ஏற்படாது போனதால் மிகுந்த கலவரமடைந்து, தங்கள் கர்வத்தை விட்டொழித்தவர்களாய் பரமாத்மாவான கண்ணனை சரணடைந்து தங்களை ரக்ஷித்தருளுமாறு பிரார்த்தித்தனர்.
அதற்கு பகவான்

“நன்னே தியானமு ஸேயுசு—கன்னீருல நிலிபி மீரு கரயுகமுலசே |
கன்னுலு மூஸி பஜிம்புடு—பன்னுக மீபாலி வேல்பு பலமிச்சுதயன். ||

கோபியர்களே! என்னையே உண்மையாக தியானம் செய்துகொண்டு, அழுவதை நிறுத்தி, உங்கள் கைகளால் கண்களை மூடிக்கொண்டு என்னை பஜனம் செய்வீர்களானால் நிஜமாக உங்களை தெய்வம் ரக்ஷிக்கும் என்று சொல்ல,
கோபியர்கள்:—

தருணுலெல்ல, பரமேஸ்வருனி மாட பக்திதோவினி
கனுல மூஸி பஜிஞ்சிரி, வாஸிமெரஸி அந்தகாரமு
வர்ஷம் புனணகி போயெ
வாடயெச் சோடனுண்டெனோ வச்சென சுட
கனக மய வல்வலனு ரம்ய கஞ்சுக முல
ஜூஸி யுப்பொங்கி ரங்வேள ஸூதது லெல்ல

கண்ணன் மொழிகளைக் கேட்டு, கோபியர்கள் கண்களை மூடிக்கொண்டு பகவானை அந்தரங்கமாகத் தியானம் செய்து, பிறகு கண்களைத் திறந்து பார்க்க, இருள் அகன்றும் ஓடம் பத்திரமாகக் கரை சேர்ந்தும் தங்கள் ஆடையாபரணங்கள் தங்கள் தேகத்திலேயே விளங்கவும் கண்டு அளவிலா மகிழ் வெய்தினர்.

கந்தமு:—இது நௌகா சரித்திரம் 19-வது கீர்த்தனம்.

இக் கீர்த்தனத்தில் கோபியர்கள் மிகுந்த குதூகலத்துடன் கண்ணனுக்கு அலங்காரம் செய்து மகிழ்வடைந்த விபரம் கூறப்பட்டுள்ளது.

IV

ராகம் புன்னாக வராளி — ஆதி தாளம்

(8—வது மேள ஜன்யம். ஆ. நிஸரிகமபதநி அவ. நிதபமகரிஸநி)

பல்லவி

;	ஸ ரி .கா ரீ	ஸா ; ஸா ரி ஸ	நீ ;	; ஸா	ஸா ;	; ஸா
	கந் தமு	புய் யரு .	க	பன்	னீ	ரு
;	ஸ பா ப பா	பா ; தா பா	ம ப த ப	ப மா க	க ரீ ரி	ஸா ;
	கந் தமு	புய் யரு	கா . .	. . .	. . .	[.

அனுபல்லவி

;	பா பா ப ப	ம க மா பா பா	; ஸ பா	ப பா	பா ;	த நீ த
	அந்தமை .	. . ன யது	நந் .	த னு	பை	. . .
	பா ப ம ம த ரீ	கா மா பா த நி	த ப ம	பா த பா	ப ம ம க	ரீ ஸா
	. குந்த . ர	த்ன விரு .	. . வொந்	தக	ப . ரி .	மள

(சரணங்களின் முதல் வரியை பல்லவி போன்றும், மற்றதை அனுபல்லவி போன்றும் பாடவும்.)

கிழவி வழங்கிய நிழல்

தஞ்சை பிருஹதீஸ்வரர் திருக்கோயில் நிர்மாணத்தைப் பற்றிய கதை. ஒரு கிழவி பகவானுக்குச் செய்த கைங்கர்யத்தின் மேன்மையை எடுத்துரைக்கும் வரலாறு.

★

நாகை
முத்துக்குமாரஸாமி
எழுதியது

★

"இறைவனுக்கு தொண்டு செய்வதே இன்பம். அதுவே பேரின்ப பெருவாழ்வை பெற நல்வழி. அதுவே இம்மையிலும் மறுமையிலும் நன்மை பயக்கும்," என்ற உண்மையை அறிந்து, கடவுளுக்குத் தொண்டாற்றியவர் பலர். பலர் பல வகைகளில்தொண்டு புரிந்தனர். சிலர் கடவுள் நம்பிக்கையை வளர்க்கவும், கடவுளை வழிபடவும் பல கோயில்களை கண்டனர். அன்பே கடவுள், அடியார்க்கும் உயிர்க்கும் ஆற்றும் தொண்டே . ஆண்டவனுக்கு ஆற்றிய தொண்டு என்று அன்பின் வழி பின்பற்றுவார் சிலர். மற்றும் சிலர் கடவுளுக்குத் தொண்டாற்றும் தொண்டருக்கு தொண்டாற்றி, அவர்கள் செய்யும் பணி தடைபடாது நிறைவேற அவர்களின் நலங்களைப் பேணினர். அத்தகைய தொண்டருக்கு இல்லறம் துறவறம், ஆண், பெண், முதலிய வேற்றுமை கிடையாது,

தமிழர்கள் சிறந்த சமயப் பற்றுடையவர்கள். சோழ மன்னர்கள் சைவத்திற்கு ஆற்றிய தொண்டு அளப்பரிது. அவர் தம் காலத்தில்தான் சோழநாடு முழுவதும் எண்ணற்ற கோயில்கள் எழுந்தன. "கோயில் இல்லாத ஊரில் குடி இருக்கவேண்டாம்" எனும் முதுமொழிக்கஞ்சி எங்கு மக்கள் வருந்துவரோ என்றுன்னியே சிற்றூர்தோறும் கோயில்களை எழுப்பித்தனரோ என்று ஐயுறுமாறு எண்ணற்ற திருக்கோயில்கள் . சோழர் திருநாட்டை அணி செய்தன. மண்ணையும் பொன்னையும்வரையாது வழங்கி இறைவன் திருப்பணி தவறாது நடைபெறப் பணித்த சோழர் தம் பெருமை கூறத்தரமோ? "அருண்மொழி" சோழநாட்டின் தலைநகரான தஞ்சையில் எடுப்பித்த பெரிய கோயிலே அவ்வரசர்கள் எழுப்பித்த எண்ணற்ற கோயில்களில் மிகவும் சிறந்தது. "பெரிய கோவில்" என அத்திருக்கோயிலை அழைப்பது எவ்வகையிலும் பொருத்தமுடைய்தே.

அருண்மொழி பிற்றை நாளில் "முதல் இராசராச சோழன்" என்ற சிறப்புப் பெயர் பெற்றான். அவனுடைய ஆட்சியில் சோழ நாடு சிறப்புற்றோங்கியது. தமிழகத்தின் பெரும் பகுதியைத் தனி குடையின் கீழ் ஆண்ட அவனுடைய ஆட்சியின் முற்பகுதி, போரும், வெற்றியும், விழாக்களும் நிறைந்து விளங்கியது. அதனால் அவனுடைய புகழ் பூவுலகெங்கும் பரவியிருந்தது. புயலுக்குப் பின் அமைதியும், புரட்சிக்குப் பிறகு அன்பும் நிலவுவதுப் போன்று, போரும் வெற்றியும் நிறைந்த அவனுடைய வாழ்க்கையின் முற்பகுதியை அமைதியும் அன்பும் நிறைந்த வாழ்க்கைப் பின் பற்றியது. போர் வெறியில் நிலைத்திருந்த அவ்வேந்தனது உள்ளம் இறைவனது வழிபாட்டின் மாட்டே ஈர்க்கப்பட்டது. பொய்மையும் மாயையும் நிறைந்த அவனுள்ளம் மெய்மையை அறிய அவாவியது. அஞ்ஞானத்தை அகற்றி ஞான வழிச் செல்ல உந்தியது அவனது அகம். இயற்கையோடிசைந்த அவன் பேரின்பத்தை பெற்று பெருவாழ்வை நடாத்த விழைந்தான். பேரின்பத்தையடைய "பெருவுடையார்" திருக்கற்றளியை எடுப்பித்தான். "பெருவுடையார்" எனும் அழகிய தமிழ் சொல்லே பின்னர் "பிருகதீசுவரர்", என வடமொழியில் மொழி பெயர்த்து வழங்கப்பட்டது.

"திருக்கோயில் திருப்பணிகளில் உலகிலேயே தலை சிறந்தவர்கள் தமிழர்கள்,...... தஞ்சை பெரிய கோயிலே இந்தியாவிலேயே அழகிற் சிறந்தது", என்று உலகக் கலைஞர்களால் போற்றப் பெற்ற இக்கோயில் கி பி 1003-ம் ஆண்டில் தொடங்கப் பெற்று கி பி 1009-ம் ஆண்டில் முடிவுற்றிருத்தல் வேண்டும் என ஆராய்ச்சியாளர் எண்ணுகின்றனர். மற்றும் தஞ்சை பெரிய கோயில் சிற்ப வேலையில் சிறந்தது. கோயிலின் மேலுள்ள சதுரமான விமானத்தின் உச்சியில் பிரமரந்திரத்தளம் ஒன்றுண்டு. அதுவும் சதுரமானதே. இத்திருக்கோயிலின் தலையென விளங்கும் "பிரமரந்திரத்தளம்" 25½ சதுர அடியும், 80 டன் நிறையுமுள்ள ஒரே கல்லாலாயது, இக்கல்லின் திருப்பணி நடைபெறுங் காலை நடைபெற்ற நிகழ்ச்சியே பின் வருவது.

சோழ அரசனை அருண்மொழியின் ஆணையின்படி பெருவுடையார் திருப்பணி அக்காலை நடைபெற்று வந்தது. சிற்பிகளும் கூலிகளும் மற்றவர்களும் கூலியை பெரிதெனக் கருதாது கடவுள் திருப்பணியில் தங்களுக்கும் பங்கு கிடைத்ததைப்பற்றி பெருமிதங்கொண்டு மகிழ்ச்சியுடன் வேலை செய்தனர். இன்றேல் இந்நாளது மக்களைப்போன்று, அறநெறி துறந்து பொருளையேப் பெரிதெனக் கொண்டிருப்பின் இறைவன் திருக்கோயில் இவ்வளவு இயற்கை வனப்புடனும் கலைநுணுக்கங்களுடனும் கண்டிருக்க இயலாது. மற்றும் அந்நாளில் நகர மக்கள் அனைவரும் தங்கள் தங்களாலியன்றவரையில் திருப்பணிக்கு உழைப்பது கடனெனக் கொண்டார்கள். அக்காலை தஞ்சையில் அழகியென்றொரு "கிழவி" இருந்தாள். அவளுடைய முதுமையாலும் உடல் நலிவினாலும் அவள் திருப்பணிக்காக உழைக்க இயலவில்லை. தன்னால் இறைவனது திருப்பணித் தொண்டில் ஈடுபட இயலாவிடினும் அதில் உள்ளும் புறமும் உடன்பட்ட உண்மை அன்புடன் தொண்டாற்றும் சிற்பிகளுக்கும் கூலிகளுக்கும் தன்னாலியன்ற உதவியைச் செய்வதே தன் கடன், அதுவே தான் பேரின்ப பெருவாழ்வை பெற நல்வழி எனக் கொண்டாள். கற்கள் தூக்க இயலாத அக்கிழவி, நாள் முழுவதும் தங்கள் முழுத் திறமையுடன் உழைத்துக் களைத்தச் சிற்பிகளுக்கும் கூலிகளுக்கும் உணவும் நீர் முதலியனவும் கொடுத்து மகிழ்வுறச் செய்தனள். களை தீர்ந்த சிற்பிகளின் கூலிகளின் முகங்களில உண்டான மகிழ்ச்சியின் அறிகுறியே அவளுக்கு பேரின்பத்தை நல்கிற்று.

கோயிற்றிருப்பணியும் ஒருவாறு முடிவுறும் நிலையை அடைந்தது. கிழவியின் உதவியைப் பெற்ற சிற்பிகளும் கூலிகளும் வேலை முடிவுற்று வெளியேறு முன்னர் அவளுக்கு ஏதாவதொரு உதவியைச் செய்து தங்கள் நன்றியறிதலைக் காட்ட விழைந்தனர். ஆயின், முன்னர் கிழவி விரும்புவது யாது என அறிய அவாவினர். சிற்பிகளின சிறந்தோன் கிழவியை அண்டி அவளுடைய அவாவை அறிய முற்பட்டான். சிற்பிகளின் நன்றியுடைமையை வியந்த அக்கிழவி பொன் வேண்டவில்லை; பொருள் வேண்டினளில்லை; மற்று தன் பெயரை அனைவரும் அறிய கல்லில் பொரிக்க வேண்டினளில்லை, அவள் அன்புடன் ஆண்டவனுக்கு ஆற்றியத் தொண்டிற்கு சிற்பிகள் யாது கைம்மாறு செய்ய இயலும்! இறைவனன்றோ அறிவான் அவளது அகத்தூய்மையை. பின்னர் அழகி என் வேண்டினள்? இறைவன் திருக்கோயில் திருப்பணியில் தன் பொருளும் இருக்க வேண்டுமென்பதே. அவளின் உள்ளம் இன்புற அவளில்லில் இருந்த கல்லை "பிரமரந்திரத்தளமாக" அச்சிற்பிகள் அவ்விமான சிகரத்தின் நடுவில் அமைத்து திருப்பணியை முடித்தனர். ஒருக்கால் அழகியின் அன்பின் திறனை உன்னியே எம்பெருமானும் அவளீந்தக் கல்லை தன் தலையின் மேல் கொண்டனரோ என்னவோ!

இவை ஒன்றையும் அறியான் அரசன். திருப்பணி இறுதியுறும் இன்ப நன்னாள் அருகில் இருப்பதைக் கண்டு இன்புற்றான். ஒரு நாள் இரவில் அவனுடைய கனவில் எம்பெருமான் தோன்றி "யாம் கிழவி வழங்கிய நிழலில் உவந்திருக்கின்றோம்" எனத் திருவாய் மலர்ந்தருளினர், எம்பெருமான் கனவில் கண்ட அவன் திருவுரு தன்னிலை தவறியது. பெருவுடையாரின் பெருமகிழ்வை அறிந்து போற்றினான். தன் பணி பரிவுடன் ஆண்டவரால் போற்றப்பட்டது உன்னி உள்ளம் உவந்தான். உலகத் தந்தை உள்ளம் உவந்ததைக் கண்டு சோணாட்டு கோவேந்தன் பெருமகிழ் வெய்தினான். ஆயின் ஆண்டவர் "கிழவி அளித்த நிழலில்" என்றதன் பொருள் அறியாது மயங்கினான். மகிழ்ச்சி நிறைந்த அவனுள்ளம் மயக்குற்றது. எம்பெருமானுக்கு திருக்கோயிலை எடுப்பித்தது நாமல்லவா? பின்னர் இறைவனார் இவ்வாறு இயம்பக் காரணம் யாது? எங்காகிலும் இதே காலத்தில் எம்பெருமானுக்கு வேறொரு திருக்கோயில் ஓர் கிழவியால் கட்டப் பெற்றுள்ளதோ என பற்பல எண்ணினான். ஆண்டவரே அக்கிழவியைப் போற்றினால் அவளின் அன்பின் திறந்தான் என்னே! இறுதியில் உண்மையை உணர விழைந்தான். உண்மையுணர்ந்த அரசன் அழகி கிழவியின் உண்மை அன்பையும் உயரிய தொண்டையும் வியந்தான்.

பெருவுடையார் போற்றி புகழ்ந்த அக்கிழவியை சிறப்பிக்க விழைந்தான் அருண்மொழி. மற்றும் உண்மைத் தொண்டின் உயரியத் தன்மையை உலகோர் உணரவும், உண்மை அன்புடைய அழகியின் நினைவு தஞ்சையில் என்றென்றும் நிலை பெற்று விளங்கவும் வேண்டுவனச் செய்ய விழைந்தான் முதல் இராசராசசோழன் எனப் புகழப்பெற்ற அருண்மொழிச் சோழன். அழகி எனும் அக்கிழவிக்கு குளம், தோட்டம் இவை அடங்கிய ஒரு பெரும் நிலப் பரப்பை தலை நகரிலேயே பரிசளித்தான். ஆதலின் அன்பின் பெருக்காகிய அக்கிழவியின் நினைவாக பின்னர் அழகிக் குளம், அழகி தோட்டம் என்று அவை அன்று முதல் வழங்கப் படுகின்றன. இவை இரண்டும் தஞ்சை மக்கள் அனைவரும் அறிந்தவை. ஆயின் அவைகளின் உண்மையை பலர் அறியார். அவை தற்பொழுது தஞ்சை மணிக் கூண்டிற்கு அருகில் உள்ள பனகால் கட்டிடத்திற்கு அருகில் இன்றும் அழகுடன் விளங்குகின்றன அழகின்பெயரிலேயே, இவ்வாறு இறைவன், அரசன், மக்கள் இவர்களால் புகழப் பெற்ற அழகியை

"அம்மையார் நிழலில்யா
ம்மர்வோமென்றருள் செய்த
செம்மையார் வீற்றிருக்குந்
திருத்தஞ்சை,"

என்றும்,

"...............''பொன்னி
நதியுடைக்கோன் முன்னோர்
நரை முதியாணீழல்
வதிகின்றோமென்ன
வந்தான் வந்தான்"

என்றும் சிறந்த செந்தமிழ்ப் பாக்களால் தமிழகத்து புலவர் பெருமக்களும் போற்றினர்.

மதிப்புரை

தராசு

★

("சுதேசமித்திரன்" ஆசிரியர் ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் எழுதியது. 12 படங்களுடன் கூடியது. விலை ரூபா 1.—"சுதேசமித்திரன்" புத்தகசாலைகளில் கிடைக்கும்.)

★



நூலாசிரியர்.

தற்காலம் தமிழ்நாட்டிலே தமிழ்ப் பாஷையின் புது மலர்ச்சியை சிறுகதைப் பிரசுரத்திலேதான் அதிகமாகக் காண்கின்றோம்: தடுக்கி விழுந்தால் கதைக்கொத்துகளும் சிறுகதைகளுமே எங்கும் தென்படுகின்றன. வாசகர்களின் தமிழபிமானமெல்லாம் கதை வாசிப்பதில்தான் என்று எண்ணி, பிரசுராலயங்கள் அவ்விதப் பணியில் மட்டும் பயனையும் பொருளையும் நிறையத்தேடுகின்றன. எங்காகிலும் ஒன்று, இரண்டு இடங்களில் தான் கட்டுரைகளின் தொகுதியையோ, வாழ்க்கை சரித்திர வரலாற்றையோ, அல்லது புதிய மாதிரியான எழுத்து வாசனையையோ உணர்கின்றோம். அம்மாதிரி அத்திப் பூத்ததுபோல் தென்படும் பதிப்புக்களில் சேர்க்கவேண்டும், ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸனுடைய 'தராசு' என்னும் சிறு புத்தகத்தை. மேல் அட்டையின் கவர்ச்சியும், உள்ளே அழுத்தமான தாளின்மேல், வேண்டிய அளவில் சுற்றி இடம்விட்டு நடுவே அச்சின் பதிப்புடன் கூடிய, இப்புத்தகத்தைப் பார்த்தால் 'என்னைக் கையில் எடு' என்று நம்மைக் கூவி அழைப்பதுபோல் இருப்பதில் ஆச்சரியம் உண்டா!

"புறக்கண்ணுக்குப் புலப்படாதது அகக்கண்ணுக்குப் புலப்படும். அதை அளப்பதே இந்தத் தராசின் மகிமை" என்று கம்பீரமாய் பூர்வ பீடிகைப் போட்டுக்கொண்டவர், தம்மையே மறுகணத்தில் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளுகிறார் போலும்: "குறையை நீக்கி குணத்தைக் காட்டும் 'எக்ஸ்ரே' கருவியாக நமது தராசைக் கொள்ளலாம்." வாஸ்தவத்தில் நம் நாட்டில் கொஞ்சமும் சங்கோசமின்றிக் குறைகளை விடாமல் எழுதும் மதிப்புரைகளுக்கு இன்னும் காலம் கிட்டவில்லை. இதை உணர்ந்தே ஸ்ரீ ஸ்ரீநிவாஸனும் நிதானமாகத் தம் முயற்சியில் ஈடுபடுகிறார்.

ஆனால் ஜாக்கிரதை எம்மட்டும் உள்ளது என்பதுதான் இங்கு கேள்வி. இம்மாதிரி வாழ்க்கை தத்துவங்களை சிறிய மதிப்புரையில் அலசிப் பார்ப்பது என்பது புகைப்படம் பிடிப்பவனின் தேர்ச்சிக்குச் சமானமானது. சரியான அளவில் வெளிச்சமும் நிழலும் படத்தின் வனப்பைப் பாதுகாப்பதில் தான் அவனுடைய சிரத்தை முழுவதும் வெளியாகும். ஆகையால் எழுதப்பட்டவர்களின் குண தோஷங்களை ஆங்காங்கே பொருத்தமான அத்தாட்சிகளுடன் எடுத்துக் காட்டுவதுதான் இப்பிரயாசையின் லக்ஷியம்.

இங்கு விஷயங்களாகக் கையாளப்பட்டிருக்கும் பதினொரு பேர்களில் ஐந்து பேர் உயிர் நீத்தவர்கள். அதிலும் மூன்று பேர் ஆசிரியரின் உறவினர். ஆசிரியரின் நிர்த்தாக்ஷிண்யம் ஓரளவுதான் இவைகளில் வெற்றி பெறுகிறது. ஆயினும் எழுத்தழகு வேண்டிய அளவில் இருக்கின்றது. முதலில் ஏ. ரங்கசாமி அய்யங்கார் தோன்றுகிறார்; சகல கல்யாண குணங்களுடன்தான். சித்திரத்தில் வர்ணம் தீட்டப்படவில்லை. கோடுகள் மட்டும் தெரிகின்றன, மறுமுறை இவ்விஷயத்தை ஆசிரியர் கையாளும்பொழுது வர்ணப் பொலிவும் இதில் சேரலாம். "ஹிந்து" ஆசிரியராய் விளங்கிய காலஞ்சென்ற கஸ்தூரிரங்கையங்காரைப்பற்றியதில், ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் சொல்லும் சில வார்த்தைகள் நம்மை நம்ப வைக்கின்றன. "வலுச் சண்டைக்குப் போகவில்லை; வம்புச் சண்டைக்கு அஞ்சவில்லை. இரண்டொரு முறை கோர்ட்டில் வழக்காட வேண்டி வந்தது. பல முறை சிநேகிதத்திற்குப பங்கம் வந்தது," பழைய காலத்து மனிதர்கள் இவைகளை வாசித்து நன்கு அநுபவிப்பார்கள். எஸ். ரங்கஸாமியும் ஆசிரியரின் உறவினர்தாம். ஆயினும் அவர் இருந்ததை மெய்ப்பிக்கும் படத்தையே காண்பது போல் தோன்றுகிறது. இளம் வயதில் மரித்தவரை நினைத்து மனம் கசிவது நியாயம்! இன்னும் அதில் நம்முடைய உணர்ச்சியும் கலப்பதால் 'ரங்கு' நமக்கெல்லோருக்கும் உறவினராகிறார். அவருடைய "உடையிலே மாசு படிந்தும், உள்ளத்திலே மாசில்லை" என்னும் வாக்கியத்தின் வழியாய் உலகப்பற்றற்ற ஒருவரை மனக்கண்ணில் காண்கிறோம்.

இப்பொழுது நம் மத்தியில் இல்லாத மற்றொரு பிரபலமானவர் ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸையங்கார். சித்திரக்காரனுக்கு உவந்த விஷயமென்பதிலும் சந்தேகமில்லை. இரண்டொருவார்த்தைகளில் காலஞ் சென்றவரை உயிர்ப்பித்து விடுகிறார் ஆசிரியர்; "பார்ப்பதற்கு கட்டை குட்டையாக இருப்பார். உடலின் காத்திரத்திற்கு உயரம் காணாது...பரந்த முகம்...உருண்ட, திரண்ட கண்கள்; ஆற்றல் மிகுந்த, அறிவு முதிர்ந்த கண்கள்; படித்துப் படித்துப் பார்வையை இழந்த கண்கள்; கண்டும் காணாத கண்கள்" இந்த வர்ணனைக்கு 'சபாஷ்' போடாமல் இருக்க யாவராலும் முடியாது. உள்ளே வெளிச்சத்தைத் திருப்பியவுடன், நம் கண்களுக்குப் புலனாவது "நான்கு பேருடன் ஒத்துழைக்கப் பக்குவம்" பெறாத அவருடைய குணமே யன்றோ! சிறியதொரு கட்டுரையில் சித்தரித்து இருக்கும் ரூபம் உள்ளும புறமும் ஒருங்கே வெளிக்காட்டி நிற்கின்றது. எஸ். ஸ்ரீநிவாஸையங்காரின் சுபாவமும் அதுதான்.

உயிருடன் இருப்பவர்களைப் பற்றி எழுதுவது நிச்சயம் சிரமந்தான்; அபாயமும்கூட. ஒன்று, வரம்பின்றி புகழத் தோன்றும்; அல்லது வகையற்ற விதத்தில் தோஷங்களை உணர்த்தவே தூண்டும். இரண்டையும் விட்டு மூன்றாவது வழியில் செல்லும் ஸ்ரீ. ஸ்ரீநிவாஸன், சொல்லியும் சொல்லாமலும் எழுதுகிறார். பத்திரிகை ஆசிரியர் உரிமையில் அரசியல் பழக்கம் வேறு அவருக்கு இருக்கின்றது. ஆகையால், அவருடைய வார்த்தைகளில் சூக்ஷ்ம அர்த்தங்களும் தொனிக்கின்றன. ஆனால்; பட்டவர்த்தனமாயும் சிலரை அலசிப் பார்க்கின்றார். ராஜாஜியை அறிந்தவர்களுள் யார் மறுக்க முடியும். பின்வரும் மதிப்பை? "தனித்து நிற்கும் சுபாவம்; தன்னம்பிக்கை அதிகம். தன் கையே தனக்கு உதவி என்று நினைப்பவர். ஏற்ற காரியத்தை அடி முதல் நுனி வரையில் தானே செய்வார். சக்தி வாய்ந்த நல்ல சாணை பிடித்த மூளை. மதியால் விதியையும் வெல்ல முயல்பவர்." இன்று அரசியலில் ராஜாஜி படும் பாட்டை வருணிப்பது போலத் தோன்றுகின்றது. ஆனால், அவரிடம் என்றைக்கும் உள்ள குண தோஷங்களே இவை. சொல்லும் திறமையில் விஷயமறிந்து. விதரணை புரிந்து வரும் வார்த்தைகள் என்பதிலும் ஐயமில்லை.

"சட்ட சபையிலிருந்துகொண்டு செய்யக்கூடிய வேலைக்கு அவர் செய்து காட்டிய சேவையே போதிய சான்று. கேள்வி நேரம் சத்தியமூர்த்திக்கு ஸர்வமான்யம். அடிக்கேள்வி ரொம்ப சாதுவாயிருக்கும்; பதில் சொல்ல வேண்டியதுதான் தாமதம், புகை வாணம் போல் புறப்படும் உப கேள்விகள்" என்ற மொழிகள் சத்தியமூர்த்தியின் வாழ்க்கையின் பெரும் காரியத்தை மறக்க முடியாத விதம் செப்புகின்றன. ஆனால், சத்தியமூர்த்தியிடம் வேற்றுமையைக் கொண்டாடியவர்களுக்கு மனதில் தோன்றக் கூடியவைகளையும் நினைத்து ஒரு முத்தாய்ப்பு வைக்கிறார் ஆசிரியர்: "சொந்த சௌகரியங்களுக்கு சம்பாதித்துக் கொள்ள சாவகாசமில்லை. யோக்கியதைக் குறைவில்லை. காலக்கிரமத்தில் நல்ல வரும்படி வந்திருக்கும். கார்த்திருக்கவில்லை. ஊர் வேலையை இழுத்துப் போட்டுக் கொண்டார், அது அவரை இழுத்துக்கொண்டு போய்விட்டது."

“முத்தண்ணுக்களில் மூத்தவர் சிவஸ்வாமி அய்யர்”—சட்டென்று நம்மைத் தூக்கி வாரிப் போடுகின்றன இவ் வார்த்தைகள். மிதவாதத்தின் நிஷ்பிரயோஜனத்தை நினைப்பூட்டும் மொழிகள்தாம்; ஆனால், பெரியவரைக் குறைத்துச் சொல்வதற்கென்று எழுதப்படவில்லை என்பதையும் அங்கேயே காணலாம்: “அகண்ட காவிரியை அகழாகக் கொண்ட ஸ்ரீரங்கம் கோவில் போல் நிற்கிறார். சுற்று முற்றும் வெள்ளம் வழிந்தோடலாம். அவரைத் தீண்டவில்லை......நிதானமே பிரதானம். சாந்தமே சித்தாந்தம்” சிவஸ்வாமி அய்யரைப் புகழ இவைகளை விடவும் அழகிய சொற்கள் வேண்டுமா? வெளிச்சம் நிழலையும் தழுவிக்கொண்டுதான் காணப்படும் இயற்கையில்!

ஜி. ஏ. நடேசனைத் தெரியாதவர்கள் சென்னையில் இருக்க மாட்டார்கள். ஆசிரியருக்கு அதிக வேலைப்பாடுகள் செய்யவேண்டிய அவகாசமுமில்லை. நடேசனை அறிந்தவர்கள் நினைத்தவுடன் சொல்லக்கூடியவை சாதாரணமாய், “பல புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார்; சுயமாக ஒன்றையும் எழுதவில்லை. பல வருஷங்களாக பத்திரிகை நடத்திவருகிறார். பிறர் எழுதியதே பத்திரிகையில் பிரதானம்” என்பவைகளே. ஆசிரியரும் சுபாவமாகவே தம் எண்ணங்களை வெளியிடுகிறார்; சிறந்த புகழ் நடேசனுக்குக் கொடுக்க வேண்டுமானால் அதுவும் இதுவே என்று காட்டுகிறார் பின்னால். “பழகப் பாத்திரமானவர். சிநேகிதத்திற்குக் கட்டுப்பட்டவர்” உலகில் உதார சீலர்களிடமும் இவை சற்று மட்டுத்தான்.

வி. வி. ஸ்ரீநிவாஸையங்காரை ‘முத்தண்ணு’ வென்றழைக்கும் பரம்பரைக்குக் கீழ்வரும் சொற்சித்திரம் அவசியமில்லாவிட்டாலும், ஐயங்காரை வாசகர்களின் முன்னிலையில் நிறுத்த ஆசை ஏற்படுவதும் எழுத்தாளருக்கு சகஜமல்லவா! ஆகையால், ஒருதரம் ஆபாதகேசம் வர்ணித்துவிட்டுத்தான் மேலே சொல்லுகிறார். “முத்தண்ணு என்றால் பத்தாம பசலிப்பேர்வழி என்று நினைக்கவேண்டாம். மாப்பிள்ளை மிடுக்கு அவரிடம் இன்னும் காணலாம். சலவைவேஷ்டி தான் கட்டுவார். அகல ஜரிகை வேஷ்டியில் பிரியம் ஜாஸ்தி. மடிப்பு கலையாத உடுப்பு தரிப்பார். அதன் மேல் படாடோபமான அங்க வஸ்திரம்”-இவை போதும், முத்தண்ணுவை எதிரே கொண்டு வந்து நிறுத்த. ஆனால், மற்றொருவருக்கும் தெரியாத ஒரு ஆத்ம குணத்தைவிட மனதில்லாமல், ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் நினைப்பு மூட்டுவதில் நமக்கெல்லோருக்கும் தனிப் பிரேமைதான் ஐயங்காரிடம் ஏற்படுகிறது. அதாவது மனைவி மரித்த மறுநாள் ஐயங்கார் ‘கிளப்’பில் ஆசிரியரைக் கண்டு, “எனக்கு ஆறுதல் சொல்ல நீ காத்துக்கொண்டிருக்கிறாயோ! எவ்வளவு அகம்பாவம் உனக்கு!” என்று கேட்ட சம்பவத்தைத்தான் குறிக்கின்றார் இங்கு. விவேகி ‘அல்ல’ என்று யார் இனி அவரைக் குறை கூற முடியும்!

ஸர் ஸி. பி. ராமசாமி ஐயரைப்பற்றி எழுதத் தோன்றாத பேனா பிடித்தவர்களும இருப்பார்களா? ஸ்ரீ ஸ்ரீநிவாஸனும் இதற்கு விலக்கல்ல. ஆனால் ‘ஸி. பி.’ என்றதுமே நடையில் ஒரு தனி ‘குஷி’ பிறக்கின்றது. சுபாவம் போய், சற்று அலங்காரம் மேல் ஏறுகிறது. “நாடக மேடையிலே ராஜா வேஷம் தரித்தவர், தான் ராஜா வென்று நினைத்தால் தான் வேஷம் பலிக்கும்” என்று ஒரு நியாயத்தையும் கூறுகிறார். எல்லாம் ‘ஸி. பி.’ யின் யோக ஜாதகத்தின் விளைவு என்பதில் ஆக்ஷேபனை உண்டா? ஆனால் வெல்வட்டு உரையில் தான் கூர்மையான பளபளப்பான கத்தியும் தெரிகிறது. “இகப்பற்றுடன் நின்றுவிட்டார் ‘ஸி. பி.’; பரத்தில் கருத்து சொல்லும் பருவம் எட்டவில்லை.” ‘ஸி. பி.’ க்கு எட்டாததும் ஒன்று உண்டு உலகில் என்று காண்பிக்கவே ஆசிரியருக்கு ஆசைபோலும்!

எதை மறந்தாலும் ‘மித்திரன்’ ஆசிரியர் பாரதியை மறக்க மாட்டார்: ‘அவரை இறந்தவர்களில் சேர்ப்பதா? இறக்காதவர்களில் சேர்ப்பதா?’ நியாயத்திலும் எதிர்பார்க்கவேண்டியதே இது. ஆசிரியர் இரண்டு தடவை அவரை ஞாபகப்படுத்துகிறார். முதலில் போட்ட கும்பிடை மறுமுறை ஞாபகப்படுத்த நின்று சேவித்துவிட்டுச் செல்லும் மனப்பாங்குடன் ‘பாரதி’யைப் புகழ்கிறார் கடைசியில். வாஸ்தவம். தமிழுக்கு “ஊட்டம் அளித்தவரையும், பாஷைக்கு மேனி தந்தவரையும்” வணங்காத தமிழபிமானியும் நம் மத்தியில் இருக்க முடியுமா?

விரைவில் புத்தகம் முடிந்துவிடுகிறது. இன்னும் விஷயங்கள் வேண்டும் எனலாம் சிலர். பானைக்கு ஒரு சோறு போதாது பதம் பார்க்க எனலாம் மற்றவர்கள். ஆசிரியரை நேரில் கண்டவர்கள் “ஏது ஸ்ரீ ஸ்ரீநிவாஸனுக்கு நடையில் இவ்வளவு வேகம் எங்கிருந்து பிறந்தது?” என்றும் சொல்லலாம். ஒன்று மட்டும் நிச்சயம். ஒரு மணி நேரத்திற்குக் குறையாத இன்பத்தை ஊட்டும் புத்தகமொன்றைக் கையில் ஏந்துவதும் அவ்வளவு எளிதல்ல வாசகர்களால். அது கிடைத்தாலே போதும்; சொர்க்கம் கிடைத்த மாதிரித்தான்.

—கே. சந்திரசேகரன்

கிருஷ்ணகுமாரி

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசி:—மேவார் ராஜவம்சத்துக்கு கௌரவம் வேறு இருக்கிறதா! உனது தியாகத்துக்கு ஒரு துளியும் லாயக்கற்றவர்கள் இந்நாட்டு மனிதர்கள். அவரது வீரமும் கௌரவமும் எத்தனையே வருஷங்களுக்குமுன் நசிந்துவிட்டனவே?

கிருஷ்ணகுமாரி:— அம்மா! பத்மினியின் உதாரணத்தை மறந்தாயா?

ராணி:—இல்லை. ஆனால் பத்மினியின் கற்பைக்காப்பதற்காக ஆயிரக்கணக்கான ராஜபுத்திரர்கள் தங்களது உயிரைவிட சித்தமாயிருந்தார்கள். இப்பொழுது உன் அப்பாவுக்கோ அந்த சக்தி இல்லை: உன்னை ஒரு அரசனுக்கு மணம் செய்து கொடுக்க நிச்சயித்து பின்னர் அதை மாற்றி இப்பொழுது உன்னை மகாராஷ்டிர கொள்ளைக்காரனிடமிருந்து ரக்ஷிக்க சக்தியற்று தவிக்கிறார். அந்தோ!

கிருஷ்ணகுமாரி:—அம்மா! வருந்தாதே, நமது குலத்தின் கௌரவத்தை நிலை நிறுத்துவதற்கு என் மானற்றைத் தவிர வேறு மார்க்கமில்லை. அதனால் நமது குலத்துக்கு நன்மையும் நமது பிரஜைகளுக்கு க்ஷேமமும் ஏற்படும். இந்த பிரார்த்தனையுடன் மரணத்தை வரவேற்று நிற்கும் எனக்கு தடை கூறலாமா? எனக்கு விடைகொடு.

[மகாராணாவின் சகோதரன் பிரவேசிக்கிறான். தன் கையிலுள்ள ஒரு பாத்திரத்தை கிருஷ்ணகுமாரியிடம் நீட்டுகிறான்.]

ம. சகோதரன்:—கிருஷ்ணகுமாரி! உன் பிதா இந்த பானத்தை உனக்கு அயக்கும்படி என்னை அனுப்பியிருந்தார். ராஜஸ்தானத்தின் கீர்த்தியையும் மேவார் அரச வம்சத்தின் புகழையும் என்றும் நிலை நிறுத்தும் பொருட்டு நீ செய்ய இசைந்துள்ள ஆத்மதியாகத்தை மெச்சுவதற்கு எனக்கு நாவில்லை. அதற்கு இது சந்தர்ப்பமும் இல்லை. இந்தா இந்த பானத்தை வாங்கிக்கொள். இது உனக்கு அமரத்துவத்தை அளிக்கும் அமிர்தம்.

அரசி:- (பதைபதைப்புடன்) ஐயோ பாவி, விஷத்தைக் கொண்டுவந்திருக்கிறாயே? மகளே! (அழுகிறாள்)

கிருஷ்ணகுமாரி:— பாத்திரத்தை வாங்கிக்கொண்டு அம்மா! இது என்ன பேதமை! கண்ணீரைத் துடைத்துக் கொண்டு எனக்கு விடை கொடு சிற்றப்பா. அப்பாவிடம் என் நமஸ்காரத்தைத் தெரிவியுங்கள். நீங்களும் எனக்கு ஆசி கூறுங்கள்.

சிற்றப்பன்;—கண்மணி எங்கள் குலத்தை வாழ்விக்க வந்த வீரப்பெண்ணே! உன் புகழ் என்றும் மங்காது. (கலங்கிய கண்களுடன் போகிறான்.)

கிருஷ்ணகுமாரி;— அம்மா நேரம் ஆகிறதும அம்பிகே! அம்மாவை அழைத்துக்கொண்டு போ.

ராணி:—மகளே. கிருஷ்ணகுமாரி பானத்தை கையில் வைத்திருப்பதைக் கண்டு இதுவும் விதியின் விபரீதமோ! (மூர்ச்சையாகிறாள்) அம்பிகை பணிமக்கள் உதவியால் அவளை அப்பால் எடுத்துச் செல்கிறாள்.

கிருஷ்ணகுமாரி:- (பானத்தை நோக்கி) உலக இன்ப துன்பங்களினின்று என்னை விடுவிக்கும் மருந்தே! எனக்கு நீ உடல் வேதனை அளிக்கக்கூடாது. மணமகனை எதிர்பார்க்கும் சோபன மங்கையைப் போல் நான் பானத்தை எதிர்பார்க்கிறேன். எங்களது சந்திப்பு இன்பகரமாகவே இருக்க, நீ அருள் புரிய வேண்டும் (துர்க்கையின் படத்தை நீக்கி) அம்பிகே! எனக்கும் தெய்வமே! உன் பாதத்தின் நிழலில் எனக்கு இடமுண்டோ! உனது அருளால் அழியாப் புகழ் பெற்றுள்ள அன்னை பதமினியையும் மற்ற வீரத் தாய் மக்களையும் நான் காண அருள் புரிவாய் (பானத்தை குடிக்கிறாள்.) துர்க்கையை ஸ்மரித்த வண்ணம் சாய்கிறாள். (அயர்வுதான் வேதனை இல்லை. தூக்கம் தான் துக்க மில்லை, மீட்சி தான் மரணம் இல்லை. (தூங்குபவள்போல் அசைவற்று கிடக்கிறாள்.)

நான்காம் காட்சி.

[உதயபுரி தர்பார் மண்டபம் பீம்ஸிங் மந்திரி இருவரும் மௌனமாய் ஆழ்ந்த துக்கத்துடன் உட்கார்ந்திருகிறார்கள். ஸிந்தியாவின் தூதன் பிரவேசம்]

தூதன்:—மகாராணா! என் யஜமானர் செய்தி விடுத்துள்ளார்.

பீம்ஸிங்:—(பற்களைக்கடித்துக் கொண்டே) பாவி! என் மகளைப் பறிகொடுத்துவிட்டேனே! அவன் இன்னும் என்ன விரும்புகிறான்.

தூதன்:—தன் பெண்ணைக் காப்பாற்ற சக்தியில்லாத ஒரு வரது நாட்டின்மீது போர் தொடுப்பது தனக்கு கௌரவமில்லை, என்று என் எஜமானர் தனது சேனையுடன் தனது நாட்டுக்குத் திரும்புகிறார். இதைத் தெரிவிக்கவே தங்களிடம் வந்தேன் (போகிறான்.)

பீம்ஸிங்:—வாஸ்தவம்தானே! அவன் கூறுவதில் தவறு என்ன இருக்கிறது? (தன்னையே இகழ்ந்து கொள்ளுகிறான்.)

(வேலைக்காரன் பிரவேசம்.)

வேலை:—மகாராணா! பராக்ரம ஸிங் தனது ஐந்நூறு வீரர்களுடன் நேற்று மகராஷ்டிரப் படையை எதிர்த்தார் என்றும், அவரும் அவரது ஆட்களும் ஒன்றுக்கு பத்து மடங்குள்ள எதிரிகளால் கடும்போருக்குப் பின் வீர சுவர்க்கத்துக்கு அனுப்பப் பட்டார்களென்றும் செய்தி வந்திருக்கிறது.

மந்திரி:—ராஜபுத்திரியின் ஆத்மா சாந்தியடையும் என்றே நினைக்கிறேன். மேவாரிலுள்ள ஆண் மகட்களது வீரம் இன்னும் மங்கிவிடவில்லை. ராஜபுத்திரியின் மரணத்தால் பிரஜைகளிடை ஏற்பட்ட ஆத்திரத்தையும் மனக்கொதிப்பையும் அறிந்தே ஸிந்தியா விலகிப் போயுள்ளான். கிருஷ்ணகுமாரியின் தியாகம் வீணாகவில்லை. அரசே வருந்தாதீர்கள்.

(காட்சி முடிவு.)

சிறுவர் கதை

★

வன தேவதை

★

“தியாகராஜன்”

ஒரு குடியானவனுக்கு மூன்று பெண்கள் இருந்தனர். அவர்கள் சிறுமிகளாக இருக்கும் போதே தந்தையை இழந்தனர். அவர்களுடைய சிற்றப்பனுடைய வீட்டில் வளர வேண்டியவர்களாயினர். சிற்றப்பன் கல் நெஞ்சுடையவன். அச் சிறுமிகளை பல துன்பங்களுக்கு உள்ளாக்கினான். ஒரு நாளாவது வயிறார, உண்டதே இல்லை.

வழக்கம் போல் சிறுமிகள் வயலில் வேலை செய்து விட்டு, வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். ஒரு வன தேவதை குயில் உருவத்தில் மரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தது. தன் சக்தியால் சிறுமிகளின் வரலாற்றை அறிந்தது. உடனே அவர்களுக்கு உதவி செய்ய எண்ணியது. தன் இனிய குரலில் பாடிக் கொண்டு தத்தித் தத்தி அவர்களுடனே சென்றது. சிறுமிகள் இவ்வதிசய பறவையைப் பார்த்தனர். உடனே சிறிய தமக்கையானவள் அப்பறவையைத் தன்னருகில் அழைத்தாள். உடனே அது அவளுடைய புஜத்தின் மேல் போய் உட்கார்ந்தது. அங்ஙனம் உட்கார்ந்த பறவையை அவள் தன்வீட்டுக்கு எடுத்துச் செல்ல எண்ணம் கொண்டாள்; அவ் வெண்ணத்தை அறிந்த அப்பறவையானது அதற்கு உடன் பட்டதைப் போல் ‘கீச்சு கீச்’சென்று சத்தம் போட்டது. பின்னர் அச் சிறுமிகள் அப் பறவையைத் தங்களுடன் வீட்டுக்கு எடுத்துச் சென்று அதைக் கூட்டில் அடைத்து வைத்தார்கள். அதற்குக் கொட்டைகளும், பழங்களும் கொடுத்தார்கள். அதன் பேச்சையும் பாட்டையும் கேட்டு தங்கள் துயரத்தையும் பசியையும் மறந்தனர்.

இங்ஙனம் நாட்கள் பல சென்றன. பௌர்ணமி தினம்; திடீரென மூத்தவள் படுக்கையை விட்டு எழுந்தாள். அவளைக் கூப்பிட்டதைப் போல் ஒரு சத்தம் கிளம்பியது. அவள் நாற்புறமும் சுற்றிப் பார்த்தாள். கடைசியில் கூண்டிலிருந்து சத்தம் வந்ததென்பதை அவள் அறிந்து கொண்டாள்; கூண்டை நெருங்கினாள். என்ன ஆச்சர்யம்! குயில் பேசத் தொடங்கிற்று. “சிறுமியே! நான் நீ நினைத்திருப்பது போல ஓர் பறவையல்ல; நான் ஒரு வன தேவதை. நான் பௌர்ணமி அன்று தான் பேச முடியும். இன்று என்னை தயவு செய்து விடுதலை செய்து விடு. நான் என்றும் உங்களை மறவேன், நீங்கள் தினந்தோறும் காலையிலும் இரவிலும் காலியான இரண்டு பாண்டங்களை அடுப்பங் கரையில் வைத்திருங்கள். உங்களுடைய பசியாற வேண்டிய சாப்பாட்டைக் கொண்டு வந்து கொடுக்கிறேன்” என்று சொல்லிற்று. அவள் மனமிரங்கி கூண்டைத் திறக்க, வன தேவதையான குயில் பறந்தோடியது.

அப்பெண் அடுப்பங் கரையில் இரண்டு காலியான பாண்டங்களை வைத்து விட்டுப் படுக்கையில் போய்ப் படுத்துக் கொண்டாள். மறுநாள் காலையில் அப்பெண்கள் எழுந்து பறவையைக் காணாமல் திகைத்தார்கள். அவர்களுக்கு அவர்களுடைய தமக்கை நடந்த விஷயங்களையெல்லாம் எடுத்துரைத்தாள். அடுப்பங்கரையில் வைக்கப்பட்டிருந்த பாண்டங்களில் ஆகாரம் நிரம்பியிருந்ததைக் கண்டாள். அதை உண்டு ஆனந்தம் அடைந்தனர். ஒவ்வொரு நாள் காலையிலும், மாலையிலும் அப்பாண்டங்களில் ஆகாரம் வைக்கப்பட்டிருந்தது. இங்ஙனமாகவே அவர்கள் சந்தோஷமாகக் காலங்கழித்து வரலாயினர். குயில் இரவில் வந்து சிறுமிகளைக் கண்டு சென்று கொண்டிருந்தது.

நாளா வட்டத்தில் இவ்விஷயம் அவர்களுடைய சிற்றப்பன் காதுக்கும் எட்டியது. அவன் அக்கிராமத்தைச் சேர்ந்தவர்களை யெல்லாம் கேட்டுப் பார்த்தான். அவர்களால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. அவன் சிறுமிகளைக் கூப்பிட்டு பயமுறுத்திக் கேட்டான். அவர்கள் ஒரு பக்ஷி தங்களுக்குச் சாப்பாடு அளிப்பதாகச் சொன்னார்கள்.

அவர்கள் கூறியதைக் கேட்ட அந்த சிற்றப்பன் ஒரு வேலைக்காரனை நியமித்து அப் பக்ஷியைக் கவனித்து, அது வரும்போது அதைப் பிடித்துத் தன்னிடத்தில் கொண்டு வந்து கொடுக்கும்படியாகக் கட்டளையிட்டான். ஒரு நாள் குயில் பாத்திரங்களில் சாப்பாடு நிரப்ப, சிறுமிகள் இல்லாத போது வந்தது. வேலைக்காரனும் அது தான் தருணம் என்றெண்ணி அதனைப் பிடித்து தன் யஜமானனிடம் கொடுத்தான்.

சிற்றப்பன் அதை ஒரு கூண்டில் அடைத்து வைத்தான். பின்னர் அடுப்பங் கரையில் இரண்டு காலியான பாண்டங்களை வைத்தான். மறுநாள் காலையில் அவன் எழுந்து பார்க்கும்போது அப்பானைகள் இரண்டும் காலியாகவே இருந்தன. அதன் மேல் அவனுக்கு அளவு கடந்த கோபம் உண்டாயிற்று. உடனே கூண்டைத் திறந்து அதிலிருந்த பறவையை வெளியே எடுத்து கழுத்தை முறித்து விட்டான். பின்னர் அதைச் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு அதனுடைய எலும்புகளையெல்லாம் அவன் வெளியில் எடுத்து எறிந்து விட்டான்.

வேலைக்காரன் குயிலைப் பிடித்துப் போன தகவலைக் கேட்டச் சிறுமிகள் சிற்றப்பனிடம் சென்று அப் பறவையைத் தங்களிடம் கொடுத்து விடும்படி மன்றாடினர். சிற்றப்பன் தான் அதைக் கொன்று புசித்து விட்டதாகவும், அதன் எலும்புகளை தூர எறிந்து விட்டதாகவும் தெரிவித்தான். சிறுமிகள் இதைக் கேட்டு மனம் துடித்தனர். என்ன செய்வார்கள் பாவம். தமக்கை பக்ஷிகளின் எலும்புகளையெல்லாம் சேர்த்து வாரி எடுத்துக் கொண்டாள். பின்னர் அதைத் தாங்கள் வசித்திருந்த வீட்டின் தோட்டத்தில் பள்ளம் தோண்டிப் புதைத்து வைத்தார்கள்.

மறுநாள் காலையில் சகோதரிகள் படுக்கையை விட்டெழுந்திருந்து புறக்கடைக்குச் சென்றார்கள். அங்கே அவர்கள் பெரியதொரு அழகான மரமானது தாங்கள் எலும்பைப் புதைத்து வைத்த இடத்தில் இருக்கக் கண்டு ஆச்சர்யமுற்றார்கள். அம் மரத்தில் பூவும், பிஞ்சுகளும், பழங்களும் நிறைந்திருந்தன. பெண்கள் அம் மரத்தின் மீதேறிப் பழங்களைப் பறித்து தின்னவாரம்பித்தார்கள். பழங்களைப் பறிக்கும் போது அப் பழங்களின் உள்ளிருந்து “கீச்சு கீச்” சென்ற சத்தமொன்று அவர்களுக்குக் கேட்டது.

சகோதரிகள் மூவரும் தினந்தோறும் தோட்டத்திற்குச் சென்று அம்மரத்தின் பழங்களைப் பறித்துத் தின்று சந்தோஷமாக விருந்தார்கள். இப்படியிருந்துகொண்டிருக்கையில், ஒரு நாள் அவர்களில் ஒருத்தி அம்மரத்திலிருந்த மொக்கொன்றைப் பறித்துப் பார்த்தாள். அதில் அவள் கண்ணைக் கவர்ந்து செல்லக்கூடிய முத்தொன்று இருக்கக் கண்டாள். உடனே அவள் சந்தோஷ காரணமாய்க் கூச்சலிட்டாள். மற்ற இரண்டு சகோதரிகளும் மொக்குகளைக் கொய்தார்கள். அவைகளிலும் மேற் கூறிய விதமாகவே முத்துக்கள் இருக்கக் கண்டு, அவர்கள் அனைவரும் கரைகடந்த ஆனந்தத்தில் ஆழ்ந்தார்கள். அன்று முதல் சகோதரிகள் தினந்தோறும் மூன்று முத்துக்களைக் கண்டெடுத்தார்கள். நாளாவட்டத்தில் அம் முத்துக்களைக் கொண்டு அவர்கள் பெருத்த பணக்காரர்களாகி விட்டார்கள். அவர்கள் மிகவும் பணக்காரர்களான பிற்பாடு அம் மரம் பட்டுப் போய் விட்டது. அவர்கள் தக்க வயதில் நல்ல ராஜகுமாரர்களைக் கலியாணம் செய்து கொண்டு குழந்தை குட்டிகளுடன் ஆனந்தமாய்க் காலத்தைக் கழித்து வந்தார்கள். இதிலிருந்து துன்பத்திற்குப் பின் இன்பம் உண்டென்று தெரிகிறதல்லவா.!